padippakam



தமிழ்மன்ற வெளியீடு

# தமிழ்நாதம்

நாதம் – 8 ஒலி – 1

படிப்பகம்

padippakam

அன்பார்ந்த தமிழ்மக்களே,

நாடு விட்டு நாடு வந்தாலும் நாம் நலமுடனும் நல்லாரோக்கியத்துடனு இருந்தாற்தான் எமது இலட்சியங்கள் அனைத்தையும் நிறைவேற் முடியும்.

ஆம். சுவர் இருந்தாற்தான் சித்திரம் வரைய முடியும். இவற்றை கருத்திற்கொண்டு உங்கள் பிராங்பேர்ட் தமிழ்மன்றம் இந்த ஆண்டு

உதைபந்தாட்டம்
துடுப்பெடுத்தாடுதல்





கரப்பந்தாட்டம்
மென்பந்தாட்டம்



போன்ற
விளையாட்டுப்
பயிற்சிகளை ஒழுங்கு செய்யவுள்ளது.

மக்களாகிய உங்கள் கருத்துகளையும், உங்களில் எத்தனை பேர் இந் விளையாட்டுகளிற் பங்கு பெற விரும்புகிறீர்கள் என்பதையும் அறிந் அதற்கேற்ப விளையாட்டுகளை ஒழுங்கு செய்யலாம் என செயற்கு முடிவு செய்துள்ளது. இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உங்க ஆரோக்கியத்தையும் விருப்பத்தையும் பூர்த்தி செய்ய மன் விளையாட்டுத்துறையினருடன் தொடர்புகொள்ளுங்கள்.

எதிர்வரும் ஜூலை மாதம் நாலாம் திகதி ஐரோப்பிய ரீதியிலா உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியும், அடுத்த நாளான ஜூலை ஐந்தாம் திக மெய்வல்லுனர் போட்டியும், அதே மாதம் 11ம், 12ம் திகதிகளில் பிராங்பேர் சுப்பர் கப் கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் பிராங்பேர்ட் நகரத்தி

Sonderhausen str 9-11 இலுள்
SG Westend Stadionஇ

உங்கள் தமிழ்மன்றத்தினரால் நடத்திவைக்கப்படும் என் பெருமையுடன் அறியத்தருகிறோம்.

தொடர்புகளுக்கு:-

திரு. பே. பாலராஜா

திரு. செல்வரத்தினம்

திரு. முரளீதரன்

படிப்பகம்

padippakam

தமிழ்மன்றவெளியீடு

# தமிழ்நாதம்

சுறவம் – கும்பம்
திருவள்ளுவர் ஆண்டு 2029

நாதம் 8 தை – மாசி 1998 ஒலி 1

வாழ்த்து
இது உங்கள் பக்கம்
இது உங்கள் மன்றம்
எண்ண அலைகளிலே நீ! (2)
குழந்தையோ குழந்தை
சிறுவர் பூங்கா
ஊருலாத்தியார்
பனிக்காலம் நன்று

மதுரப்பா!
காதலர் நாள்
கரை தேடும் அலைகள்!
தெய்வம்
வைரவி
பற்சிகிச்சை....
அறுவை
The Thamil Connection!

அறுவடை
(மன்ற நிகழ்வு, மிஸ்டர் ரவிக்குமார், இளைஞன் வெளியீடு, பூவிதழ்,
வித்தியாச்மான விவாத மேடை!)

இன்னும் பற்பல..........

ஆசிரியர் குழு
திரு. ஆ. பூபதிபாலவடிவேற்கரன்.
திருமதி. கிருபாநிதி சற்குணநாதன்
திரு. பாபு

- ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கதாரர்களே பொறுப்புடையவர்கள்
- பெயர் இல்லாத ஆக்கங்களுக்கு ஆசிரியரே பொறுப்பு
- ஆக்கங்களின் கருத்து மாறுபடாமல் அதைத் திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு முழு உரிமையுண்டு

தொடர்புகளுக்கு...
Editor
"TAMILNATHAM,,
Postfach 102125
60021 Frankfurt/M
Germany

படிப்பகம்

padippakam



# தமிழ்நாதம்
# வளர்ந்து வாழ்க!

தமிழீழத்தில் விதை எடுத்து
ஜெர்மன் மண்ணில் விதை போட்டுத்
தங்கத் தமிழ் மன்றத்தின் தலைக்குழந்தையாய்த்
தமிழ் நாதம் எனும் பெயர் எடுத்துத்
தேன் தமிழ்க் குரல் கொடுத்து
மூன்றாம் பிறை அழகெடுத்து
முத்தான கருத்துக்களை முன்வைத்து
மூவேந்தர் தமிழ் வீரம் எடுத்து
முன்னோர்கள் வழிநடந்து
முழுநிலவு போல் முகம் படைத்து
நீதி எனும் சொல் வாள் எடுத்து
நிமிர்ந்த நடை போட்டுத்
தவறு செய்யும் தமிழர்களைத் தட்டிக் கேட்டுத்
தரமான தமிழர்களைத் தட்டிக் கொடுத்துத்
தமிழ்மன்றத்தின் கடமைகளைத் தலைமேற்கொண்டு
தரமான பத்திரிகையெனப் பெயர் எடுத்துத்
தரணி எங்கும் தமிழர் கைகளிலே பவனி வந்து
தன்மானத் தமிழருக்காய்க் குரல் கொடுத்துப்
பல்லாண்டு காலம் பாரினிலே பவனிவரப்
பைந்தமிழின் பாசத்தோடு 1998ல் வாழ்த்துகிறேன்.

பரிஸிலிருந்து எஸ். எச்.

## *விதி*

கண்டனக்கூட்டங்கள் கதவடைப்புகள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்
இவை மூலம் காந்தீயத்தில் இணைந்தேன்
கிடைத்த பெயரோ அகிம்சாவாதி
காலங்கள் மாறியது
பகுத்தறிவுக் கொள்கைகள் சிவப்புப் புத்தகங்கள்
சமத்துவப் பேச்சுகள் இவற்றினால் சிந்தனாவாதி ஆக்கப்படடே
வரலாற்றுக் கட்டாயத்தால்
மோட்டார்கள். கைக்குண்டுகள், துப்பாக்கிகளுடன்
போராளியாக வலம் வந்தேன்
இன்றோ கதா காலட்சேபங்கள் ஆன்மீகச் சொற்பொழிவுகள்
ஆலயவழிபாடுகள் பக்திப் பாடல்கள் பாடிடும்
ஆன்மீகவாதியாய் நிற்கின்றேன்
நாளை என் விதி எப்படியோ?

பாபு - டார்ம்ஸ்ட



படிப்பகம்

padippakam






☺ தமிழ்வானம் பொழிகின்ற மழையாகுவேன் கவிதை நன்றாக இருந்தது. பாடசாலை மாணவியா எழுதியிருந்தார்? பண்பட்ட கவிஞரின் படைப்புப் போலிருந்தது! பாராட்டுகள். ஆக்கதாரரின் படத்தைத் தான் தெளிவாக வெளியிடவில்லை. மோகன். மூல்கைம்.

☹ எப்போதுமே கடைசி நேர வேலை தானா? சில இடங்களில் அதே வரிகள் திரும்பித் திரும்பி வருகின்றன. எழுத்துப் பிழைகள் அதிகம். சில ஆக்கங்களில் பகுதிகளைக் காணவில்லை சி.சி. குறொஸ்கெரோ.

☺ கவிதைச்சோலை, கவிதைப்பூங்கா, கவிதைப்பக்கம் என்று தூள்படுத்திவிட்டீர்கள்! அதைவிட மதுரப்பா, நத்தார் கவிதை, யார் பயங்கரவாதி என்று கவிதைச் சிறப்பிதழ் தான். ராணி, நீடர் ஓல்ம்.

☺ முன்பக்கத்திலேயே உள்ளே என்று பொருளடக்கம் தருவது சிறப்புக்குரியது.
பா.பா. பிராங்பேர்ட்.

☹ தமிழருடைய ஆண்டு மாதம்........ என்கிற கட்டுரை வேறு எங்கோ எப்போதோ வாசித்ததாக ஒரு ஞாபகம் வருகிறது! கே.மா. ஹாம்.

☹ நிறைய விடயங்கள் தந்து, நிறைய எழுத்துப் பிழைகளையும் விட்டிருக்கிறீர்களே!
எஸ்.எஸ். பிராங்பேர்ட்.

☹ கணணிக் கவனயீனப் பிழைகள் நிறைய. ஆறுதலாகச் செய்யேலாதா?
றெஜி. கின்ஸ்கைம்.

☺ நானும் ரசிக்கக் கூடிய விதத்தில் ராமாயண ரசத்தைத் தந்த திருமதி. செல்வராணிக்கு நன்றி கே.கே. பிராங்பேர்ட்

☺ நித்யன் கொஞ்சம் திருந்தலாம் என்று சொல்கிறார். நாம் திருந்த நிறைய இருக்கிறது. சத்யன். பிராங்பேர்ட்

☺ எழுத்துப் பிழைகளைத் தவிர்த்தால் புலம் பெயர்ந்த தமிழ்ச் சஞ்சிகைகளுள் தரமான சஞ்சிகையாகத் தமிழ்நாதம் தான் முதலிடம் வகிக்கும். வி.நா. கேளின்

☹ எழுத்துக்களைச் சிறிதாக்கி கண்களைக் கொடுமைப்படுத்தி விட்டீர்கள்.
ஆர். எஸ். பிராங்பேர்ட்

☺ அட்டைப்படம் அழகாக இருந்தது. அதுவும் கூடக் கணணிவடிவமைப்புத்தானா?
எஸ்.பீ. பிராங்பேர்ட்.

☹ ஐம்புலன்களை ஐம்பொறிகளாக்கிவிட்டீர்கள்! பலராமனை விட்டுவிட்டதால் ஒன் அவதாரங்களைத் தான் தசாவாதாரம் என்று..........எண்ணத்தெரியாதா? ர.வி.

☹ நகைச்சுவை விடயங்கள் குறைவு என்பது வருத்தத்துக்குரியது!
வி.ெ

 படிப்பகம்

padippakam



☹ தமிழ்நாதம் ஆண்டுமலரில் "யார் முட்டாள்கள்? நாமா அல்லது நம் மூதாதையரா?" என்ற (பின்) தலைப்பிலான கருத்தை வாசித்தேன். காலைக் குளிப்பு நல்லது என்று கூறிய அதே மூதாதையரே குளித்த பின் வெளியே குளிருக்குள் போனால் சளி பிடிக்கும் என்றும் கூறியுள்ளனர். பெரும்பாலும் கோடைகாலத்திற் கூட, குளிர்ந்த காலைப் பொழுதுகளைக் கொண்ட ஐரோப்பாவில் நம் முன்னோர் சொன்ன "குளித்த பின் குளிருக்குள் சென்றால் சளி பிடிக்கும்" என்ற புத்திமதியைக் கருத்திற் கொண்டே நாம் பிள்ளைகளைக் காலையில் குளிக்க வார்ப்பதில்லை.

எமது சமூகத்தவர் பெரும்பாலும் எமது கலாச்சாரம், வசதி, காலநிலை என்பவற்றுக்கு ஏற்றவாறு தமக்கென்றொரு பாணியில் வாழ்கிறார்கள். ஐரோப்பாவில் வாழ்கிறோம் என்பதற்காக ஐரோப்பியர்களைப் பார்த்துத் தமது பழக்கவழக்கங்களை மாற்றவில்லை. இதனைத் தெளிவாக ஆராயாமல் முட்டாள் என்ற வார்த்தையைப் பாவிப்பது முறையல்ல!

சகி, வீஸ்பாடன்

(உங்கள் பெயர்கள் சில இடங்களில் விடப்பட்டு முதலெழுத்துக்கள் அல்லது நகரங்கள் மாற்றப்பட்டு வெளியிடப்பட்டிருந்தாலும் உங்கள் கருத்துகள் தான் இவை. கடிதம் மூலம் மட்டும் என்றில்லாமல் நேரிலும் அல்லது தொலைபேசியிலும் நீங்கள் முன்வைத்த கருத்துகளே இவை. உங்கள் கருத்துகள் தமிழ்நாதம் வளர, வளம் பெற உதவும். அவை சுடச்சுட அமைந்தாலும் அச் சூடு தமிழ்நாதத்திலும் மன்றத்திலும் நீங்கள் கொண்ட பற்றினாற் கொழுந்துவிட்டு எரிகிறது என்பதை உணர்ந்து உங்கள் சஞ்சிகை மேலும் சிறக்க முயற்சிக்கும்.)



## சில நேரங்களில் சில மனிதர்கள்..........

சிரசர்

இங்கே (ஜேர்மனியில்) அந்த நண்பருடன் ஏழெட்டு ஆண்டுகாலமாக நட்பு. பல ஆண்டுகள் ஒன்றாகவே இருந்திருக்கிறோம். அந் நண்பர் என்னுடன் இருந்த வேளைகளில் சீதனக் கொடுமை பற்றியும், சீதன எதிர்ப்பு சம்பந்தமான விடயங்களையும் கதைப்பதுண்டு. சில் மாதங்களுக்கு முன்னர் நண்பர் இலங்கை சென்று திருமணம் செய்து கொண்டு மீண்டும் இங்கே வந்தார்.

அவர் வந்தவுடன் நண்பன் என்ற முறையில் அவரது புதிய வாழ்க்கையையு இலங்கைப் புதினங்களையும் விசாரிக்கச் சென்றிருந்தேன். எத்தனையோ விடயங்களை கதைத்த பின்பு நண்பர் தான் சீதனம் வாங்கித் திருமணம் செய்ததாகக் கூறினா நானோ வியப்புடன், நீர் தானே இவையெல்லாவற்றுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனி எதற்காக இப்படிச் செய்தீர்? என்று கேட்டேன்.

நண்பர் சொன்ன பதில் என்னைத் தூக்கிவாரிப் போட்டது.

"அப்படித்தான் நானும் வேண்டாம் என்று சொன்னனான். ஆனால் சீதனம் வாங்காம நான் கலியாணம் கட்டினால் என்னில் ஏதோ குறை இருக்கும் என் சந்தேகப்படுவினம். அதுதான் சீதனம் வாங்கினேன்."

இது தானா நரித்தனம்



படிப்பகம்

padippakam



## இது உங்கள் தமிழ் மன்றம்

1997ம் ஆண்டுக்கான பிராங்போர்ட் தமிழ்மன்றத்தின் ஆண்டிறுதிப் பொதுக்கூட்டம், 1998ம் ஆண்டின் முதலாம் மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டம் அமர்க்களம் எதுவுமில்லாமல் மிகவும் சிறப்பாக நடந்தது. தலைவருரை, செயலாளர் அறிக்கை, பொருளாளரின் நிதியறிக்கை என்பவற்றைத் தொடர்ந்து கேள்விகளும் பதில்களும் மிகவும் நாகரிகமான முறையில் பரிமாறப்பட்டன.

- முற்றும் முழுதான இசை நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட வேண்டும்
- முத்தமிழ் விழாவொன்று நடத்தித் தமிழ்க்கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும்.
- தரமான நவீன ஒலிபரப்புச் சாதனங்கள் மன்றத்துக்கென வாங்கப்பட வேண்டும்.

என்ற கருத்துகள் அங்கத்தவர்களால் முன் வைக்கப்பட்டன. மன்றத்தின் பொருளாதார நிலையை விளக்கி மன்றத்துக்கென ஒரு பணியகம், மன்றத்துக்கான ஒரு மண்டபம் என்பனவற்றுக்கு முதலிடம் வழங்கவேண்டியுள்ள இன்றைய நிலையை எடுத்தியம்பிய இடைக்காலச் செயலாளர் திரு. த. கிருஷ்ணதாஸ் மேலதிக அங்கத்தவர்களைச் சேர்க்க உதவுமாறு அனைத்து அங்கத்தவர்களுக்கும் அறைகூவல் விடுத்தார். மன்றத்தின் வளர்ச்சிக்காகவும் மன்றத்தின் நன்மைக்காகவும் ஒற்றுமையுடன் செயற்படுவோம் என்று உரையாற்றிய செயற்குழு உறுப்பினர் திரு. கே. கேதீஸ்வரன் மன்றம் தனது வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமான ஒன்றாக இருந்து வருகிறது என்பதை எடுத்துரைத்தார். உபதலைவர் திரு. ச. சிவசுப்பிரமணியம் மன்றத்தின் வளர்ச்சிக்கும் நற்பணிக்கும் பணியாற்ற முன்வரும்படி அங்கத்தவர்களைக் கேட்டுக் கொண்டார்.

அதன் பிறகு முன்னரே தீர்மானிக்கப்பட்டபடி கடந்த ஆண்டு 7ம் மாதம் பதவி ஏற்றுக் கொண்ட இந்த இடைக்காலச் செயற்குழு கலைக்கப்பட்டு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான செயற்குழுவுக்கான தெரிவும் இடம் பெற்றது. மிகவும் அமைதியான முறையில் ஒரு சகோதரத்துவ ஒற்றுமையுடன் இத் தேர்தல் நடந்தேறியது மகிழ்ச்சிக்குரியதாக இருந்தது. வாக்களிக்கும் உரிமையுடைய அங்கத்தவர்கள் 51 பேரும், புதிய அங்கத்தவர்களான இன்னும் பலரும், பார்வையாளராகச் சிலரும், வந்து இன்றைய பொதுக்கூட்டத்தையும் தேர்தலையும் சிறப்பாக நடத்தி முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்கள். மன்றச் செயற்குழுவின் தலைவரிலிருந்து மொத்தம் பதினொரு செயற்குழு அங்கத்தவர்கள் வரை போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டது மன்றத்தின் ஒற்றுமையைக் காட்டுகிறது என்றே கருதப்படவேண்டும். (அல்லது இவர்கள் முறியட்டும் எனக்கென்ன என்று மற்றவர்கள் போட்டி போடாமல் இருந்துவிட்டார்களோ!)

மன்றத்தின் காப்பாளராக வழமையாக மூவரே தெரியப்படுவர் என்றாலும் ஐவரை முன்மொழிந்து வாக்களிப்பு நடந்தது, மன்றத்தின் நல்வளர்ச்சியில் இந்த ஐவரும் கொண்டுள்ள அக்கறையை அங்கத்தவர்கள் எவ்வளவுக்குப் பாராட்டுகிறார்கள் என்பதனையும் அவர்களிடம் மக்கள் வைத்திருக்கும் விசுவாசத்தையும் எடுத்துக்



படிப்பகம்

padippakam



காட்டியது. மூவரை மட்டுமே தெரிந்தெடுக்கக் கூடியதாக இருந்தது ஒரு விதத் துரதிர்ஸ்டமே!

செயற்குழுவுக்குள் உள்ளடங்காத ஆனால் மன்றத்தின் மிக முக்கிய பணிகளு ஒன்றான கணக்குப்பரிசோதகர் பொறுப்புக்கு மீண்டும் திரு. சி. சற்குணநா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# இதோ!
# 1998/1999 ஆண்டுகளுக்கான
# தமிழ்மன்றச் செயற்குழு

## மதிப்புக்குரிய காப்பாளர்கள்

திரு. மா. விக்ரமன்

திரு. ஜெ. செல்வகுமார்

திரு. சி. புஸ்பநாதன்.

| | |
|---|---|
| தலைவர்: | திரு. பா. பாலசுப்ரமணியம் |
| செயலாளர்: | திரு. த. கிருஷ்ணதாஸ் |
| பொருளாளர்: | திரு. சி. ரவிசங்கர் |
| உபதலைவர்: | திரு. ஐ. சொர்ணலிங்கம் |
| உபசெயலாளர்: | திரு. க. கேதீஸ்வரன் |
| விளையாட்டுப் பொறுப்பாளர்: | திரு. பே. பாலராஜா |
| பத்திராதிபர்: | திரு. ஆ. பூபதிபாலவடிவேற்கரன் |
| கணணிப் பொறுப்பாளர்: | திரு. இ. யசோதரன் |
| கலைப் பொறுப்பாளர்: | திரு. வை. வரதராசா |
| இசைப் பொறுப்பாளர்: | திரு. பொ. லோகேந்திரன் |
| ஒலியமைப்பு: | திரு. நா. தில்லைநாதன் |
| சிற்றுண்டிப் பொறுப்பாளர்: | திரு. சி. நித்தியானந்தன் |
| | திரு. க. மகேந்திரன் |
| | திரு. வே. சச்சிதானந்தன் |
| | திரு. க. பாலேந்திரன் |

ஒவ்வொரு துறைக்குமான உபகுழுவொன்று அவ்வத்துறைப் பொறுப்பாளரால் நியமிக்கப்பட்டு ஒவ்வொரு துறையும் உங்கள் பணியில் சிறப்பாக இயங்கும் என்று நம்புவோமாக!



படிப்பகம்

padippakam



# எண்ண அலைகளிலே நீ!

வன்னியூர் மலர்

என் அன்பின் செல்வா,

உனக்கு நான் கடிதம் எழுதி ஒரு வாரத்தின் பின் எனக்குக் கொடுக்கப்பட்ட தனியறையில் இருந்து வெளியேறி வெளி இடங்களைப் பார்ப்பதற்கு முற்பட்டேன். எனக்கு ஜேர்மன் மொழி தெரியாததினாலே அடுத்த அறையிலுள்ள பெண்களுடன் சேர்ந்து புறப்பட்டேன். அழகான கடற்கரைகள். பூங்காக்கள், மாபெரிய தேவாலயங்கள், கல்லூரிகள், வைத்தியசாலைகள், விற்பனை நிலையங்கள், உணவு விடுதிகள், பாதையோரத்திலே பூத்துக்குலுங்கும் பூக்கள்... என்று இவையெல்லாவற்றையும் விட, நடைபாதையின் தூய்மை என்பன என்னை மிகவும் கவர்ந்தவை. என்னென்ன வகைகளில் தங்கள் நாட்டை அழகுபடுத்த முடியுமோ அவ்வளவிற்கு அழகு படுத்தியுள்ளார்கள் ஜேர்மன் வாழ் மக்கள்.

நாட்கள் செல்லச் செல்ல இங்கே இருக்கும் சகோதர சகோதரிகள் என்னுடன் அன்பாகப் பழகத் தொடங்கி விட்டனர். நாளாந்தம் எனது தேவைகளை நானே தனித்து நின்று பூர்த்தி செய்யும் அளவிற்குப் பிழக்கப்பட்டு விட்டேன். மாலை ஏழு மணிக்கெல்லாம் அறையில் முடங்கி விடுவேன். என்னுடலில் ஏற்படும் நோக்கள், மனவேதனைகள் எல்லாவற்றையும் பிரார்த்தனை நேரத்தில் இறைவனுடன் பகிர்ந்துகொள்வேன்.

இப்பொழுது இங்கே பனிகொட்டும் காலம் ஆதலால் எங்கும் எந்நேரமும் கடுமையான குளிர் காலையில் நித்திரை விட்டு எழும்ப மனம் இருக்காது. பல்லுக்கிடுகிடுக்கும். சாளரங்களின் வெளியே பார்த்தால் மரங்களின் மேல் பனிக்கட்டிகள் எல்லாம் வெள்ளைப் பூக்கள் பூத்திருப்பது போன்று இருக்கும்.

பாதையில் செல்லும் சனங்களின் நடமாட்டம், வாகனங்களின் ஓசை என்னைக் கட்டிலைவிட்டெழும்பச் செய்து விடும். காலைக்கடன்களை முடித்துக் கொண்டு சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு, பாரதியாரின் கவிதைக் கொத்துடன் திரும்பவும் கட்டிலில் அமர்ந்து அதில் லயித்துவிடுவேன். வழக்கம்போல் ஒரு நாள் புத்தகத்தைத் திறந்தேன், அதில்

காக்கைச் சிறகினிலே நந்தலாலா– உந்தன்
கரியமுகம் தோன்றுதையே நந்தலாலா
பார்க்கும் இடத்திலெல்லாம் நந்தலாலா– உந்தன்
பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா

என்ற கவிதை கண்ணிற்பட்டது. கறுப்பு நிறத்திற்குப் பாரதி எவ்வளவு தனித்துவம் கொடுத்துள்ளார் என்பதை நினைத்துப் பார்த்தேன். அந்தப் பாரதியே கறுப்பைப் பெருமைப் படுத்தும் போது நான் உன்னைக் காதலித்ததைப் பெருமையாக எண்ணுகிறேன். எத்தனையோ பெண்கள் அந்தக் கண்ணனுக்காகத் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்தார்கள். எத்தனை கோபியர்கள் அவன் பின்னே சென்றார்கள். அப்படியிருக்க நான் மட்டும் உன் கருமையில் மயங்கக் கூடாதா?

நான் என்ன ரம்பையா? ஊர்வசியா? அல்லது மேனகையா? சொல்லு செல்வா, உன் ஏழ்மையையும், கருமையையும் காட்டித்தானே என் பெற்றோர்கள் உன்னை ஏளனம் செய்தார்கள். தலைமயிர் வெளுத்துவிட்டால் கறுப்பு வர்ணம்பூசி அழகு படுத்துகிறோம், புருவமயிர் கொட்டிவிட்டால் கறுப்பு வர்ணம் பூசி அழகு படுத்துகிறோம், குழந்தைக்குத் திருஷ்டிபட்டுவிடக் கூடாதே என்று கறுப்புப் பொட்டு வைக்கிறோம். கறுத்தக் கண்ணுள்ளவர்களைப் பார்த்து அழகான கண் என்று சொல்கிறோம். ஆனால் உயிருள்ள



படிப்பகம்

padippakam



மனிதன் மட்டும் கறுப்பாய் இருக்கக் கூடாது. அவனை வெறுக்கிறோம். என்னென் சொல்வேன் இம்மானிட சமுதாயத்தை, இவற்றையெல்லாம் யோசித்துப்பார்க்கும் பொழுது சா குலம், நிறம், பணம் பார்க்கும் என் பெற்றோருக்கு நான் ஏன் மகளாகப் பிறந்தேன் என் என்னையே நொந்து கொள்கிறேன்.

செல்வா, உன் பாடசாலை வாழ்க்கை எப்படிப்போகிறது. எல்லாம எத்தனை ஆசிரிய ஆசிரியைகள் உன் பாடசாலையில்? உன்வகுப்பில் எத்தனை மாண மாணவிகள்? எந்த வகுப்பிற்கு நீ ஆசிரியர் என்பதெல்லாம் அறிய எனக்கு மிகுந்த ஆ பொழுதுபோக்கிற்காக வேறு என்ன செய்கிறாய். நான் இங்கே வந்ததின் பின் என்னைப்ப யாராவது உன்னிடம் விசாரித்தார்களா? எனது நண்பிகளான பூங்கோதை, பூர்ணிமா, மல்லி ராதா ஆகியோர் பற்றி எழுது.

அடுத்த மாதத் தொடக்கத்தில் இருந்து ஜேர்மன்மொழி படிப்பத ஒழுங்கு செய்துள்ளார்கள். நான் அதிற் சேர்ந்து பயிற்சி பெற எண்ணியுள்ளேன். ஆங் எழுத்துக்கள் தான் இந்த மொழியிலும். அதை உச்சரிக்கும் விதந்தான் வித்தியாசம். ஓர என்னால் கற்க முடியும் என்று எண்ணுகிறேன்.

எங்கள் தமிழ் மக்கள் நிலையென்ன என்பதை அறிய ஆவ உள்ளேன். அவற்றை விபரமாக அறியத்தரவும்.

என் அன்பே செல்வா, உன் உடல், பொருள், ஆவி, கிரிகை அனைத்தையும் இறைவன்பால் ஒப்படைத்து என்றும் உன்னைக் காக்க அவனை வேவ உன்னிடம் விடைபெறும்

உன் அன்பு

ரா

# பூவே புவியை மறந்தாயோ? புனிதன் பாதம் இணைந்தாயோ!

## மதுஷா இந்திரன்

தோற்றம்: 26.10.1996 மறைவு: 19.02.19

மகள் மதுஷாவை இழந்து துடிக்கும் பாட்கம்பேர்க் நகரைச் சேர்ந்த இந்திர குடும்பத்தினர்க்கும் ஏனைய உறவினர்க்கும் மன அமைதி கிடைக்கவும் குழ ஆத்மா சாந்தி அடையவும் பிராங்பேர்ட் தமிழ்மன்றம் ஆண்டவனைப் பிரார்த் நிற்கிறது.



படிப்பகம்

# குழந்தை மொழி

குழந்தைகள் மாசு, மறு அற்றவர்கள். அவர்களுடைய துடிப்பு அசட்டுத்தனம், புத்திசாலித்தனம் எல்லாமே நம் மனதைக் கவரும் விடயங்களாகும். உங்களுடைய அல்லது உங்களுக்குத் தெரிந்த குழந்தைகளைப் பற்றி இப் பகுதிக்கான விடயதானம் வரவேற்கப்படுகிறது.

☞ நாய் வளர்க்கும் ஐரோப்பியர் வீட்டில் குழந்தை பராமரிப்பது என் பகுதிநேரவேலை. அந்த வீட்டுக்காரியின் நான்கு வயது மகன் நாயுடனே ஒட்டி உறவாடுவது எனக்குப் பழக்கமாய் இருந்தாலும், ஒரு நாள் அந்தக் குழந்தை தனது விரலை நாயின் மூக்குக்குள் விட்டுத் துழாவுவதைப் பார்க்க எனக்கு அருவருப்பாக இருந்தது. அருவருப்பான செயல் என்று சொன்னால் நாயையும் ஒரு குழந்தையாக நினைக்கும் அந்த ஐரோப்பியக் குழந்தை அதை ஏற்றுக் கொள்ளாது என்று பட்டபடியால் நாய்க்கு மூக்கு நோகும் விரலை எடு என்று நான் கூறியது புத்திசாலித்தனமானது என்று தான் நான் முதலில் நினைத்தேன். விரலை எடுத்த அந்தக் குழந்தையோ அந்த விரலை அப்படியே தன் மூக்குக்குள் விட்டுத் துழாவிப் பார்த்துவிட்டு எனக்கே நோகவில்லை நாய்க்கு நோகுமா? என்ற போது என் முட்டாள்தனத்தை உணர்ந்துகொண்டது மட்டுமில்லாமல் அடுத்த சில நிமிடங்களுக்கு வயிற்றைப் பிரட்டப்பிரட்ட சத்தியும் எடுத்தேன்.

லண்டன் – சுந்தரி

☞ திருமணவிழாவொன்றின் போது பொழுது போகாத சில இளைஞர்கள் பத்து வயதேயிருக்கக் கூடிய ஒரு சிறுவனைக் கலாட்டா செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் சிறுவனை உங்கடை அப்பா பெரிய புலியெல்லே என்று கூற அவனும் ஓம் என்று பதிலளித்ததைப் பார்த்துக் கொண்டிருந்த அவனது நான்கு வயதுக்கும் குறைந்த தங்கை தலையாட்டியபடியே ம்கூம்..... அப்பா ஆளெல்லோ......என்று பதிலளித்து அனைவரையும் சிரிப்புக்குள்ளாக்கினாள். எஸ். பீ. மூன்சன்

☞ வீட்டுக்கு வரும் நண்பர் ஒருவர் புகைப்பதைப் பார்த்தோ என்னவோ குழந்தை சாமந்தனுக்கும் அப்படி ஒரு ஈடுபாடு. நெருப்புக் குச்சி அல்லது ஒரு சிறு துண்டுத் தாளைச் சுற்றி வாயில் வைத்துக் கொண்டு புகைப்பது போல நடப்பதுண்டு. மகனுடைய இந்த ஈடுபாட்டை அடியோடு அறுத்து விட வழி தேடிய தாய் "மாமா மாதிரி உனக்கும் மயிரில்லாமல் போகும்" என்று தன் பிள்ளையைப் பயமுறுத்த எடுத்த முயற்சிக்கு "மயிர் தானே அது போகட்டும்" என்று பதில் வந்தது அந்த நான்கு வயதுப் பாலகனிடமிருந்து.

☞ நிறப் பெட்டிகள் பலவற்றை வாங்கி எல்லவாற்றையுமே ஓரொரு தடவை பாவித்த பின் கேட்பாரற்றுக் கிடந்ததைக் கண்ட தந்தை "பிரச்சினைகளே தெரியாமல் பிள்ளையை வளர்ப்பதாகத்" தாயுடன் சத்தம் போடத் தாயும் "ஊரில நாங்கள் ஒரு பென்சிலுக்குத் தன்னும் எவ்வளவு கஸ்டப்பட்டனாங்கள் இங்கை வாரி இறைக்கிறாள்" என்று மகளைக் குறை சொல்ல, எட்டு வயது நிரம்பாத அந்தப் பெண் குழந்தையோ, "அவ்வளவு கஸ்டம் எண்டால் நீங்களும் சின்னனாயிருக்கேக்கையே ஜேர்மனிக்கு வந்திருக்கலாமே" என்று தாயில் அனுதாபம் காட்டினாள்!



padippakam
படிப்பகம்

padippakam



# சிறுவர் பூங்கா

ஒழுக்கம் விழுப்பம் தருதலால் – ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்

ஒழுக்கம் என்பது நல்ல குணம், நல பழக்கவழக்கங்கள், நல்ல நடத்தை என்று எல்லாவற்றையும் உள்ளடக்குகிறது. பாடசாலைக்கு நேரத்துக்குப் போவது, பெரியவர்கள மதிப்பது, கடவுளை வணங்குவது பொய் சொல்லாமலிருப்பது என் சகலதுமே ஒழுக்கம் ஆகும்.

அதனால் ஒழுக்கமாக வாழ்பவன் சீரும் சிறப்பும வாழ்கிறான். மற்றவர்களின் மதிப்புக்குள்ளாகிறான். இதனாலேயே உலகி ஒவ்வொரு தொழிலுக்கும் அல்லது துறையினருக்கும் ஒழுக்கம் ஒ விதியாக அமைந்துள்ளது. வைத்தியனானாலும் சரி, சட்டத்தரணியானாலு சரி, பத்திரிகையாளனானாலும் சரி, இராணுவவீரர்களானாலும் ச பாராளுமன்றவாதிகளானாலும் சரி ஒவ்வொரு துறையினருக்குமே இன் இன்ன முறையில் ஒழுக்கம் இருக்க வேண்டும் என்று விதிமுறைச அமைக்கப்பட்டுள்ளன. இதனை மீறுபவர்கள் தண்டனைக்காளாகிறார்க மானம் மரியாதையைக் கூட இழக்கிறார்கள்.

இதனை அன்றே உணர்ந்த ஆதித் தமிழன், பொய் மொழிப்புலவர் வள்ளுவர்,

ஒழுக்கம் விழுப்பம் தருதலால் – ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்

என்று கூறினார். உயிரையும் விட உயர்ந்ததாக ஒழுக்கத்தை மதிப்பே என்றார் அவர். ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ்பவர்கள் தண்டனைக்காளா மானம் மரியாதையை இழக்க வேண்டி வந்தால் நடைபிணம விடுகிறார்கள். இதனாலேயே வள்ளுவன் ஒழுக்கத்தை உயிரினு மேலானதாகக் காப்போம் என்று 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகே கூறிவைத்தான்.

குழந்தைகளாகிய நாம் எமது முதற் தெய்வங்களா எம் பெற்றோர்களிடமிருந்தே அடிப்படையான எல்லாவற்றையும் கற்று கொள்கிறோம். இதனால் பெற்றோர்கள் எப்பாடுபட்டெனிலும் ஒழுக்கத்தைக்



படிப்பகம்

padippakam



கடைப்பிடிக்க வேண்டியவர்களாகிறார்கள். பெற்றோர்களிடம் நிறைய மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கும் நாங்கள், நீங்கள் ஒரு பொய் சொல்லுவதைக் கேட்கும் போதோ, கோபத்தால் கத்தும் போதோ, மற்றவர்களைத் திட்டுவதையோ கேட்க நேர்ந்தால் அப்பா அம்மா செய்கிறார்களே ஆகவே நான் செய்வதில் தவறில்லை என்று நினைத்துவிடப் போகிறோம். பணத்துக்காகப் பஞ்சாக அலையும் பெற்றோர்களின் பிள்ளைகளும் பாசத்தைவிடப் பணமே பெரிதென உங்கடமிருந்தே படித்துக்கொள்ளப்போகிறோம்.

எனவே பெற்றோராகிய நீங்கள் ஒழுக்கமாக நடப்பது மிக முக்கியம்! உங்கள் வழியில் நாங்கள் என்பதை நினைவிற் கொண்டும் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பதை நினைவில் நிறுத்தியும் பிள்ளைகளான எங்களுக்கு முன்னுதாரணமாக அனைத்துப் பெற்றோரும் நடப்பார்கள் என்று பிள்ளைகள் எதிர்பார்ப்பதில் என்ன தவறு?

(லண்டன் பிறென்ற் தமிழ்ச்சங்கத்தினரால் குழந்தைகளுக்காக அண்மையில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிக்கான ஆக்கங்களுள் ஒன்றையே நீங்கள் மேலே காண்கிறீர்கள்.)

# நாங்கள் வாழும் ஜேர்மனி

| | |
|---|---|
| தலைநகரம் | பேர்லின் (Berlin) |
| பரப்பளவு | 356,755 சதுர கி.மீ. |
| சனத்தொகை | 81.8 மில்லியன் (1 மில்லியன் : 10 இலட்சம்) |
| மாநிலங்கள் | 16 |
| மிகப்பெரிய மாநிலம் | பாயேர்ண் அதன் தலைநகரம்: மூன்சன் |
| பரப்பளவு | 70550 சதுர கி.மீ. சனத்தொகை: 12.0 மில்லியன் |
| மிகச்சிறிய மாநிலம் | பிறேமன் அதன் தலைநாரம்: பிறேமன் நகர் |
| பரப்பளவு | 404 சதுர கி.மீ சனத்தொகை: 0.7 மில்லியன் |

ஜேர்மனியைச் சுற்றியுள்ள நாடுகள்: டென்மார்க், போலந்த், செக் குடியரசு, அவுஸ்திரியா, சுவிற்சர்லாந்த், பிரான்ஸ், லக்சம்பேர்க், . பெல்ஜியம், நெதர்லாந்த்

திவ்யா சிறீ,
ஆண்டு ஆறு மாணவி,
வீஸ்பாடன்



படிப்பகம்

padippakam



# உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டியவை.

1. உலகத்திலே நடைபெற்ற சாதனைகளில் இதுவும் ஒன்று.
   1995ம் ஆண்டு சியோல் நகரத்திலே olympic stadium இல் 35.000 தம்பதிகள் திருமணம் செய்துகொண்டார்கள். இந்த நிகழ்ச்சி தொலைக்காட்சியில் ஒலிபரப்பானபோது இன்னமும் 325.000 திருமணம் செய்து கொண்டார்கள்.



2. மிக கூடியளவு நபர்கள் பங்குபற்றிய Musical chair நடைபெற்றது சிங்கப்பூரில், கலந்து கொண்டவர்கள் 8.238 பேர்கள். இறுதியில் வெற்றியைத் தழுவிக்கொண்டவர் Xu Chong என்பவர்.
3. அதி நீளமுடைய மோட்டார் வாகனம் ( Car ) நீளம் 30.5 மீ இவ்வாகனத்திலே 26 சக்கரங்கள் பூட்டப்பட்டுள்ளன.
4. அதி உயரமுடைய இரண்டு (twins ) கட்டிடம் இதன் நீளம் - 451.9 மீ. அமைந்துள்ள நகரம்: கோலாலம்பூர் மலேசியா
5. இந்தியாவிற்கு வெளியே முதன் முதலாகப் பளிங்குக் கற்களாற் கட்டப்பட்ட இந்து ஆலயத்தின் பெயர் ஶ்ரீ. சுவாமி நாராயன் மந்திர். அமைந்துள்ள இடம் லண்டன். இதன் சிற்ப வேலைகளிற் பங்கு கொண்டவர்கள் 1,546 சிற்பிகள். இதற்கான செலவுகளுக்காக இந்துக்கள் நன்கொடைமூலம் 5 மில்லியன் பவுண்களை (இங்கிலாந்தின் நாணயம்) வழங்கியிருந்தார்கள்.

## வயது குறைந்த பட்டதாரிகள்.

- மைக்கேல் கேர்ணி (Micheal Kearney ) உலகத்திலே மிகக் குறைந்த வயதிலே பட்டதாரி. அப்போது (1994ம் ஆண்டுகளில்) அவருக்கு வயது 10 வருடமும் 4 மாதமும் இடம்: South Alabama, U.S.A
- மத்தியூ ட்ரவுற் (Matthew Trout ) வயது 10 வருடமும் 10 மாதமும். 1994 இல் கணித பாடத்தில் அவன் தனது பட்டப் படிப்பை முடித்திருந்தான்.
- 1992ம் ஆண்டில் கணேஸ் சிற்றம்பலம் என்ற தமிழர் இவரும் கணித பாடத்திலே பட்டப் படிப்பை முடித்திருந்தார். அப்போது அவருக்கு வயது 13 வருடமும் 5 மாதமும்.

## மிகக்குறைந்த வயதில் டாக்டர் பட்டம் பெற்றவர்.

1814ம் ஆண்டில் Philosophy பாடத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர் கார்ல் விற் (carl witte ) அப்போது அவருக்கு வயது 12 வருடங்கள் மட்டுமே.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான மேலாணையாளரின் (UNHCR) கணக்கின்படி 1995ம் ஆண்டில் இலங்கையில் இடம் பெயர்ந்தோர் தொகை 850.000 ஆகும்.

தொகுத்துத் தந்தவர்: சி. ரவிசங்கர்.



படிப்பகம்

padippakam






| | |
|---|---|
| முதலாவதாகத் தடைசெய்யப்பட்ட ஈழத்துத் தமிழ் நூல் | அழகம்மா கும்மி |
| தபாற்தலையை உலகுக்கு அறிமுகப்படுத்திய நாடு | இங்கிலாந்து |
| உயரமான வானொலிப் பரிவர்த்தனைக் கோபுரம் இருப்பது | போலந்தில் |
| உலகத்திலேயே மிகப்பெரிய தீவு | கிறீன்லாந்த் |
| மின்கலம் கண்டு பிடிக்கப்பட்டது | இத்தாலியில் |
| நிலக்கீழ் புகையிரத சேவை ஆரம்பித்தது | இங்கிலாந்தில் |
| உலகின் மிகப்பெரிய நாடு | ரஷ்யக்குடியரசு |
| வேகமாக ஓடக்கூடிய பறவையினம் | தீக்கோழி |
| உலகின் மிகப்பெரிய நகரம் | ரோக்கியோ |
| ஒலிபெருக்கி கண்டுபிடிக்கப்பட்டது | 1924ம் ஆண்டில் |
| மிகவேகமாக ஓடக் கூடிய மிருகம் | சீற்றா என்கிற சிறுத்தை |
| யாழ்ப்பாணத்தில் முதன்முதல் வெளியாகிய பத்திரிகை | ஈழகேசரி |
| முதன் முதலில் துரிததபாற் சேவை என்று ஆரம்பிக்கப்பட்டது | அமெரிக்காவில் |

*தொகுப்பு: ஊர்க்குருவி*

## தாய்மையின் சிறப்பு:

பிரசவத்தை நினைத்தால் பெண்பிறப்பைப் போன்ற பாவச்சுமையே இல்லை என்று தோன்றும். ஆனால், தாய்மைக்குரிய சிறப்பை எண்ணும் போது, "அடடா...... அந்தப் பெருமை ஆண்களுக்குக் கிடைக்கவில்லையே" என்று வருந்துகிறேன்.

செல்வி. சி. டர்மிளா
குறொஸ்கெரோவ

குழந்தையைத் தூக்கினால் கைகள் வலிக்கிறது
நிலத்தில் இறக்கினால் நெஞ்சு வலிக்கிறதே – இது தான் பாசமா?

சபா–பாலகங்காதரன் – மொன்றியேல்


படிப்பகம்

padippakam



# பனிக்காலம் நன்று

பனியே பனியே மெத்தப் பெய்
பாலர் மகிழ நிறையப் பெய்
இனியும் தொடர்ந்து தொடர்ந்து பெய்
இதயம் குளிரக் கனமாயப் பெய்

மல்லிகைப் பூவாய் உதிர்கின்றாய்
மாலை கோர்க்கக் கரைகின்றாய்
நல்லவர் உள்ளம் போலே நீ
தூய்மையாய்ப் பள பளக்கின்றாய்

மொட்டை மரம் மண் கூரையெல்லாம்
மெத்தக் குளிரால் வாடுமென்றோ
வெள்ளைத் தடித்த போர்வையினால்
விரைந்து இதமாயப் போர்க்கின்றாய்?

சிறுவர் உன்னை அள்ளுகிறார்
சிறிய பந்தாய் உருட்டுகிறார்
ஒருவர் மீது மற்றொருவர்
எறிந்து மகிழ்ந்து ஆடுகிறார்

பெரியவர் சிறியவர் பேதமின்றிப்
பலரும் வழுக்கி விழுகின்றார்
பெரியவர் விழுந்து முனகுகிறார்
சிறியவர் சறுக்கிக் களிக்கின்றார்

உந்தன் தூய வெண்மை கண்டு
உயர்ந்த இமயந்தனில் அமர்ந்து
அந்தம் ஆதி ஏதுமிலா
அரனும் நிஷ்டையில் அமர்ந்தானோ?

பனிக்கு ஆலம் நன்றென்றார்
பழுத்த அறிஞர் நாவலரும்
பனிக்காலம் நன்றென்று
பாடுகிறார் நம் பாலகரே!

*சகி - வீஸ்பாடன்*



படிப்பகம்

padippakam



# எண்ண அலைகளிலே நீ!

வன்னியூர் மலர்

என் ஆருயிர் ரம்யா,

நான் நலமே உள்ளேன். அதுபோல் உன் நலத்திற்கும் இறைவனை வேண்டுகிறேன்.

உன் கடிதத்தை எதிர்பார்த்திருந்த நான், கடிதம் கைக்கு எட்டியதும் மகிழ்ச்சி மிகக் கொண்டேன். காத்திருந்த நாட்கள் எனக்குப் பல யுகங்களாகத் தெரிந்தன.

ஜேர்மன் நாட்டு அழகினைப்பற்றி விபரித்திருந்தாய். அழகு எதுவாக இருந்தாலும், அதைப் போற்றவேண்டியது மனிதப் பண்பாடாகும்.. நீ பனிகொட்டும் காலத்தில் அங்கு சென்றிருப்பதால், அந்த நாட்டிற்கேற்ப தேகம் பழக்கப்படும்வரை நோய்கள் ஏதாவது ஏற்படக்கூடும். உடலைக் கவனமாகக் கவனிக்கவும்.

காக்கைச் சிறகினிலே நந்தலாலா என்ற கவிதையைப் படித்ததின்பின் உனக்கு ஏற்பட்ட மனவுணர்ச்சிகளை எழுதியிருந்தாய். நானே என்னைப்பார்த்து வெறுப்புக் கொண்ட காலம் ஒன்றிருந்தது. ஆனால் உன்னுடைய கடிதத்தைப் பார்த்ததின்பின், நான் ஏழேழு ஜென்மமும் கறுப்பாகவே பிறக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

நான் எத்தனையோ காதலைப்பற்றி அறிந்திருக்கிறேன். தெய்வீகக்காதல், மானசீகக்காதல், ஒருதலைக்காதல், இளமைக்காதல், முதுமைக்காதல் இப்படி எத்தனையோ வகைகள்! எம் காதலை என்னவென்று சொல்வது ரம்யா, எம் காதல் நிறைவேறவேண்டும் என்றால் நாம் எம்மை எம்முணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். காலந்தாழ்த்த வேண்டும். என் குடும்ப நிலை உனக்கு நன்றாகத் தெரியும், இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு எம்மிருவரின் ஒத்துழைப்பும் தேவை, செய்வாயா?

மன்னாருக்கு அண்மையில் உள்ள முருங்கன் என்ற இடத்தில் உள்ள மகாவித்தியாலயத்தில் கடமையாற்றுகிறேன். இங்கு ஏறக்குறைய நாற்பது ஆசிரிய ஆசிரியைகள் பணிபுரிகிறார்கள். எட்டாம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களுக்குத் தமிழாசிரியராகக் கடமையாற்றுகிறேன். தினமும் வெள்ளை உடையில் வரும மாணவ மாணவிகளைப் பார்க்க எவ்வளவு சந்தோசமாக இருக்கிறது தெரியுமா? அதுமட்டுமல்ல, கடந்தகால எனது பாடசாலை வாழ்க்கையையும் எண்ணிப்பார்த்துக் கொள்கிறேன். அதைப் போன்ற சந்தோசமான பருவம் வேறு என்ன இருக்க முடியும்?

ஏறக்குறைய மூன்று கிழமைகளுக்கு முன்னால் உயர்தர வகுப்பு மாணவ மாணவியர் எல்லோரும் சேர்ந்து, மடுக்கோவிலைத் தரிசிக்கப் புறப்பட்டோம். எங்களது நோக்கம் அங்கே இருக்கும் அகதிகளைத் தரிசித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து, அவர்களுக்கு எங்களாலான உதவிகளைச் செய்யவேண்டுமென்பதே. நான் முதன் முதலாக அன்றுதான் மடுப்பகுதியில் காலடி எடுத்து வைத்தேன் என்பது குறிப்பிடத்தக்கது. நான் சமயத்தால் இந்து. எப்படிக் கோயிலினுள் செல்வது என்று யோசித்துக் கொண்டிருக்கையில் என் மாணவர்களே என்னை உள் அழைத்துச் சென்று ஒவ்வொன்றையும் அறிமுகம் செய்து வைத்தனர். ஒரு காலத்தில் எல்லா இன மக்களாலும், தரிசிக்கப்பட்டுப், பூசிக்கப்பட்டுப் போற்றப்பட்ட அந்தத் தாயின் திருவடிவம் மாசுமறுவற்ற உருவம், மாசில்லா அழகுமுகம் வேதனையுற்றிருப்பது போன்று எனக்குத் தோன்றியது. அந்தத் தாயின் முன்னிலையில் என் கால்கள் தாமாகவே மண்டி



படிப்பகம்

padippakam



இட்டன. எங்கள் நாட்டில் அமைதி, சமாதானம், சமத்துவம், சுகவாழ்வு என்பன வேண்டும் என அந்தத் தாயை இருகரம் கூப்பி வேண்டிக்கொண்டேன்.

சற்றுத்தூரம் சென்றதும் பாடசாலை ஒன்று தென்படவே அதைப் பார்வையிட நானும் மாணவர்களும் சென்றோம். என்னைக் கண்டதும் ஓடோடி வந்தாள் உன் நண்பி பூர்ணிமா. இது பூர்ணிமாவா என்ற என் சந்தேகம் தீர மூன்று அல்லது நான்கு நிமிடங்கள் என்கிலும் சென்றிருக்கும். மன்னாரில் ஏற்பட்ட கலவரத்திற் தானும் தன் தாயுந்தான் தப்பினார்களாம். அப்பாவும் இருதம்பியரும் வெடிகுண்டுகளுக்குப் பலியாகிவிட்டார்கள் எனக் கண்ணீர் மல்கக் கூறினாள். அப்பா கஷ்டப்பட்டுக் கட்டிய வீடு தரைமட்டம். எனவே தான் இங்கே வந்ததாகவும்
தனக்கு ஆசிரியராக கடமையாற்றும் நிலைமை ஏற்பட அதைச் சந்தோசமாக ஏற்றுக்கொண்டாளாம். உன்னைப்பற்றி ஏராளம் கேள்விகள் கேட்டு என்னைத் திக்கு முக்காடச் செய்து விட்டாள். எனக்குத் தெரிந்தவற்றையும் நீ அவர்கள் எல்லாரையும் கேட்டிருப்பதையும் கூறினேன். அதுமட்டுமல்ல இன்னும் இரண்டு மாதங்களில் தன்னுடன் கற்பிக்கும் ஆசிரியரொருவரை மடுமாதா முன்னிலையில் மிக எளிமையான முறையில் திருமணம் செய்யவிருப்பதாகவும் கூறினாள். எந்தவித சீதனமும் தன்னிடம் எதிர்பார்க்கவில்லை என்றும் கூறினாள். இந்த வறுமையிலும் இப்படி ஒரு செம்மையா என்று எண்ணிப் பெருமைப்பட்டேன்.

அன்று மாலை பூர்ணிமா எங்கள் விடுதிக்குவந்து எங்கள் எல்லோரையும் அழைத்துக்கொண்டு ஒவ்வொரு விடுதியாகச் சென்று அறிமுகஞ் செய்து வைத்தா. தங்கள் வீடு வாசல்கள் தோட்டம் துரவுகள், என்பவற்றைத் துறந்து, உடுத்த உடைகளுடன் மடுவிற்கு வந்து குடியிருப்போர் ஏராளம். கணவர்மாரை இழந்தவர்கள், புத்திரர்களை இழந்தவர்கள், காலிழந்து கையிழந்து பார்க்கவே சகிக்கமுடியாத நிலையில் அநாதையாகிவிட்டவர்கள் எத்தனையோ பேர், இவர்கள் ஒவ்வொருவரையும் என்னுடன் வந்த மாணவர்கள் தனித்தனியே சந்தித்து, என்னெனன்ன தேவை எப்படிச் சேகரிப்பது எவ்விதம் உதவுவது என்பதைத் திட்டமிட்டார்கள். அத்திட்டத்தின்படி, சனி ஞாயிற்றுக் கிழமைகளில் மடுவிற்குச் செல்வது என்றும் யார் யாருக்கு என்னென்ன உதவிகள் தேவையோ, அவற்றைச் செய்து கொடுப்பது என்றும் முடிவு எடுத்துள்ளனர். இப்போதைக்கு என் இடருற்ற சமுதாயத்திற்கு என்னால் செய்யக்கூடிய உதவி இது ஒன்றுதான் ரம்யா! இது சரிதான் என்பதை நீயும் ஏற்றுக்கொள்வாய் அல்லவா?

நீ ஜேர்மன் மொழி கற்கப்போவதாக எழுதியிருந்தாய் எந்த நாட்டுக் கலாச்சாரத்தையும் அறிவதற்கு மொழி முக்கியம் என்பதை நீ அறியாதவளல்ல, ஆகவே நான் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். எந்த நிலையிலும் எங்கள் நாட்டையும் தமிழ்மொழியையும் கலாச்சாரத்தையும் மறந்துவிடாதே. அதுதான் நீ எங்கள் நாட்டிற்குச் செய்யும் நன்றிக்கடனாகும். வெளிநாட்டிற்குச் செல்லும் எத்தனையோ பெண்கள் அங்கு சென்றதும் தங்கள் வாழ்க்கையை எப்படி மாற்றிக் கொள்கிறார்கள் என்பதை நான் அறிவேன். எனவே எதிலும் எச்சரிக்கையாயிரு. நண்பரைத் தெரிந்து கொள்வதில் மிகவும் அவதானம் வேண்டும். ஒருவர் நல்லவரா, கெட்டவரா என்று அறிவதற்கு உன் பகுத்தறிவைப் பயன்படுத்திக்கொள். உன் நலமே என் வாழ்க்கை. உன்னினைவே என் மூச்சு. என்றும் என் எண்ண அலைகளிலே உன்னுடன் வாழும்

உன் அன்புச செல்வா



படிப்பகம்

padippakam



# தெய்வம்

தெய்வம் உண்டா இல்லையா? இது மனிதன் தோன்றிய காலம் தொட்டுத் தோன்றிய கேள்வி. அப்படியே இருந்தால் எது உண்மைத் தெய்வம்?

இது எல்லாம் வெறும் பிதற்றல், தெய்வமே இல்லை, நான் பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையில் வளர்ந்தவன் என்பான் ஒருவன்.

நானே கடவுளின் அவதாரம் என்பான் வேறொருவன்.

மற்றொருவனோ வட மொழியிலே அர்ச்சனை பண்ணினாலேயே கடவுள் அருள் தருவார் என்பான்.

இன்னொருவனோ சமயம் அறியாது வாசலில் வந்து தன் சமயந்தான் உயர்ந்தது மற்றைய சமயம் தாழ்ந்தது என்பான்.

பிறிதொருவனோ பல இன பல மத மக்கள் வாழும் நாட்டில் என் மதமே அரச மதம் என்பான்.

இவ்வாறு பல்வேறுபட்ட மனிதர்கள் அன்பென்ற தடாகமாயுள்ள மதங்களைத் தம் மதியீனத்தால் சாக்கடையாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மனம் பலவீனமானவர்கள் சுயசிந்தனை மழுங்கடிக்கப்பட்டு, மதம்மாறிக் கொண்டிருக்கிறார்கள். என் மதம் நல்லது என்று கூறி ஆட்சேர்க்க வேண்டிய தேவை எனக்கில்லை. ஏனென்றால் மதங்கள் கட்சிகள் அல்ல. எல்லா மதங்களும் நல்ல கொள்கைகளை உடையவையே. அப்போ பரம்பரை பரம்பரையாகக் குலதெய்வமெனக் கும்பிட்ட தெய்வத்தை மறந்து கட்சி மாறுவது போல சமயம் மாறுவதன் அவசியம் தான் என்ன?

பகுத்து அறிவதே பகுத்தறிவு. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றார் நம் தமிழ் மூதாட்டி. "அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்றார் திருவள்ளுவர். அத்துடன் "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என மனைவியின் சிறப்புப் பற்றிக் குறிப்பிடும் போது கடமையைச் செய்பவள் தெய்வம் தொழாதவளாய் இருந்தாலும் அவள் வார்த்தைக்கு இயற்கையே கட்டுப்படும் என்கிறார் அவர். மகா பாரதத்திலே பல உப கதைகள் உண்டு. நாம் வாழ வழிகாட்டிகளாக இருப்பவை அவை.

முன்னொரு காலத்திலே தவவலிமையில் சிறந்து விளங்கிய கௌசிக முனிவர் ஒரு மரத்தின் கீழேயிருந்து தியானம் செய்து கொண்டிருந்தார். அப்போது மரத்தின் மீதிருந்த கொக்கு அவர் மீது எச்சமிட்டு விட்டது. அந்தக் கொக்கைக் கோபக் கனலுடன் முனிவர் பார்க்க, அது எரிந்து விழுந்து இறந்தது. தன் தவவலிமையை எண்ணி இறுமாப்படைந்த அவர், ஒரு வீட்டுக்குப் பிச்சைக்காகச் சென்றார். அவ் வீட்டுப் பெண் முனிவரை விடத் தன் கணவனையே பெரிதென எண்ணிப் பணிவிடை செய்த பின்பு பிச்சையுடன் வெளியே வந்த போது, முனிவர் அவளை முறைத்துப் பார்த்தார். இல்லறக்


படிப்பகம்

padippakam



கடமையை ஒரு தவமாக இயற்றிய அந்த மாதோ ஒரு புன்னகையுடன் கொக்கென்று நினைத்தீரோ கொங்கணவா எனக்கேட்டாள். அவளது ஞான திருஷ்டி பற்றி முனிவர் ஆச்சரியத்துடன் விசாரித்த போது, ஒரு கசாப்புக் கடைக்காரனைப் போய்ப் பார்க்கச் சொன்னாள். கசாப்புக்கடை வைத்திருந்தாலும் அவன் தன் கடமையைப் பெரிதென மதிப்பவன். அவன் மூலம் முனிவருக்குத் உண்மைத் தவம் எதுவென விளக்குவதாகக் கதை அமைந்துள்ளது.

இதை இப்படியே நம்பலாமா எனக் கேட்கலாம். இது உண்மையோ பொய்யோ அதன் கரு எம் வாழ்வுக்கு உதவும். இதன்படி வாழ்ந்தால் நிம்மதி கிடைக்கும். எல்லா மதத்திலும் சிறப்பு உண்டென்றாலும், மனிதன் தன் மூடத்தனத்தால் சில குறைபாடுகளையும் ஏற்படுத்தி விட்டான். அருளுக்காய்த் தோன்றிய சமயத்தைப் பொருளுக்காய் மாற்றிவிட்டான். ஆண்டவனைத் தரிசிக்கச் சாதி அடிப்படையில் தடைகள் கூடப் போட்டான். பிராமணியம் புகுந்து இந்து மதத்தைக் கேலிப் பொருளாக்கியது. போட்டி, பொறாமைகளைக் கோயில் நிர்வாகம் என்ற பெயரில் மனிதன் காட்ட வெளிக்கிட்டு விட்டான். ஆலயம் அமைக்க, கோபுரம் அமைக்க எனப் பணம் சேர்த்து ஊழல் நடவடிக்கைக்கு ஆன்மீகத்தையும் பயன்படுத்தி விட்டான். ஒழுங்கீனமாகப் பணம் சம்பாதிப்பவன் கூடக் கோயிலுக்கெனக் கேட்டா[ல்] மறுக்க மாட்டான். ஏனென்றா[ல்] தெய்வம் தண்டித்து விடுமே என்ற பயம். வேலைக்குப் போகு[ம்] இடத்தில் சிறிய பொருளானா[லும்] கூட ஆசைப்பட்டுக் கள[வு] செய்வான். இவ்வளவுக்கு[ம்] மிகவும் வசதி படைத்தவனா[க] அவன் இருப்பான். கோயிலுக்கு[ப்] போனாலோ வேட்டி, சால்வை[,] மோதிரம், சங்கிலி, இன்று எங்க[ள்] பூசை என இறுமாப்பு. ஐயரி[ன்] தட்டத்திலே 50டொ.எம் அர்ச்சனை[ப்] பணம். கோயிலின் உள்ளே[…] அளவளாவல். பெண்களோ ஒ[…] படி மேலே போய்விடுவார்க[ள்] நகை, சேலை என அவர்க[ள்] உலகமே வேறு. இன்று எங்கள[து] பூசைக்கு வந்தவை, நாங்க[ள்] அவர்களின் பூசைக்குப் போக[ா] விட்டால் குறை எண்ணுவார்க[ள்] என்ற கவலை வேறு.

*மக்கள் சேவை[யே] மகேசன் சேவை என்றார்கள்.*

இன்று இங்[கு] ஆண்டவனுக்குப் பெரிய கோயி[ல்] கட்டுவதை விட ஈழத்தி[ல்] பள்ளிக்கூடம் கட்டுவது[ம்] தொழிற்சாலைகள் கட்டுவது[ம்] முக்கியம்.

*எழுத்தறிவித்தவன் இறைவ[ன்] ஆவான்.*

கோயில் இல்லா ஊரி[ல்] குடியிருக்க வேண்டாம் என்[று] சொன்னார்களே என்[று] கேட்கலாம். உள்ளக் கோயிலை விடவா ஒரு கோயில் தேவை[?] புலம் பெயர்ந்த இந்த இடங்களி[ல்] எம் பிள்ளைகளுக்குக் கோயி[ல்] தேவையில்லையா என்[று] கேட்கலாம். அப்படியானால் எளிமையான ஆலய[ம்] அமைக்கலாம், பஜனைக[ள்] பாடலாம். தியானம் செய்யலாம்.



படிப்பகம்

padippakam



இன்னொரு நாட்டுக்கு வந்து இந்த நாட்டவனை இடைஞ்சல் செய்யாத வகையில் இருக்க வேண்டும்.

உண்மையான கடவுளைத் தேட முன் உண்மையைத் தேட வேண்டும். பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார் என்றார் வள்ளுவர். நம் பிறவியாகிய பயன் திருவருளை நாடலே என்பது மறுக்க முடியாதது. என் பிள்ளையை நான் அடித்துக் கண்டிக்கலாம். மற்றவர்களின் பிள்ளையை அடிக்கலாமா? அது போலவே என் மதத்திலுள்ள குறைபாடுகளை நான் குறிப்பிட்டது அவற்றைக் களைவாதற்காகவே ஒழிய யார் மனதையும் நோக வைக்க அல்ல.

இறைவன் என்ற நியதிக்குக் கட்டுப்படும் போதே சீரான வாழ்வும் நிம்மதியும் கிடைக்கின்றது.

ஒரு சமயத்தில் ஒழுகிய ஒரு பெரியவரின் பாடலை எடுத்து அவர் பாடியது இன்னொரு சமயத்தில் கூறப்படும் கடவுளைத் தான் அவர் பாடினார் என்று நிருபிக்க முயல்வது வடிகட்டின அயோக்கியத்தனம். சிவனை வழிபடு. கண்ணனை நினை. இயேசுவை இறைஞ்சு. அல்லாவைத் தொழு. ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக அன்பாய்ப் பேசி மனிதனாக வாழ். புத்தனின் சாந்தமும் அவரின் கொள்கையும் எவ்வளவு உயர்ந்தவை. மனிதனின் நடவடிக்கையை வைத்தே புத்தனை வெறுக்கலாமா?

இந்துமத ஞானிகள் எவ்வளவு பாடல்களை எமக்காகத் தந்துள்ளார்கள். பெரிய பட்டப் படிப்புப் படித்தவர்களால் இன்று அப்படி எழுத முடியுமா? அது தான் அருள். ஞானப்பிரகாச சுவாமிகள் தந்தருளிய நூல்கள் தான் எவ்வளவு உயர்ந்தவை! ஜேர்மன் அரசாங்கம் அவருக்காக முத்திரை வெளியிட்டதாக அறிகிறேன்.

எதையுமே அவசரமாக முடிவு செய்யக் கூடாது. மற்றவர்கள் எம்மை மாற்ற அனுமதிக்கக் கூடாது. சரியோ பிழையோ நாமே முடிவு செய்ய வேண்டும். எம் மதமும் சம்மதமே. எல்லா மதமும் சிறந்தவையே என்ற கொள்கையுடன். கடமையைச் செய்து தனக்கும் பிறர்க்கும் நன்மையுடன் வாழ்பவனே மனிதன். வெளித் தோற்றம் மட்டும் தான் வாழ்வு, மதம் என எண்ணினால் அவன் தன்னைத் தானே ஏமாற்றுகிறான் என்று தான் அர்த்தம். அன்பு நட்பு கருணை என்பவை எந்த மனிதனிடம் உள்ளதோ அவனே தெய்வமாக மதிக்கப்படுகிறான். தெய்வமும் அப்படிப்பட்டவனைத் தொழும் என்கிறார்கள்.

அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு
இல்லை
இருள் சேர்ந்த இன்னா உலகம்
புகழ்
என்பது மறை வாக்கு.

-நவாலியூர் ஜெகன்-

மனிதனை
மனிதனாக மதியுங்கள்
மனச்சாட்சியை
தெய்வமாக நினையுங்கள்.

சுசீலா - பரிஸ்



படிப்பகம்

padippakam



# அறுவடை

1948ம் ஆண்டு பெப்பரவரி மாதம் 4ம் திகதி என்ன நடந்தது என்ற கேள்விக்குப் பதில் சொல்ல சற்றே சரித்திர அறிவு வேண்டும். காபோஹைதறேற்றுகளுள் எவை அடங்கும் என்ற கேள்விக்குப் பதில் சொல்ல சிறிதே பொது விஞ்ஞான அறிவு தேவை. ஆனாலும் இந்த மாதிரியான கேளிவிகளுக்குப் பதிலை நூல்நிலையம் ஒன்றில் அந்தந்தத் துறைசார்ந்த நூல்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். கேள்விகள் பல விதமானவை. சஞ்சிகை ஒன்றில் அதுவும் புலம் பெயர்ந்து வெளிவரும் ஒரு தமிழ்ச் சஞ்சிகைக்கு வரும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல பொது அறிவு, நகைச்சுவை உணர்வு, நிறைய வாசிக்கும் பழக்கம் என்பன தேவை என்பதை இளைஞனின் வெளியீடான உங்கள் சேகரின் கேள்வி – பதில்கள் பாகம் ஒன்றில் தெளிவாகவே எடுத்துக் காட்டியிருக்கிறார் இளைஞன் ஆசிரியர் சேகர். ஆங்காங்கே குட்டிக் கதைகளைத் தந்து தான் கூறவிருக்கும் கருத்துக்கு வலு தேடிக்கொள்ளும் சேகரின் கருத்துக்களைச் சரி பிழை என்று தரம் பிரிக்காமல் நகைச்சுவையாகவும், நவீனமாகவும் இருக்கிறது என்று தான் கூற முடிகிறது அட்டை, உட்பக்கங்கள் வடிவமைப்பு ஓவியன் சேகரின் கைவண்ணத்தைக் காட்டி நிற்கிறது. தமிழ் இலக்கணப் பிழைகள், எழுத்துப் பிழைகள் தவிர்க்கப்பட முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் பிராங்போர்ட் பெருநகர் பிரதேசவாரியாக அறுவடையாக சில அறுவடைகளை அறுவடை என்ற இப்பகுதியில் அறுவை செய்து பார்ப்பது பொருத்தமான ஒன்றல்லவா?

தொடர்புகளுக்கு: சேகர், 0172 – 418996
Elaingan, Ginnheimer str 24 A, 60487 Frankfurt a.M

(அடுத்த அறுவடையாக நம் முன் படைக்கப்பட்டது கலைக்கண் ஐந்தாவது மலர் அதைப்பற்றிய அறுவையை வாசகர்களாகிய உங்களின் கருத்துகளுக்கே இடம் கொடுத்து விட்டது தமிழ்நாதம்....... அடுத்த பக்கங்களில்......)

தாய்மண் வெளியீட்டகத்தின் வெளியீடான தமிழ்த்தாய் நாட்காட்டி சித்திர வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டியாக அமைந்துள்ளது. ஐரோப்பிய சூரியோதய, மறைவு நேரங்களை பாவித்திருப்பதால் ஐரோப்பாவாழ் தமிழருக்கு மிக உதவியாக அமையும் என்று கருதலாம். தமிழீ விடுதலைப் போராட்ட நிகழ்வுகளுக்கு முதலிடம் கொடுத்தாலும் தகவற்றுளியாகப் பல உல விடயங்களையும் இணைத்துள்ளது நல்லதே! தெளிவின்மையைத் தவிர்த்துப் பல விடயங்களை ஐயம் திரிபற எடுத்துக் கூறவேண்டும். ஏராளமாகக் காணப்படும் எழுத்துப் பிழைகள் எதிர்காலத்தில் இல்லாமற் போகும் என்று நம்பலாமா?

தொடர்புகளுக்கு: T.C.C. 341 Rue des Pyrenees. 75020 Paris. Fran

இந்திய சினிமாத்தனங்களில்லாமல் ஒரு ஒளிரொலி வருமா என்ற எதிர்பார்ப்புகளுக்கு பதில் சொல்வதாக அமைந்திருக்கிறது பூவிதழ். சினிமாத்தனத்தைத் தவிர்த்து ஈழத்துக் கலைஞர்களுக்கு முதலிடம் தந்ததன் மூலமும் தனக்கென்ற ஒரு பாணியில்



படிப்பகம்

padippakam



மலர்ந்திருக்கிறது பூவிதழ். அகரமுதலஎழுத்தெல்லாம் பாடல் முழுமையாக அமர்ந்திருக்கும் நிலையிலே எடுக்கப்பட்டது மிகவும் ஒரு செயற்கையான சூழ்நிலையை உருவாக்கிவிட்டது. போல ஒரு தோற்றம். பொய்க்கால் குதிரை நடனம் எங்களுக்குத் தரப்பட்ட வித்தியாசமான படைப்பாக இருந்தமை பாராட்டுக்குரியது. படம்பிடிகோணம் ஒரு நிலையிலேயே இல்லாமலிருந்திருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். உடுக்கின் ஆற்றலையும் அது எந்த மாதிரியான இசையுடனும் பொருந்திவரும் ஒரு கருவி என்பதை எடுத்துக்காட்டக் கருத்தரித்த தயாரிப்பாளர் சிறுவிளான் வரதன் பாராட்டுக்காளாகும் அதே வேளையில் இயக்குனர் சிறுவிளான் வரதன் எடுத்துக் கொண்ட கருத்தைச் சரியான முறையில் நெறிப்படுத்தி சுருக்கமாகத் தர இன்னும் முயன்றிருக்கலாம். சிறுவிளானா? அல்லது சிறுவிழானா? சிரிக்கவைத்து ஆரம்பிக்கும் இதயப்பிணைப்பு ஒரு சோகமான நிலைக்குப் போக ஆரம்பிக்கும் வேளையில் தொடரும் போட்டு விட்டாரே இயக்குனர். குரலைக் கேட்கும் வரையில் அடையாளமே தெரியாத ஈசாவின் மேக்–அப்புக்குப் பாராட்டுகள். சொர்ணன், பாலா போன்ற பண்பட்ட நடிகர்களுடன் அறிமுகமானாலும் சோர்ந்து போகாத இவரது நடிப்பு இயக்குனருக்குத் தான் பெருமை தருகிறது! மழலை வருமாம்......? அதுவும்...... விரைவில்.....? கொம்ப்யூட்டர் வண்ணம் அரியாலையூர் கேதீஸ்வரன் என்பது சரி. நெறியாக்கம் சிறுவிளான் வரதன் தானே? ஒருவேளை..........!

தொடர்புகளுக்கு:– Kalai Valar Kalalayam, Mainzerland str 99. 60329 Frankfurt a.M. 069–232517

(அறுவடையின் இதுவரையிலுமான அறுவை வைத்தியராகக் கடமையாற்றியவர் பூபதி. அடுத்து வரும் சில அறுவை வைத்தியர்களாக....... தென்றல், நித்யன், வி.கு.)

# Mr. ரவிக்குமார்

## வி.கு.வின் ஒரு கண்ணோட்டம்

பிராங்பேர்ட் தமிழ் மக்களால் வழங்கப்பட்ட இரண்டாவது படைப்பு. இயக்குனரின் கடின உழைப்புக்குப் பலன் கிடைத்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். சுட்டிப்பயலும் அப்புவும் அபாரம். சினிமாத்தனம் இல்லாத ஒரு யதார்த்தமான படைப்பாக இருக்கிறது. நடித்த எல்லோருமே திறம்படச் செய்திருக்கிறார்கள். இரண்டு இசையமைப்பாளர்களுக்கும் சபாஷ் சொல்ல வேண்டும். சாரங்கள் அவர்களே, தமிழ் உள்ளவரை உங்கள் இசையும் வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறோம். இணுவையூர் சோதி அவர்களுக்கு முதற்படமா? நம்ப முடியவில்லை! ஆச்சரியமாக இருக்கிறது. நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது. பாடலைக் கேட்கும் போது தமிழீழத்தில் இருப்பது போன்ற உணர்வு. மிஸ்டர். ரவிக்குமாராக வரும் திரு. கனகராயர் அவர்களை மேக்கப் மறைத்துவிட்டது. அவர் தானா என்று படம் பார்ப்பவர்களுக்கே சந்தேகம்! திருமதி. ரீட்டா ஏற்கெனவே நடித்திருந்தாலும் காமிராவைக்கண்டு ஏன் கூச்சப்படுகிறார்? பார்க்கில் சுட்டிப்பயலை அப்பு துரத்தும் காட்சி நீண்டுவிட்டது. இயக்குனர் எந்தக் கருத்தைச் சொல்ல வந்தாரோ அந்தக் கருத்து மக்களைப் போய்ச் சேர்ந்துவிட்டது. மொத்தத்தில் மிஸ்டர். ரவிக்குமார் பாஸாகிவிட்டார்.


படிப்பகம்

padippakam



# கலைக்கண்ணின் 5வது கண்ணில் ஒரு கண்ணோட்டம்!

## மிஸ்டர் ரவிக்குமார்!

நம்மவர் படைப்புத்தானே. பத்தோடு பதினொன்று அத்தோடு இது ஒன்று என்று தான் இச்சின்னத்திரையைக் காணச்சென்றேன். இல்லை இது பத்தில் ஒன்று என்று சொல்ல வைத்துவிட்டது மிஸ்டர் ரவிக்குமார். புலம் பெயர் நாடுகளில் வெளியான சின்னத்திரைகளில் இது நிச்சியம் முதல்த் தரத்தை எட்டி நிற்கும். குட்டி நட்சத்திரங்களை வைத்துக் கதையமைத்து சின்னத்திரை எடுக்கப் பலர் தயங்கும் இந்த வேளையில், தன்னால் முடியும் என்று இயக்குனர் திரு பாலராஜா முயன்று அதில் வெற்றியும் கண்டுள்ளார். புலம் பெயர் நாடுகளில் இன்று சிறுவன் ரவியைப் போல் துடுதுடுப்பான எத்தனையோ சிறுவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் செய்யும் நல்ல காரியங்கள் நம் கண்களுக்குத் தெரிவதில்லை. இந்தக் கருவுடன் மூன்று முக்கிய பாத்திரப் படைப்புடன் கதையை நகைச்சுவையுடன் நகர்த்திய விதம் இயக்குனரின் திறமை! காட்சிகளை அழகுற எடிட் செய்த திரு யோகேஸ்வரனை நிச்சயம் பாராட்டலாம். பாடலும் சரி, அதன் பின்னணி இசையும் சரி சற்று மிகை! ஆனால் பாடலின் காட்சியமைப்பு அதனை நிவர்த்தி செய்து விடும். நாம் அன்றாடம் காணும் தாய்மாரின் பிரதிபலிப்பு திருமதி ரீட்டா. அப்பு பூபதிபாலா வின் பிரதிபலிப்பு இனிவரும் காலங்களில் நம்மிடையே நிச்சியம் வரும். சிறுவன் ஜெரிசனின் நடிப்புத்தான் இயக்குனரின் பலம். திரு சோதியின் பின்னணி இசை சில இடங்களில் அதிகமாகவே முளங்கியுள்ளது. நகைச்சுவை நல்ல முறையில் கையாளப்பட்டுள்ளது. சிறுவர் முதல் பெரியோர் வரை நிச்சயம் அனைவரையும் கவரும். உப கதாபாத்திரங்களும் தம்தம் பங்குகளைச் செவ்வனே செய்துள்ளனர். தொடர்ந்து திரு பாலராஜா இது போன்ற வித்தியாசமான படைப்புக்களைத் தருவாரேயானால் நிச்சியம் ஒரு நல்ல கதாசிரியர், இயக்குனர் என்ற பெயரைப் பெறுவார்.

அன்புடன் தென்றல்...

அவள் வருவாளா என்று காத்திருந்தான் அவன் இங்கே!
அவளும் புறப்பட்டாள். ஆனால் இங்கு வந்து சேரவில்லை.
அவள் கனடாவுக்குப் போய்விட்டாளாம். டுல்டுங்கை விட,
சிற்றிஷன் மேலல்லவா! என்னே அவள்!!
அவள் பெண்மையை வர்ணிக்கப் புறப்பட்டேன்.
அந்தோ என் பென் மை தீர்ந்து விட்டது.

தென்றல்.


படிப்பகம்

padippakam



## கலைக்கண் 5 ஒரு பார்வை

தமிழ்நாதம் பின் அட்டையில் ஒரு விளம்பரம். படம்! அட, பார்க்கத்தான் போவோம் என்று போனால் இரண்டு மணிக்கு ஆரம்பமாக வேண்டிய படம் மூன்றுக்குத் தான் ஆரம்பமாகியது. நம்மவர் படைப்புகள் என்று பல நிகழ்ச்சிகள். நல்லது. வரவேற்புக்குரியது. டார்ம்ஸ்டார்ட் பாபு எழுதிப் பாடி நடித்த பாடல் நம்மை ஒரு தரம் ஈழத்துக்கே அழைத்தது போல் இருந்தது.
ஆனாலும் அழைத்துச் செல்லவில்லையே! வீதியெல்லாம் பிணக்குவியல் என்ற வரிகள் வரும் போது குதிரை வண்டிகள் ஆட்கள் போவதும், மக்கள் சந்தோசமாக இருப்பதுமாக கண்களைக் கவரும் காட்சிகளாக இருந்தது..... ஏதோ நமது நாட்டைக் கேலி செய்வது போலிருந்தது. பின்னணிக் காட்சிகளில் கவனம் நிறையவே எடுத்திருக்க வேண்டும். நம்மவர் படைப்பு என்ற பகுதியிற் தமிழ்மன்ற நிகழ்ச்சியில் இடம் பெற்ற பாட்டு ஒன்று இடம் பெற்றது. படைப்பாளியின் பெயர் போட்டிருந்தால் படைப்பளிக்கும் சிறப்பாக இருந்திருக்கும். நல்ல நடன நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. ஆனாலும் பின்னணி அமைப்பால் ஆடைகளும் அபிநயங்களும் தெரியாமல் ஏதோ பூஞ்சோலையிற் பூச்சிகள் பறந்து திரிந்தது போற் தான் தெரிந்தது. பின்னணியைத் தவிர்த்திருந்தால் ஏதோ மேடையில் இடம் பெற்றது போலாவது இருந்திருக்கும்.

பேட்டிகளில் ஒருவர் அல்லது இருவர் வழமை. ஐந்து பேர் ஏன்?
முக்கிய அம்சமான மிஸ்டர். ரவிக்குமாரின் தாய் பாவம். வாங்கோ என்று அவர் கூறியும், விளையாட்டுச் சாமான்கள் கொண்டு வாங்கோ என்று பிள்ளை கூறியும் கூட தந்தை படம் முடியும் வரையில் வரவேயில்லையே! பேசாமல் தந்தையின் படத்தை வைத்து மாலையொன்றைப் போட்டிருக்கலாம். படத்தின் கதைதான் என்ன? ஒரு பிள்ளை குழப்படி செய்கிறது....... செய்து கொண்டே இருக்கிறது...... படம் முடிவிலும் கூடக் குழப்படி செய்துகொண்டே இருக்கிறது! திருந்தவே இல்லை. குழப்படி செய்யும் பிள்ளை திருந்த முடியாதா?

எல்லோரும் தம் நடிப்பைத் திறம்படச் செய்திருக்கிறார்கள் என்றாலும் பலருக்கு நடிக்க இடம் கொடுத்தால் பலர் படம் பார்க்க வருவார்கள், பணம் சேரும் என்ற நோக்கில் பணத்தை எதிர்பார்த்துப் படம் எடுக்காமல் சிலருடன் சிறப்பாக எடுத்திருக்கலாம்.

வியாபார நிறுவனங்களின் விளம்பரங்கள் ஏதோ பூமி அதிர்ச்சியின் போது படமாக்கப்பட்டது போலிருந்ததே! அமைதியாக ஆறுதலாகப் படம் ஆக்கியிருக்க முடியாதா?

அடுத்து வரும் படத்துக்கு ஒலி நல்லதாகச் செய்தால் நல்லதே!

**நித்யன்**

**பேச்சால் கெட்டான் தமிழன்**
**பேசிக் கெடுத்தான் தமிழன்**

*வீ.எஸ். பாலசிங்கம்.*


படிப்பகம்

padippakam



## கரை தேடும் அலைகள்

## சகி தரும்

முன்கதைச் சுருக்கம்

ஜேர்மனியில் வசிக்கும் ராகவன் என்ற இளைஞனுக்கு அவன் இலங்கைக்குப் போய்வர முடியாத காரணத்தால், அவனது பெற்றோர் ரம்யா என்னும் அடக்கமும் அழகும் நிறைந்த பெண்ணை மணம் பேசி ஜேர்மனிக்கு அனுப்பி வைக்கின்றனர். அவர்களது திருமணம் இனிது நிறைவேறிய பின் பிராங்போர்ட்டில் ராகவனின் ஒற்றையறை வீட்டில் இல்லறம் இனிமையாகக் கழிகிறது. தன் தங்கை ரோகிணி ஊரில் விடுதலை இயக்கத்தில் இணைந்த போது பெற்றோரின் முயற்சியாலும் தம்பி அமுதனின் உதவியுடனும் ஏஜென்சி மூலம் ரோகிணியை அவளது விருப்பத்துக்கு மாறாக ஜேர்மனிக்கு வரவழைக்கிறான் ராகவன். இடப் பற்றாக்குறை காரணமாக வேறொரு வீட்டைக் கூடிய வாடகைக்கு எடுக்கும் ராகவன் ரம்யா இருவருமே வாடகைச் செலவை ஈடு செய்யப் பகுதி நேர வேலைக்குச் செல்கிறார்கள். ரம்யா ஜேர்மன் மொழி வகுப்புக்கும் செல்வதால் இருவரும் வீட்டில் ஒருவரையொருவர் சந்திக்கும் நேரம் குறைகிறது. பழைய வீட்டிலிருந்த சந்தோசத்தை எண்ணி ஏங்குகிறாள் ரம்யா. ஊரில் காதலிற் தோல்வி கண்டு அதனாற் பெரும் குடிகாரனாகித் தன் மருத்துவக் கல்வியையும் குழப்பிய போதிலும் தன் தங்கைகளுக்காக ஜேர்மனி வந்து உழைக்கின்ற ராகவனின் நண்பனான கேதீஸ் மேல் அனுதாபம் கொள்கிறாள் ரம்யா. ஊரிலிருந்து புறப்பட்ட ரோகிணி நீண்ட நாட்களின் பின் ஜேர்மனி வந்து சேர்கிறாள் ........................



தொடர்வது......... அத்தியாயம் 12

எமது வீட்டுக்கு விருந்தினர் ஒருவர் வரவிருக்கிறாரென்றால் அவரைப் பற்றிய, கடந்த காலத்தில் அவரோடு பழகிய சில சந்தர்ப்பங்கள் பற்றிய நினைவுகளில் நாம் மூழ்குவது இயல்பே.

ரோகிணியை அழைத்து வர ராகவன் சென்ற பின் ரம்யாவின் கரங்கள் பழக்கதோசத்தில் சமைத்துக் கொண்டிருக்க, அவள் மனம் ரோகிணியைப் பற்றிய சிந்தனையில் மூழ்கியிருந்தது. வசந்த காலத்தில் மரங்களில் இலைகள் துளிர்ப்பது போல அவர்களது சந்திப்பும் ஏற்கனவே நட்பாக மாறியிருந்தது.

ராகவன் ரம்யாவின் திருமணத்துக்காக ராகவன் வீட்டில் பொன்னுருக்கிய போது, இருவரினதும் நெருங்கிய உறவினர், நண்பர்கள், அயலவர் அழைக்கப்பட்டிருந்தனர். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் திருமணங்களில், பொன்னுருக்கல் என்றழைக்கப்படும் தாலி செய்யும் வைபவத்தை, வழமையாக, கல்யாணத்துக்குச் சில தினங்களின் முன்
நகைகள் செய்யும் பத்தரை மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்து, சாத்திர சம்பிரதாயங்களுடன் இரு வீட்டாருக்கும் நெருங்கிய உறவினர் நண்பர்களுடன் கொண்டாடுவார்கள். அதன் பின் திருமணம் வரை மணமகன் மணமகளைச் சந்திக்கக் கூடாது என்பது சாத்திர விதிமுறை. திருமணத்தின் முன் மணமகள் மணமகனின் வீட்டுக்குச் செல்வது, பெற்றோர் ஒழுங்கு செய்யும் திருமணத்தில் வழமையில்லை. அவர்கள் ஏற்கனவே உறவினராயிருப்பது வேறு விஷயம்.

ஆண்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்ட. இன்றை



படிப்பகம்

padippakam



காலகட்டத்தில் சொந்த நாட்டுக்கு வர முடியாத இளைஞர்களுக்கு மணமகளை அனுப்பி வைக்க வேண்டிய நிலையில், மணமகள் மணமகன் வீட்டுக்குச் சென்று அங்கு அவனது உறவினர்களுடன் பழகுவது இன்று வழமையாகிவிட்டது. காலத்திற்கேற்றவாறு, சம்பிரதாயங்களும் மாறுபடத்தான் செய்கின்றன.

ராகவன் அங்கில்லாத குறையைத் தவிர, ஓர் எளிய திருமணத்துக்குரிய கலகலப்பைக் கொண்டிருந்தது. அன்றைய தினம். ஆரம்பத்தில் ரம்யாவுக்குக் கூச்சமாக இருந்தாலும், போகப்போகத் தன்னையறியாமலே மாப்பிள்ளை வீட்டாருடன் கலகலப்பாகக் கதைக்கத் தொடங்கிவிட்டாள். பலகாரத் தட்டுடன் ரோகிணி வந்தபோது, ரம்யாவுக்கு அவளை யாரென்று தெரியாவிட்டாலும் அவளது துள்ளல் நடையும், கண்களில் தெரிந்த ஒரு வித பரபரப்பும், குழந்தைத்தனமான சிரிப்பும் முதற் பார்வையிலேயே ரம்யாவைக் கவர்ந்துவிட்டது. அருகிலிருந்த ஒருத்தி அறிமுகப்படுத்தினாள்."ரம்யா இவதான் உம்முடைய மச்சாள்" ரம்யா புன்சிரிப்புடன் அவளை அருகில் அமர்த்தினாள்.

ஏதோ நீண்ட நாட்கள் பழகியவள் போல வார்த்தைக்கொரு 'அண்ணி' போட்டு உரிமையோடு கதைத்துக் கொண்டிருந்த ரோகிணி சற்றுத் தொலைவிலிருந்த சிறுவர் சிறுமிகளைச் சைகையால் அழைத்தாள். "அண்ணி, இவையெல்லாரும் என்ர ·ப்ரெண்ட்ஸ்"

ரம்யா ஆச்சரியத்துடன் அவர்களைப் பார்த்தாள். கிட்டத்தட்ட ஐந்து வயதிலிருந்து பதினைந்து வயது வரை வஞ்சகமில்லாமல் ஆண் பெண் என்ற வேறுபாடில்லாமற் பல நண்பர்கள் அவளுக்கிருந்தனர்.

"அப்ப நீர் எத்தினையாம் வகுப்புப் படிக்கிறீர்?" ரம்யா கேட்டாள்.

"நான் இந்த வருசம் ஏலெவல் எடுக்கப் போறன்"

ரோகிணியைக் கதைக்க விடாமல் அருகிலிருந்தவன் இடித்தான். "ரோகிணியக்கா வாங்கோவன் கிரிக்கெட் விளையாட"

"சும்மா இரடா, இண்டைக்கு ஒரு விளையாட்டுமில்லை. அங்கை அம்மா வாறா. ஆக்களுக்கு முன்னாலை எனக்குப் பேச்சு வாங்கித் தராதை"

ரோகிணியின் தாய், தேனீர்த் தட்டுடன் வந்தவள் பரிமாறியபடியே ரம்யாவுக்குச் சொன்னாள், "பாரும் பிள்ளை, இவளுக்கு இருபது வயதாகுது. பள்ளிக்கூடத்தால வந்தால் ஒண்டில் படிக்க வேணும். அல்லது ஏதும் வீட்டு வேலை செய்ய வேணும். இது என்னடா எண்டா, அயலட்டையிலை உள்ள சின்னனுகளையும் பழுதாக்கி அதுகளோடை கிறிக்கெற் விளையாடுது. அல்லது ஆமி புலியெண்டு ஏதோ புதுசாய் விளையாடுது. ஒரு பாதித் தேங்காய் திருவித் தாவெண்டு கேட்டாக் கையுக்கை நோகுது காலுக்கை நோகுதெண்டு சாட்டுச் சொல்லிப் போட்டு பிறகு பெடியளோடை சேந்து விளையாடேக்கை பாக்க வேணும்."

"இனி இவ தொடங்கீற்றா" என்றவள் தாயைக் கதைக்க விடாமல் தட்டிலிருந்த வடையொன்றை எடுத்து முழுதாக வாய்க்குள் திணித்துக் கொண்டு எழுந்து வெளியே ஓடினாள். அருகிலிருந்தவர்கள் சிரிக்க ரம்யா மாமியாருக்கு ஆறுதல் சொன்னாள்.

"ஒரு வயது வரத் தங்கடை பாட்டிலை எல்லாம் செய்வினம்"

அன்றைய தினத்தின் பின் ரோகிணி துவிச்சக்கரவண்டியை எடுத்துக் கொண்டு ஆறேழு மைல்களுக்கப்பாலுள்ள ரம்யாவின் வீட்டுக்குத் தோழிகளுடனோ தனியாகவோ வந்து விடுவாள். ரம்யாவும் தன் தங்கைகளுள் ஒருத்தியாக அவளைப் பாவித்து ஒருமையாய் அழைக்கும் அளவுக்கு உரிமையாய்ப் பழகத் தொடங்கி விட்டாள்.

"இருட்டுப்பட்டிட்டுது. இனி வீட்டை போ" என்று ரம்யா துரத்தும் வரை அவள் இவர்களுடன் அரட்டையடித்துக் கொண்டிருப்பாள்.

ரம்யாவின் பயணத்துக்கு முதல் நாள் ரோகிணியின் கலகலப்பெல்லாம் அடங்கி அவள் ரம்யாவின் கைகளைப் பற்றியபடி சொன்னாள். "அண்ணி, பெரியண்ணை இங்கையே இருந்திருந்தால் எவ்வளவு நல்லாயிருந்திருக்கும்? நீங்களும் ஜேர்மனிக்குப் போக வேண்டியிருக்காது. நீங்க நாளைக்குப் பயணம் போறதை நினைச்சா எனக்கு விசராயிருக்கு."


படிப்பகம்

padippakam



அவள் குரல் தளதளத்தது. அவளுடைய கள்ளமில்லா அன்பு ரம்பாவின் கண்களைக் கலங்க வைத்தது.
அந்த அன்பு ரம்யாவின் அடிமனதில் பதிந்து இன்று ரோகிணியின் வருகை அவளுக்குக் குதூகலத்தைக் கொடுத்தது. தடபுடலாகச் சமையலை முடித்துக் கொண்டு குளித்து விட்டு வந்தவள் ராகவனையும் பின்னால் ரோகிணியையும் கண்டு ஓடிச் சென்று அவளைக் கட்டியணைத்துக் கைகளைப் பற்றி உள்ளே அழைத்து வந்தாள். ராகவன் கண்ணாடித் தம்ளரில் பழச்சாறு எடுத்து வந்து ரோகிணியிடம் கொடுத்தான். அவன் அடிக்கடி ஆச்சரியப்பட்டான். "என்ன இவள் இப்பிடி வளந்திட்டாள், பெரிய பொம்பிளை மாதிரி?"
"நெடுகச் சின்னப் பிள்ளையே? என்ன ரோகிணி சத்தத்தையே காணேல்லை?"
அவள் பதிலுக்கு மெல்லியதாய்ப் புன்னகைத்தாள். ரம்யா கவனித்தாள். அவள் கண்களில் இருந்த பரபரப்பு, குழந்தைத்தனம் எல்லாம் எங்கோ தொலைந்தவளாய், அதற்குப் பதிலாகக் கண்களில் சோகத்தை நிரப்பிக் கொண்டு போலித்தனமாயப் புன்னகைத்தபடி............
இவளுக்கு என்ன தான் நடந்தது?
'பாவம், எனக்கே வீட்டை விட்டிட்டு வந்த நேரம் எவ்வளவு கவலையாயிருந்தது! இவள் சரியான செல்லமாய் வளந்தவள். அம்மாவைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு நித்திரை கொள்ளுறவளுக்கு எப்பிடியிருக்கும்? எல்லாம் போகப் போகச் சரியாகிடும்'

ராகவன் நீண்ட காலத்தின் பின் ரோகிணியைக் காண்பதால் ஒரே உற்சாகமாயிருந்தான். "ரோகிணி, போய்க் குளிச்சிட்டு வா, சாப்பிடுவம். உனக்கு நல்ல பசியாயிருக்கும். எனக்கும் பசிக்குது," சமையலறைக்குள் போய் ஒவ்வொரு பாத்திரத்தின் மூடியையும், திறந்து பார்த்து மூச்சை நன்றாக உள்ளே இழுத்து விட்டுக் கொண்டான்.
"ஆகா! இண்டைக்கு எல்லாம் ஸ்பெஷல்." உள்ளே எட்டிப் பார்த்த ரம்யாவின் கன்னத்தைக் கிள்ளினான். ரம்யா பொய்க் கோபத்துடன் கன்னத்தைத் தடவிக் கொண்டாள்.
வேலை-வீடு, வீடு வேலை என்று சில காலம் இயந்திரமயமாய் இருந்தவர்களுக்கு, ரோகிணியின் வருகை ஒரு நல்ல மாற்றத்தைக் கொடுத்து மனதை இலேசாக்குவதாய் இருந்தது.
ரோகிணி வந்து சேர்ந்ததை அறிந்து, அடுத்த ஞாயிற்றுக்கிழமை கேதீஸ் ராகவனிடம் வந்திருந்தான். ரம்யா இரவுணவு தயாரித்துக் கொண்டிருக்க, ரோகிணி அவளுக்கு உதவி செய்து கொண்டிருந்தாள்.
கேதீஸ் வரவேற்பறையில் ராகவனுடன் தாழ்ந்த குரலில் பேச்சை ஆரம்பித்தான்..
"அவன் கபிலன்ரை தகப்பன் என்னைக் காணுற நேரமெல்லாம் பொம்பிளை வந்திட்டாவோ எண்டு விசாரிப்பார். வந்த உடனை தனக்கு போன் பண்ணச் சொன்னவர். நீ எதுக்கும் ரோகிணியின்ரை விருப்பத்தையும் ஒருக்காக் கேட்டிட்டுப் பிறகு அந்தாளோடை நேரிலை போய்க் கதைப்பம்."
ராகவனும் ஆமோதித்தான்.

கடந்த ஒலியில் வெளியான இத் தொடரில் சில பகுதிகள் தவறவிடப்பட்டதால் வாசகர் விருப்பத்துக்கேற்ப இவ்வொலியில் அத் தொடரை மீண்டும் முழுமையாகத் தந்து இத் தொடரை முழுமைப்படுத்துகிறோம்.

டாக்டர்: உங்கள் பையன் 5 டிஎம்மை விழுங்கி 1 கிழமையாகியும் ஏன் இதுவரை வரவில்லை?
கந்தசாமி: இன்றுதான் சிகரட் அடிக்க என்னிடம் காசு இல்லாமல் போனது. அது தான் இன்று வந்தேன்.
டாக்டர்: ? ? ? ? ?

யசோ

padippakam



"நாளைக்குப் பதியிற அலுவலையும் முடிச்சிட்டு ஒரு நல்ல நாளிலை ரம்யாவையும் கூட்டிக் கொண்டு போவம். என்ன?"

நால்வரும் ஒன்றாக அமர்ந்து உணவு அருந்திய போது கேதீஸ் ரோகிணியைக் கவனித்தான். கபிலன் அவளது புகைப்படத்தில் மயங்கியதில் வியப்பில்லை என்றே தோன்றியது.

கேதீஸ் நண்பர்களுடன் கதைக்கும் போது தான் முன்பு வாசித்த அல்லது கேட்டறிந்த நகைச்சுவைத் துணுக்குகளை இடையிடையே சந்தர்ப்பத்துக்கேற்றவாறு, செருகி அவர்களைச் சிரிக்க வைப்பது வழக்கம். ஒரு அளவுக்கு மேல் மது அருந்தினால் புலம்பிப் புலம்பியே மற்றவர்களைக் கஷ்டப்படுத்திவிடுவான். ராகவனின் திருமணத்தின் பின் கேதீஸ் இவனிடம் வரும்போது மதுவைத் தொடுவதேயில்லை. அது ராகவனுக்கு நண்பன் மேல் மதிப்பைக் கூட்டியிருந்தது.

ரோகிணி பல சிரமங்களுக்கிடையில் வந்து சேர்ந்ததால் ஏற்கனவே குதூகலமடைந்திருந்த ராகவனும் ரம்யாவும் கேதீஸின் கலகலப்பான பேச்சினால் வயிறு குலுங்கச் சிரித்துக் கொண்டிருந்த போது, இவர்களுடைய சம்பாஷணையில் கலந்து கொள்ளாதவளாய் ரோகிணி சாப்பாட்டைக் கிளறிக் கொண்டிருந்ததைக் கவனித்த கேதீஸ் அவளைத் திமிர்பிடித்தவளாய் இருக்கக் கூடுமென்றே நினைத்தான்.

கேதீஸ் புறப்பட்ட பின் ராகவன் ரம்யாவிடம் ரகசியமாகச் சொன்னான்.

"ரோகிணீட்டை மெல்லமாய் நாங்கள் அவளுக்குக் கலியாணம் பேசியிருக்கிற விஷயத்தைச் சொல்லும். அவளின்ரை விருப்பத்தையும் கேட்டு மேற்கொண்டு மற்ற அலுவல்களையும் கவனிப்பம். சரி நான் படுக்கப் போறன். வெள்ளணப் பார்ட்டைம் போவேணும்"

ரமயா சமயலறையைச் சுத்தஞ் செய்து பாத்திரங்கள் கழுவத் தொடங்க, ரோகிணி பார்த்துக் கொண்டிருந்த தொலைக்காட்சியை நிறுத்திவிட்டு ரம்யாவிடம் வந்தாள்.

"நாளைக்கு அண்ணைக்கும் உங்களுக்கும் எத்தினை மணிக்கு வேலை அண்ணி?"

"எனக்குப் பகல் நாலு மணித்தியாலம் வேலை. பின்னேரம் டொய்ச் வகுப்பு. அது முடிய இரவு எட்டு மணிக்குப் பிறகு தான் வீட்டை வருவன். இவருக்கு விடிய வெள்ளணை ரண்டு மணித்தியாலம் பார்ட்டைம். பிறகு உன்னைக் கூட்டிக் கொண்டு போய்ப் பதிஞ்சிட்டு மத்தியானம் வேலைக்குப் போனால் சாமம் தான் வீட்டை வருவார்."

ரோகிணி சிந்தனையிலாழ்ந்தாள். "இப்பிடிக் கஸ்டப்பட்டு உழைச்சுத் தான் அங்கை எங்களுக்கு அனுப்புறனீங்களே? நானும் இவ்வளவு காலமும் உலகம் தெரியாம இருந்திட்டன். நான் கழுவுறன் அண்ணி. நீங்க போய்ப் படுங்கோ"

"சரி. வா, கழுவு. எனக்குக் கஸ்டம் எண்டதுக்காக இல்லை, நீயும் பழகத்தானே வேணும். நாளைக்குக் கலியாணம் கட்டினாப் பிறகு நீதானே எல்லா அலுவலும் கவனிக்க வேணும்?"

ராகவன் சொன்ன விடயத்துக்கு அவள் அடியெடுத்து வைத்தாள்.

"ஏன் அண்ணி, கலியாணங் கட்டாம ஒரு பொம்பிளையால தனியச் சீவிக்கேலாதா?"

"ஏன் ஏலாது? ஆனா எங்கட சமுதாயம் அதைச் சீரணிக்காது. தேவையில்லாத பிரச்சினைகள் வரும். உன்ர அம்மா, அப்பா, அண்ணன்மார் கவலைப்படுவினம். சனம் நாலு விதமாய்க் கதைக்கும். இன்னும் எத்தினையோ பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டி வரும். அது சரி நீ ஏன் அப்பிடியெல்லாம் யோசிக்கிறாய்?"

"சரி..... இப்ப ஏன் கலியாணத்தைப் பற்றி....? வேறை ஏதன் கதைப்பம்"

"உனக்குத் தெரியாது. பொம்பிளையளுக்கு வயது ஏற ஏற வடிவு குறைய அவ்வளவுதான். மாக்குகள் டவுன். வெளி நாட்டில மாப்பிளைமார் நிறைய இருக்கினம். ஆனா நல்ல குணமிருந்தாப் படிப்பிருக்காது. படிப்பிருந்தா வேலை இராது. எல்லாமிருந்தா வடிவிருக்காது. இப்பிடி எல்லாம் அமைஞ்சதாய் ஒரு மாப்பிள்ளையை அண்ணை உனக்குப் பாத்து வைச்சிருக்கிறார். அவை எல்லாருக்கும் உன்ர படத்தைப் பாத்துப் பிடிச்சுக் கொண்டுது. இப்ப நீ ஓமெண்டு ஒரு சொல்லுச் சொன்னாச் சரி. கலியாணம் முடிஞ்ச மாதிரித்தான்."

ரோகிணியின் கையிலிருந்த பாத்திரம் நழுவியது. இது வரை பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தவள் கத்தினாள். "என்னைக் கேக்காம ஏன் அண்ணை எனக்குக் கலியாணம் பேசினவர்?" அவளது முகம் போன போக்கைக் கண்டு ரம்யா திடுக்கிட்டாள். அவள் இப்படிக் கோபப்பட்டதை ரம்யா இது வரை கண்டதேயில்லை.

padippakam



ஒரு வேளை இவளுக்கேதாவது காதல் கீதல் என்று ஏதாவது இருக்கலாமோ என்று சந்தேகித்தாலும் கேட்கத் தயக்கமாக இருந்தது. அவள் போட்ட சத்தத்தில் ராகவன் திடுக்கிட்டு எழுந்து படுக்கையில் உட்கார்ந்தான். அவர்கள் கதைப்பது அவனுக்கு விளங்காவிட்டாலும் ஏதோ விவாதிக்கிறார்கள் என்று மட்டும் தெரிந்தது.

ரம்யாவுடன் அப்படிக் கதைத்திருக்கக் கூடாதென்று சட்டென்று உணர்ந்தவள் குரலைத் தாழ்த்தினாள். "எனக்கு நடந்த பிரச்சினை தெரியாம, இனி.... இனிக் கலியாணக் கதை எடுக்காதீங்கோ ...பிளீஸ்." சொல்லி முடிக்க முதல் அவள் கண்களிலிருந்து உதிர்ந்த கண்ணீர்த் துளிகளைக் கண்டு ரம்யா திடுக்கிட்டாள். ரோகிணியைச் சமாதானப்படுத்தி அவளுடைய அறைக்கு அழைத்துப் போய்க் கட்டிலில் அமர்த்தித் தானும் அமர்ந்தாள்.

"ரோகிணி, உனக்கு என்னதான் நடந்திட்டுது? நீ வந்ததிலயிருந்து நானும் பார்க்கிறன், நீ பழைய ரோகிணியாயில்ல. என்னெண்டு எனக்குச் சொல்லன்."

அவள் தன் அழுகையைச் சிரமப்பட்டு அடக்கினாள். "நானும் சொல்ல வேணுமெண்டுதான் நெடுக நினைக்கிறன். ஆனா... எப்பிடிச் சொல்லுறதெண்டு தான் தெரியேல்லை." மீண்டும் கண்ணீர் நிரம்பி வழிந்தது. ரம்யா அவள் முதுகைத் தடவி ஆறுதற் படுத்தினாள்.


"அண்ணை அறிஞ்சா என்ன நடக்குமோ தெரியாது. நான் தாய்லாந்து போன நாளிலயிருந்து ஏஜன்சிக்காரனில ஒருத்தன் எப்ப பாத்தாலும் என்னோட சேட்டை விட்டுக் கொண்டிருந்தான். நானும் பொறுத்துப் பொறுத்துப் பாத்தன். ஒரு நாள் ஆக்களுக்கு முன்னால அவன்ர கன்னத்தில ஒண்டு போட்டிட்டன். அதுக்குப் பிறகு அவன் எனக்குக் கிட்ட வரேல்லை. வேணுமெண்டே என்னை இங்காலை அனுப்பாமல் இழுத்தடிச்சுக் கொண்டிருந்தாங்கள். ஒரு நாள் நான் தனிய அறையில இருந்த நேரம் அவன் உள்ளுக்கு வந்து கதவைப் பூட்டீற்று...... என்னை..... ஐயோ... அதை என்ரை வாயாலை எப்பிடிச் சொல்லுறது?..... என்னை அவன் பழி வாங்கீட்டுத் தப்பியோடீட்டான்........."

அவள் மீண்டும் முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள். அவள் உடல் பலவீனமடைந்தது போல் நடுங்கிக் கொண்டிருந்தது. ரம்யா பிரமை பிடித்தவளாய் ரோகிணியையே பார்த்துக் கொண்டிருந்தாள். எப்படி அவளுக்கு ஆறுதல் சொல்வதென்று தெரியாமல் தொண்டை அடைத்துக் கொண்டது.

இவர்களது உரையாடலாலும் ரோகிணியின் அழுகைச் சத்தத்தாலும் நித்திரையில்லாமற் புரண்டு கொண்டிருந்த ராகவனுக்கு நேரெதிர் அறையிலிருந்து வந்த ரோகிணியின் கதையைத் தெளிவாகக் கேட்ட பின் தலை சுற்றுவது போலிருந்தது. அதன் பின் அவனால் படுத்திருக்க முடியவில்லை.

"ரோகிணி இதை ஏன் முதலே எனக்குச் சொல்லேல்லை? ஆரவன் சொல்லு!"

திடீரென்று அறைக்குள் நுழைந்த ராகவனைக் கண்டதும் இருவருமே மிரண்டு போய் நின்றார்கள்.



"ஆருக்குச் சொல்லி என்ன பிரயோசனம்? என்ர கையில மட்டும் ஒரு துவக்கு இருந்திருந்தா அண்டைக்கே அந்த நாயைச் சுட்டுக் கொண்டிருப்பன்."

"இப்பவெண்டாலும் சொல்லு. அவன் எங்கையிருக்கிறானெண்டு. அவனை ரெண்டிலையொண்டு பாத்திட்டுத்தான் மற்ற வேலை."

ராகவனின் கண்கள் சிவந்து உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. ரோகிணி விரக்தியாகச் சிரித்தாள்.

"இப்ப அவனைக் கண்டு பிடிக்கிறதெங்கை? கண்டு பிடிச்சுத்தான் என்ன செய்யிறது? எல்லாம் உங்கடை வேலையாலைதான் எனக்கு இந்தக் கதி. நான் இயக்கத்திலை சேந்திட்டன் எண்டு அம்மா கத்தி, ஊரைக் கூட்டி...... எல்லாருஞ் சேந்து என்னை நரகத்திலை தள்ளிப் போட்டீங்கள். நான் இயக்கத்திலை



படிப்பகம்

போய்ச் செத்திருந்தாலும் எங்கடை இனத்துக்காக உயிரைக் குடுத்தனெண்ட சந்தோசத்தோடை போயிருக்கலாம். இப்ப துக்கம் போட்டு என்ன பிரயோசனம்?" அதற்கு மேல் ஒருவரும் ஒன்றும் கதைக்கவில்லை. நீண்ட அமைதிக்குப் பின் ரம்பா ரோகிணியைப் படுக்க வைத்து விட்டு ராகவனைத் தங்கள் படுக்கையறைக்குக் கூட்டிச் சென்றாள். மூன்று உள்ளங்கள் உறக்கமிழந்து பல்வேறுபட்ட சிந்தனைகளுடன் போராடிக் கொண்டிருந்தன.

(தொடரும்)

## நினைவிருக்கிறதா?

உங்களுடைய மருத்துவக் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து 20 டீ.எம். கட்டும்படி வந்திருந்ததே நினைவிருக்கிறதா? நீங்கள் மட்டுமல்ல கிட்டத்தட்ட எல்லோருமே கட்ட வேண்டி இருந்தது!

ஜேர்மனியிலுள்ள அதிகமான மருத்துவசாலைகள் புனரமைக்கப்பட்டு நவீன மயப்படுத்தப்பட வேண்டியுள்ளதாம். ஆனால் இதற்கான செலவை யார் ஏற்க வேண்டும் என்பது சமஷ்டிச் சட்டத்தில் தெளிவாக வரையறுக்கப்படாத நிலையில், செலவை ஏற்க பாயேர்ண் மாநிலம் தவிர்ந்த ஏனைய மாநிலங்கள் அனைத்துமே கடந்த மூன்று வருடங்களாக மறுத்து வருகின்றன. மாநில அரசுகள் இச் செலவைப் பொறுப்பெடுக்க வேண்டும் என்பதற்கான சட்ட முயற்சிகள் மாநில அரசுகளால் தோற்கடிக்கப்பட்ட நிலையில் வழமைபோல் சாதாரண மக்களாகிய நாங்கள் அடுத்த மூன்று வருடங்களுக்கு ஆண்டொன்றுக்கு 20 டீ.எம். கட்டவேண்டும். பாயேர்ண் மாநிலத்தில் வசிப்பவர்கள் தவிர!

ஜேர்மன் தொழிற்சங்கங்களின் இணையமான DGB இப் பணத்தைக் கட்டாமல் பகிஷ்கரிப்புச் செய்யும்படி கேட்டுள்ளது. இதைக் கட்டமாட்டோம் என்று பலரும் வழக்காடவிருக்கிறார்கள்.

கட்டமறுப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று சுகாதார அமைச்சர் Seehofer தெரிவித்துள்ளார்.

இதுவரையிலும் 60 வீதமானவர்களே கட்டியுள்ளதால் இனிவரப்போகும் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் பணத்தைக் கட்டும்படி கேட்டு Amtsgericht இலிருந்து கடிதம் வரலாம்!



### சுடுகாடு.

பாதைகள் மாறிப் பயணங்கள்
செய்தாலும்
பயணம் முடிவது என்றும்
ஒரே இடத்தில்தான்.

-யசோ-


padippakam
படிப்பகம்

padippakam



# கேள்வி பதில்

சீ. ஆர். பிராங்போர்ட்...

கடந்த நாதத்தில் பிரச்சாரப் பீரங்கிகளாக ஒவ்வொரு தமிழரும் மாறவேண்டும் என்று கூறினீர்கள். இதை எப்படிச் செய்யலாம்?

த.நா:

தமிழரின் உண்மை நிலைபற்றி, உங்கள் தாய்நாட்டின் சரியான சரித்திரம் பற்றி இங்குள்ள பத்திரிகைகளுக்கு, சஞ்சிகைகளுக்கு, தொலைபொலிபரப்பு நிலையங்களுக்கு எழுதலாம். பத்திரிகைகளில் அல்லது தொலைக்காட்சிகளில் வரும் செய்திகளுக்கு விமர்சனங்களையோ அல்லது மறுப்புகளையோ தெரிவிக்கலாம். ஜேர்மனில் மட்டுமல்லாமல் ஆங்கிலத்திற்கூட இவற்றை எழுதி அனுப்பி வைக்கலாம்;.

**சில தொலைபொலிபரப்பு நிலையங்களின் விலாசங்கள்**

Nachrichtenfernsehen
Tauben str 1
10117 Berlin

SAT 1
Otto Schot str 13
55127 Mainz

ARD
Bertram str 8
60010 Frankfurt a.M

RTL
Aachener str 1036
50858 Köln

ZDF
Postfach 4040
55100 Mainz

WDR
Appelhofplatz 1
50667 Köln

மேலதிக அங்கத்தவர்களைத் தேடித்தரும் அங்கத்தவர்களுக்கு, காப்புறுதி நிறுவனமான யுழுமுவின் இரண்டாவது பரிசான சிறீலங்காவில் சுற்றுலா என்பதைக் கண்டித்துத் தான் அந்த நிறுவனத்துக்கு ஒரு கண்டனக் கடிதம் அனுப்பி வைத்திருப்பதாக ஒரு நண்பர் தெரிவித்திருப்பது உற்சாகத்தைத் தரும் ஒன்றாக அமைகிறது.

An der Redaktion,
Bleib Gesund,
Postfach 25 51,
61295 Bad Homburg

Sehr geehrtet Damen und Herren von der Redaktion,

Ausgabe 1/98

Erholungsurlaub in Srilanka steht zweite auf der Reihe als Belohnung fuer Mitglieder die AOK weiter empfohlen. Grüne Tropeninsel mit Wundervolle Badestrände.....!

Aber in Wirklichkeit das ist ein Alptrauminsel mit Blutbad.

Hiermit Ich schicke euch Ausschnitten aus Zeitungen und Zeitschriften die ich bei mir hätte.

Bitte raus finden Sie die wahre Gesicht vor Sie Jemand dort schicken für Erholung aber es ein Alptraum werden werde.

Ich, selbst bin ein Tamilen aus Srilanka.( bin ein Deutscher Bürger jetzt) und werde versichten eine Reise nach Srilanka. Ich bin ein AOK Mitglied. Aber es ist Schade das AOK hat kein Rücksicht für die Gesundheit ihr Mitglieder.

Ohne Verständnis für eure Gefährliche Entscheidung für Srilanka,

பெயர், விலாசம், திகதி.



படிப்பகம்

padippakam




# சிறுவிளார்ன் வரதனின்

நெறிப்படுத்துதலில்

**லக்ஷி ரவி, கனகராயர், ஆரபி**

ஆகியோரை அறிவிப்பாளராகக் கொண்டு

*பாடல், ஆடல், பாரம்பரிய கலைகள்*

என்பவற்றுடன்

*ரங்கநாதன், பாலசுப்பிரமணியம், சிவகுமாரன்*

ஆகியோர் வழங்கும்

இதயதாகம் உள்ளவரே தருக

**ஈசா, பாலா, சொர்ணன்**

இணைந்து நடிக்கும்

## இதயப் பிணைப்பு

தொடர்படம்

என்பனவற்றை உள்ளடக்கி

**அரியாலையூர் கேதீஸ்வரனின்**

*கணணித் தொழில் நுட்பத்தில்*

**நம்மவரால் நம்மவர்களைக் கொண்டு நம்மவருக்காக உருவாக்கப்பட்டுத் தேன் சொட்டி விரிந்திருக்கிறது**

*கலைவளர் கலாலயத்தின்*

# பூவிதழ்

தொடர்புகளுக்கு:– வரதன், 069–232517




படிப்பகம்

padippakam



கடந்த ஒலியில் வெளியான நீங்கள் புத்திசாலியா என்ற கேள்விகளுக்கு ஒரேயொருவர் மட்டுமே பதில்களை அனுப்பியிருந்தார் என்பது கவலைக்குரியதே1

இதோ சரியான பதில்கள்:

1. மொத்தம் மூன்று தடவை. 1வது தடவை கறுப்பு ஆகட்டும். இரண்டாவது தடவை சிவப்பு ஆகட்டும். 3வது எப்படியும் ஒரு சோடியைத் தரத்தானே வேண்டும்.
2. 32 இலக்கங்கள் இரட்டிப்பாக வருகின்றன.
3. 14ம் திகதியன்று.
4. (5 X 5) – 5
5. பாலூட்டி
6. P தவிர்ந்த மற்றைய எழுத்துக்கள் அனைத்தும் கிழமை நாட்களின் ஆங்கில முதலெழுத்துகள்.
7. ஒரு மணித்தியாலம் 5 நிமிடத்தால். நேரம் 1.05 காட்டும் போது.
8. எழுதுகோல் 90 பெனிக். அழிரப்பர் 10 பெனிக்.
9. 21. ஏனைய மூன்று இலக்கங்களும் தம்மைத்தம்மாலேயும் ஒன்றாலேயும் மட்டுமே வகுபடும்.
10. சொல்...... கேள்விகள் இடம் மாறியுள்ளன.

## கல்லறைகள் பேசுகின்றன.

என் தோழனே!
நீயும் மாறிவிட்டாய்
மனிதநாகரீகங்களுக்கே மரண ஊர்வலம் நடத்தும்
தேசப் பகைவர்களோடு சேர்ந்து விட்டாய்
காலங்கள் மாறினாலும் கோலங்கள் மாறக்கூடாது
என்று சொன்ன நீயே இன்று
காலத்தின் மாற்றத்தினால் உன் கோலத்தை
மாற்றி விட்டாய்
ஒன்றை மட்டும் உணர்ந்து கொள்
நீயும் ஒருநாள் எம் இருப்பிடம் நோக்கி வருவாய்
அப்போது எங்களின் ஆத்மா
உன்னை மன்னிக்காது.

பாபு - டார்ம்ஸ்டாட்



படிப்பகம்

padippakam



அடிமைத்தனத்தை விரும்பாமல் சொந்த மண்ணிலேயே அகதிகளாகிவிட்ட எமது சொந்தங்களுக்கு எம் அனைவரதும் சார்பில் உதவுவதற்காக எங்கள் தமிழ்மன்றம் ஆக்கபூர்வமான சில முயற்சிகளை எடுத்துவருகிறது என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகிறோம்.

இந்த முயற்சிகள் கைகூடும் பட்சத்தில், அகதிகளான எமது சொந்தங்களின் கைகளில் நேரடியாகக் கிடைக்கும்படியாக முதலிற் பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான ஆடைகளை அனுப்பி வைக்கலாமென்று திட்டமிடப்பட்டுள்ளது.

உங்களிடம் மேலதிகமாக இருக்கும் ஆடைகளை சுத்தமாகத் தோய்த்து மடித்துத் தயாராக வைத்திருக்கும்படி மன்றச் செயற்குழு உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறது.

யாரிடம், எப்பொழுது அவற்றை நீங்கள் தரலாம் என்பது பின்னர் அறிவிக்கப்படும்.

இங்கிருந்து அனுப்பி வைக்கவும், இலங்கையில் அவற்றை சுங்கத்திலிருந்து எடுக்கவும், அகதிகளுக்கு அனுப்பிவைக்கவும் ஆகும் செலவுகளுக்காக முடிந்தவர்கள், விரும்பியவர்கள் தங்களாலான சிறு தொகையை மேற்படி ஆடைகள் தரும்போது தந்துதவலாம் என்று விதந்துரைக்கப்படுகிறது.

உங்கள் பணியில்

தமிழ்மன்றச் செயற்குழு

ஜெரிசன்: கீழ இருந்து நேற்று ஒரு மார்க் எடுத்தேன்.
ஜேந்திரா: அது என்னுடைய ஒரு மார்க் குத்தி. தாடா.
ஜெரிசன்: நான் எடுத்தது 2 ஐம்பது பெனிக் குத்திகள்.
ஜேந்திரா: அது கீழ விழுந்தபோது 2ஆக உடைந்து போயிருக்கும், தா.

-யசோ-



படிப்பகம்

padippakam



# பிராங்பேர்ட் தமிழ் மன்றத்தினால
# 1998 வரை மேற்கொள்ளப்பட்

| விபரம் | வரவு | |
|---|---|---|
| 01-12-1997இல் கையிருப்பு | 143,17 DM | தபாற் செ |
| 01-12-1997இல் வங்கியிருப்பு | 104,51 DM | மண்டப வா |
| ஆதவா ஆசியன் சென்றர் | 500,00 DM | குளிர்பானா |
| முருகன் ஆசியன் சென்றர் | 200,00 DM | காரியாலய |
| அம்பாள் ஆசியன் சென்றர் | 100,00 DM | வீடியோ & |
| Y.K இம்போட் | 200,00 DM | ஆண்டு வி |
| S&S இம்போட் | 100,00 DM | மண்டப ஓ |
| MODE COLLECTION | 600,00 DM | தமிழ்நாதம் |
| மகாராணி ஆசியன் சென்றர் | 100,00 DM | வங்கி கட் |
| யாழ் ரேடர்ஸ் | 200,00 DM | இசைக்குழு |
| விளம்பரம் | 50,00 DM | மீளளிக்கப் |
| போட்டோ பிரதி | 5,00 DM | தமிழ் மன் |
| 97ம் ஆண்டுக் கணக்கிலிருந்து | 7,03 DM | நொத்தார் |
| 96ம் ஆண்டுப் பத்திராதிபர் | 72,00 DM | 28-02-1998 |
| மன்ற அங்கத்தவர் சந்தா | 1.660,00 DM | 28-02-1998 |
| தமிழ் நாதம் | 477,00 DM | |
| இசைக்குழு | 800,00 DM | |
| கலைவளர் கலாலயம் அன்பளிப்பு | 100,00 DM | |
| சின்றுண்டிச்சாலை | 2.068,00 DM | |
| மொத்தம் | 7.486,71 DM | |
| 1997ம் ஆண்டில் மொத்த மீளளிக்கப்படவேண்டிய கடன் | | |
| 1998ம் ஆண்டில் மீளளிக்கப்பட்ட கடன் | | |
| 28-02-1998இல் மீளளிக்கப்படவேண்டிய கடன் | | |

ஒப்பம்: ஒப

பொருளாளர்: சி. ரவிசங்கர் கல

திகதி: 28-02-1998 இடம்: பிராங்பேர்ட் திக



படிப்பகம்

padippakam



# 01-12-1997 தொடக்கம் 28-02-
# வரவு செலவுத் தொகுப்பு.

| விபரம் | செலவு | | |
|---|---|---|---|
| | | | |
| | 52,10 DM | | |
| ௧ | 1.537,40 DM | | |
| | 630,44 DM | | |
| லவு | 8,79 DM | | |
| ைகப்படம் | 292,70 DM | | |
| ரிசில்கள் | 1.149,81 DM | | |
| 5 | 25,00 DM | | |
| ாப்பு & ஆண்டுமலர் | 445,53 DM | | |
| ம் | 15,39 DM | | |
| ாள்வனவு | 650,00 DM | | |
| கடன் | 2.373,40 DM | | |
| ுறை வாடகை | 200,00 DM | | |
| லவு | 50,00 DM | | |
| கையிருப்பு | 54,43 DM | | |
| வங்கியிருப்பு | 1,72 DM | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | 7.486,71 DM | | |
| | 2.787,13 DM | | |
| | 2.373,40 DM | | |
| | 413,73 DM | | |

ப்பரிசோதகர்: சி. சற்குணநாதன்

28-02-1998 இடம்: பிராங்பேர்ட்

padippakam



பிராங்பேர்ட்டிலும் சுற்றியும் வாழ்வதாகக் கணிப்பிடப்பட்டுள்ள எழுநூறுக்கும் அதிகமாக




தமிழர்கள் அல்லது முன்னூறுக்கும் அதிகமாக குடும்பங்கள் மத்தியில் கிழமைக்கு ஒரு தடவை பலரும் கூடும் விதத்தில் ஏதும் ஒரு நிகழ்வு நடக்கத் தான் செய்கிறது. இந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் எல்லோரும் கலந்து கொள்கிறார்கள் என்று கூறமுடியாது தான். இருந்தாலும் தனியார் விழாக்களான பிறந்தநாள் திருமணம், பூப்புனித நீராட்டு விழா போன்ற நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும் குறைந்தது 250 பேராவது கலந்து கொள்ளும் சூழ்நிலை ஜேர்மனி முழுவதும் பரந்து வாழும் தமிழ்ச் சமுதாயம் ஒவ்வொன்றின் மத்தியிலும் இருக்கத்தான் செய்கிறது. மண்டபங்கள் எடுக்க முடியாத சூழ்நிலையால் பலரைத் தவிர்த்து சிலரைத் தேர்ந்து விழாக்களை நடத்த வேண்டிய கட்டாயத்துக்குப் பலரும் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். (மண்டபம் எடுக்க முடியாத நிலைக்குக் காரணமே தன் தலையில் யானை மண்ணை வாரி அள்ளிப் போட்டது போன்றது தான் என்பதும் உண்மையே) இது தனியார் விழாக்களுக்கு மட்டுமல்ல. பொது நிகழ்வுகளுக்கும் இப்படியான சூழ்நிலை தான்.

பிராங்பேர்ட்டைப் பொறுத்தவரையில் தமிழ்மன்றம், இந்து மன்றம், உலகத் தமிழர் இயக்கம் யா ஆனாலும் நடத்தும் நிகழ்ச்சி ஒன்று பல நூற்றுக்கணக்கானோரை வரச் செய்து விடுகிறது ஆனால் மண்டப நிலைமைகள், இருக்கை வசதிகள் என்பன போதியனவாக இல்லை என்பது வருத்தத்துக்குரிய ஒன்றாகக் காணப்படுகிறது.

தனியார் நிகழ்வுகளுக்காகிலும் அழைக்கப்படுபவர்கள் எண்ணிக்கையைக் குறைக்கலாம். பொது நிகழ்ச்சிகளுக்கு?

நுழைவுக்கட்டணம் வைப்பதால் இப் பிரச்சினை தீருமா?

அப்படியும் நானூறு பேர் வரை வந்தால்?

எவ்வளவு இருக்கை வசதிகளுண்டோ அவ்வளவு பேரை மட்டுமே உள்ளே விடுவதால்...?

அங்கத்தவர்களுக்கு மட்டும் அனுமதி என்று சட்டம் இயற்றினால்......?

இவை எவையுமே நடைமுறைக்கு சாத்தியப்படுமா?

ஆனாலும் அது எதுவானாலும் நிலையான தீர்வு எது?

சிறுவர், வயதுவந்தோருக்கான வகுப்புகள் நடத்த, ஐம்பது பேர் கூடி ஒரு பஜனை செய்ய, 1 தமிழர் கூடி ஒரு கலந்துரையாடல் நடத்த, ஐநூறு பேர் வரையிலும் கலந்து கொள்ள கூடியதான கலை நிகழ்வொன்றை நடத்த, ஹவுஸ் மாஸ்ற்ர் கத்தப்போறான் என்ற நினைவே வராமல் கல்யாண வீடொன்றை கலகலப்பாக நடத்த............

............சிறுவர் ஓடியாடி விளையாடக் கூடியதான சிறு நிலத்துடன், பின்னணிக் காட்சிக அமைக்கக் கூடியதான மேடையுடன், நிரந்தரமாக எமக்கான ஒலி ஒளி சாதனங்களைப் பூட்டி வைத்திருக்கத்தக்கதாகப் பிராங்பேர்ட் தமிழருக்கே உரித்தான ஒரு தமிழர்நிலைய வேண்டாமா? அதற்கான ஆயத்தங்களை இன்றே செய்தால் இன்னும் ஐந்து ஆண்டுகளிலாவது.



படிப்பகம்

padippakam




தமிழ் மன்றத்தின் பத்தாவது ஆண்டு சிறப்பாக நடக்க
எம் இதய பூர்வமான வாழ்த்துகள்!

# M.R. MODE COLLECTION

விசேட தினங்களிலும்

பண்டிகை நாட்களிலும்

விழாக்கோலம் பூண்டிட

குழந்தைகள் பெண்களுக்கான

பஞ்சாபி உடைகள்

றெடிமேட் ஆடைகள்

Party Suits

புதுரக பல்லின சேலை வகைகள்

என்பனவற்றைத்

தமிழிலேயே கதைத்துத் தெரிவு செய்து

வாங்கும் வசதிகொண்ட

# M.R. MODE COLLECTION

Taunus str 52-60

60329 Frankfurt a.M

069-251308




படிப்பகம்

padippakam



## அறுவை.......



(........சர்வதேசக் கணணிவலையில் இருந்து)

தொகுத்துத் தருபவர்:
சிறீ. வீஸ்பாடன்

அவர்: நான் அந்த வீதியாலை போகலாமா?
பொலிஸ்: சும்மா போறதுக்கு என்னை ஏன் கேக்கிறாய்?
அவர்: வாகனம் போகக் கூடாது எண்டு போட்டிருக்கு, என்ரை பேர் மயில்வாகனம். அதுதான்..........

☺ ☺ ☺

ஆசிரியை: பாம்பு ஏன் நெளிந்து நெளிந்து போகிறது?
மாணவன்: அதன் போய் வ்றெண்ட் பாக்கிறதாலை நெளியுது.
ஆசிரியை(கோபமாக): அப்ப பறவை ஏன் பறக்கிறது?
மாணவன் : நான் கல் எறிஞ்சபடியால
ஆசிரியை: ???

☺

சீடன்: குருவே நான் சித்தியடைய என்ன செய்யவேண்டும்
குரு: முதலில் உன் சித்தப்பாவைக் கொல்ல வேண்டும்!

☺ ☺ ☺ ☺

அமெரிக்கன்: (பெருமையாக) நாங்கள் செவ்வாய்க் கிரகத்திலேயே கால் பதித்துவிட்டோம்.
இந்தியன்: (அலட்சியமாக) நாங்கள் சூரியனிலேயே கால் பதித்துவிட்டோம்!
அமெரிக்கன்: முட்டாள் மாதிரிப் பேசாதே! எரிந்து விடுவாய்.
இந்தியன்: (அமைதியாக) நாங்கள் இரவில் தான் சூரியனில் இறங்குவோம்
அமெரிக்கன்: ???

☺ ☺ ☺

நீதிபதி: மொத்தம் நான்கு தடவைகள் நீ கடை உடைத்துத் திருடியிருக்கிறாய்?
திருடன்: ஆம்
நீதிபதி: என்ன திருடினாய்?
திருடன்: ஒரு புடைவை
நீதிபதி: என்ன ஒரு புடைவையா? பிறகேன் நான்கு தடவைகள் உடைத்தாய்?
திருடன்: முதல் மூன்று தடவைகளில் எடுத்த புடைவையின் நிறம் என் மனைவிக்குப் பிடிக்கவில்லையே!

☺ ☺ ☺

அவன்: காந்தித்தாத்தாவின் தலை ஏன் வழுக்கையாக இருக்கிறது தெரியுமா?
இவன்: 1946 – 47ல் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக அவர் கடும் தவம் இருந்தார். தாமதமாகியே கடவுள் தோன்றி என்ன வரம் வேண்டும் என்று கேட்டதால் கோபமுற்ற காந்தித் தாத்தா ஒரு மயிரும் வேண்டாம் என்றார். அது தான் வழுக்கை. ☺



படிப்பகம்

padippakam



# கரை தேடும் அலைகள்

சகி தரும்




...ன்றுபடும் நாம் ஈடுபடும் ...ரியங்களில் பெரும் சிரத்தை எடுக்க வேண்டிய தேவையிராது. மனம் சிந்தனையில் ஈடுபட்டாலும் மெய் வழமையான கருமத்தைச் செக்குமாடு போல் சீரே செய்து கொண்டிருக்கும். நாம் ஒரு பிரச்சினையில் சிக்கும் போது, மனம் ஒரு நிலையிலில்லாமல் சிந்தனை முழுக்க அந்தப் பிரச்சினையைச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்க, எவ்வளவுதான் முயன்றாலும், கைகால்கள் வேலை செய்வதாக நடித்துக் கொண்டிருக்குமே தவிர முழுமையாக ஈடுபடாது.

அன்று ராகவன் தன் தொழிற்சாலையில் எவ்வளவோ முயன்றும், மனதை வேலையில் ஒரு முகப்படுத்த முடியாமல் திண்டாடிக்கொண்டிருந்தான். ரோகிணிக்கு நடந்த கதியை முதல்நாளிரவு கேள்விப்பட்டதிலிருந்து அவன் அவனாக இல்லை. நித்திரையின்மை வேறு கண்களில் எரிச்சலையுண்டாக்கிக் கொண்டிருந்தது. இதை வேலையின் போது கேதீஸ் கவனித்தான்.

"என்னடாப்பா கண்ணெல்லாஞ் சிவந்திருக்கு, ஏதுஞ் சுகவீனமோ?"

"ஓம். ராத்திரியிலையிருந்து ஒரே தலையிடி"

ராகவன் தன் வாழ்க்கையில் என்ன சிக்கலிருந்தாலும் அதைக் கேதீஸிடம் மனம் விட்டுக் கதைப்பான். இது ரோகிணி சம்பந்தப்பட்ட பிரச்சினையென்பதால் அவனுடன் கதைக்கத் தயக்கமாயிருந்தது. இருந்தும் கேதீஸ் ரோகிணிக்குப் பேசிய கல்யாணத்தை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் ஏதாவது சாக்குச் சொல்லி இன்றே அதுபற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டுமென நினைத்துக் கொண்டான். வேலை முடிந்து இருவரும் வெளியேறியபோது ராகவன் கேதீஸைத் தன்னுடன் வரும்படி அழைத்தான்.

வண்டி ஆர்முடுகிச் சார்பு வேகத்தில் போய்க் கொண்டிருந்தது. நேரம் இரவு பத்துமணிக்கு மேலாகிவிட்டதால் வீதியில் வாகனங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓடிக் கொண்டிருந்தன. ராகவன் நேரடியாகப் பேச்சை ஆரம்பித்தான்.

"நேற்று அந்தக் கல்யாணவிசயம் பற்றி ரோகிணியோட கதைச்சனான்.... அவளுக்கு அவ்வளவு விருப்பமில்லை.. மாப்பிள்ளையைப் பிடிக்கேல்லை எண்டில்லை. இப்போதைக்குத் தனக்குக் கலியாணமே வேண்டாமெண்டு நிக்கிறாள்."

"கல்யாணமென்றது கட்டாயப்படுத்திச் செய்யிற விசயமில்லை. எண்டாலும் இது ஒரு நல்ல சம்பந்தமெண்டதாலை கொஞ்சம் புத்திசொல்லிப் பார்"

ராகவன் விரக்தியாய்ச் சிரித்தான்.

"என்ன சாத்தான் வேதம் ஓதுறதெண்டு பாக்கிறியா? நானும் பொம்பிளைச் சகோதரங்களோடை பிறந்தனான். ஒரு தமையன்ரை பொறுப்புகளைப் பற்றி எனக்கும் தெரியும்"

"ச்சீ அப்பிடி.. நினைக்காதை...... ரோகிணியோடை இனிக் கதைக்கப் பிரயோசனமில்லை. ஒவ்வொருத்தற்றை தலையிலை என்ன எழுதியிருக்கோ


படிப்பகம்

padippakam



அதுதான் நடக்கும். கபிலன் வீட்டுக்காரருக்கு எப்படியாவது சொல்லி விடு. ஏன் இன்னும் காலத்தைக் கடத்தி நம்பிக்கையை வளர்ப்பான்? வெறி சொறியப்பா. இதுக்கு மேலை நான் என்ன செய்ய?" ராகவன் குரலில் வேதனை இழையோடியது. அதற்கு மேல் இருவரும் ஒன்றும் பேசவில்லை.

கேதீஸ் இறங்கி விடை பெற்றுச் சென்றபோது ராகவன் தானும் அவனுடன் சிறிது நேரத்தைக் கழித்துவிட்டு வீடு சென்றால் சிறிது ஆறுதலாயிருக்குமென்று நினைத்தான். ரோகிணியின் கண்ணீரையும் ரம்யாவின் சோகத்தையும் எதிர்நோக்க பயந்தான். கபிலனின் சம்பந்தத்தை இழந்தது வலிய வந்த சீதேவியைக் காலால் உதைத்தது போல் மனதில் வலித்தது. ரோகிணியின் எதிர்காலத்தை எண்ணியெண்ணிக் குழம்பி எந்த முடிவுமெடுக்க முடியாமல் உள்ளம் தடுமாறியது. எல்லாவற்றிற்கும் கேதீஸின் அண்மை ஆறுதலைத் தருமென நம்பித் தன் வண்டியை ஒரு ஓரமாய் நிறுத்தினான்.

கேதீஸ் உள்ளூர ஆச்சரியத்துடன் ராகவனையும் அழைத்துக் கொண்டு மேலே சென்றான். அவன் ராகவனுக்காகத் தேனீர் தயாரிக்கத் தண்ணீர் எடுத்தபோது ராகவன் மறுத்தான்.

"எனக்கென்னவோ மனஞ் சரியில்லை. பியர் இருந்தா எடு."

கேதீஸுக்குக் குழப்பமாயிருந்தது. அவனுக்கு அதைப்பற்றி எந்த வித ஆட்சேபனையும் இல்லை என்றாலும் நல்ல மனதோடு குடியை விட்டவன் ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு மேல் கடைப்பிடித்தவன், இதையே ஒரு ஆரம்பமாக் கொண்டு கெட்டழிந்துவிடுவேனோ என்று கவலைப்பட்டான். அவன் ராகவனின் பக்கத்தில் வந்தமர்ந்தான்.

"உனக்கேதும் பிரச்சினையெண்டா என்னோடை மனந்திறந்து கதை சொல்லேலுமெண்டாச் சொல்லு. நான் போர்ஸ் பண்ணேல்லை. பிரச்சினையைத் தாங்கேலாம அதுக்காக பியர் எடுக்கிற வேலையை விடு. அது எங்கை கொண்டு போய் விடுமெண்டு எனக்குத் தான் தெரியும். நீ இங்கையிருந்து தண்ணியடிச்சிட்டு போனா ரம்யாவும் என்னைத்தான் பிழையாய் நினைக்கும்."

"......................................"

"உனக்குத் தலையிடி வேறை. ஒரு ரீயைக் குடிச்சிட்டுக் கெதியா வீட்டை போய்ச் சேர்"

ராகவன் விரல்களால் நெற்றியைத் தாங்கியபடி முழங்கையைத் தொடையில் ஊன்றியபடி யோசனையில் ஆழ்ந்திருந்தவன் கைகளைத் தலைக்குப் பின்னால் கோர்த்தபடி சோம்பல் முறித்தான்.

"பெரிசாய் என்ன பிரச்சினை? உனக்குத் தெரியுந்தானே, ரோகிணியை இங்காலை கூப்பிட்டது அவளின்ரை விருப்பத்துக்கு மாறாய்த்தானே, அதுதான் இப்ப என்னோடை சண்டை பிடிச்சுக் கொண்டு நிக்கிறாள். கலியாணக் கதையே எடுக்க விடுறாளில்லை. எனக்கெண்டா என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை."

"இந்தப் பொம்பிளையளை விளங்கிக் கொள்றதுக்குத் தனிய ஒரு வகுப்பு எடுக்க வேணும். சரி போகட்டும் விடு. கொஞ்சம் ஆளை விட்டுப் பிடி. கொஞ்ச நாள் போக எல்லாஞ் சரியாகிடும். கபிலன்ரை தகப்பனோடை நாளைக்குக் கதைக்கிறன். ஒருத்தரிலையும் குறை வராம ஏதாவது சாட்டுச் சொல்ல வேணும் அதோடை விசயம் முடிஞ்சுது. கதையை விடு."

கேதீஸைப் பொறுத்தவரை பிரச்சினையை மிகச் சாதாரணமாகத் தீர்த்து விட்டான். ராகவனுக்கோ உண்மையான நிலையைச் சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் மண்டைக்குள் வலித்தபடியே இருந்தது. ஒரு போத்தலென்று ஆரம்பித்து



படிப்பகம்

padippakam


இரண்டு மூன்றாகி நிலைமை கட்டுக்கடங்காமல் போய்விட்டிருந்தது. பியர் உள்ளே செல்லச் செல்ல உள்ளத்திலிருந்ததெல்லாம் வாய் வழியே சொல்லாய் வெளிவர மண்டைக்கனம் குறைந்து போனது போல் சற்றே அமைதியடைந்து அப்படியே அவன் உறங்கிப் போனான்.

கேதீஸுக்கு ராகவன் சொன்ன கதையைக் கேட்க ஆத்திரமாக இருந்தது. ராகவனின் குரல் இடைக்கிடையே தழுதழுத்தபோது அந்த முகந்தெரிய மிருகத்தின் கழுத்தையே நெரிக்க வேண்டும் போலிருந்தது. தனக்கே இப்படியென்றால் ஒரு சகோதரனின் நிலை எப்படியிருக்குமென்று அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. அவனுக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்று தெரியாமல் தவித்தான். இந் நேரம் ரம்யா ராகவனைக் காணாமல் கலவரமடைந்திருப்பாள். இவனோ தன் சொல்லைக் கேளாமல் அளவுக்கதிகமாகக் குடித்திருக்கிறான். இன்று ஒரு வித்தியாசமாகத் தான் நிதானமாக இருப்பது உள்ளூர அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ராகவனுக்கு ஒரு தேனீர் தயாரித்துக் குடிக்கப்பண்ணிய பின் ரம்யாவுக்குத் தொலைபேசியில் விடயத்தைத் தெரிவிப்பது நல்லது என்று முடிவெடுத்தான்.

நேரம் பத்தரைக்கு மேலாகியும் ரோகிணி பசியில்லை என்று சாப்பிட மறுத்ததால் ரம்யாவும் ராகவன் வந்த பின் ஒன்றாகச் சாப்பிடலாமென்று காத்திருந்தாள். இருவரும் யாழ்ப்பாணத்திலிருந்து ஜேர்மனி வரை பல விடயங்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்ததால் நேரம் போனதே தெரியவில்லை. நேற்றிரவு எல்லாப் பிரச்சினையையும் சொல்லி அழுதபின் ரோகிணி சற்றே ஆறுதலடைந்திருந்தாள். இங்கு வந்த பின் அவள் முகத்திற் படர்ந்திருந்த கருமை கொஞ்சம் குறைந்திருந்தது.

ராகவன் வழமையாக வரும் நேரத்தின் பின் ரம்யா அடிக்கடி கடிகாரத்தையே நோக்கியபடியிருந்தாள். நேரஞ் செல்லச் செல்லப் படபடப்பு அதிகித்தது. தெருவை நோக்கியிருந்த யன்னலில் நின்றபடி வெளியே பார்வையைச் செலுத்தினாள். இரட்டை ஒளியைப் பாய்ச்சியபடி இடையிடையே தெருவிற் சென்று கொண்டிருந்த மோட்டார் வண்டிகளை உற்றுக் கவனித்தபடி இருந்தாள். வேகத்தைக் குறைத்து வரும் வண்டிகளைக் கண்டவுடன் மின்னும் ஆர்வம், அவை ராகவனுடையதல்ல என்று கண்டவுடன் வடிந்து விடும். ரோகிணியும் வந்து அருகில் நின்று கொண்டாள்.

"என்ன இன்னும் இவரைக் காணேல்லை?"

"ஒருவேளை இண்டைக்கு வேலை கூடவோ என்னவோ?" ரோகிணி சமாதானப் படுத்தினாள்.

"சீ, அப்பிடியொருநாளும் வேலை கூடவெண்டு பிந்துறதில்லை. நான் வந்த நாளிலையிருந்து எப்பவும் ஒரே மாதிரித்தான் வேலைக்குப் போறார், வாறார். இண்டைக்கு என்ன நடந்தது?"

ரம்யாவின் மனதில் வேண்டாத கற்பனைகள் வரத் தொடங்கின. 'ராத்திரி முழுக்க நித்திரை இல்லை! பிறகு பார்ட்டைமுக்கும் போனவர். இண்டைக்கு முழுக்க ஒழுங்கான சாப்பாடில்லை, காரோடேக்கை நித்திரை தூங்கி...... அக்சிடென்ட் ஏதும்..... கடவுளே..........'

ரோகிணியும் கலவரமடைந்தாள்.

"மெய்யே அண்ணி, ஆரும் பிரெண்ட்ஸிட்டைப் போயிருப்பாரோ என்னவோ?"

ரம்யாவுக்கு அப்போதுதான் கேதீஸின் நினைவு வந்தது.

"கேதீஸண்ணையும் இவரோடைதான் வேலை செய்யிறவர். அவருக்குச் சில நேரம்

padippakam



தெரிஞ்சிருக்கும்"

மீண்டும் கடிகாரத்தைப் பார்த்தவள், "நேரம் பன்னிரண்டாகுது..... அவர் இப்ப என்ன நிலைமையில இருக்கிறாரோ தெரியாது. எப்பிடி இப்ப போன் பண்றது?" ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் சங்கடப்பட்டபோது, இரவின் அமைதியில் தொலைபேசி பயங்கரமாய் அலறியது. கடவுளைப் பிரார்த்தித்தபடியே போய்த் தொலைபேசியை எடுத்து ஹலோ என்றாள் ரம்யா.

"ஹலோ ரம்யா, நான் கேதீஸ் கதைக்கிறன். ராகவன் இங்கை என்னோடை தான் நிக்கிறான். உங்களுக்குப் போன் பண்ணிச் சொல்லச் சொன்னவன். நீங்கள் தேடியிருப்பீங்கள்..........."

"ஓமோம்.. நாங்கள் எவ்வளவு பயந்து போயிருக்கிறம்! இப்பதான் அவருக்கு எங்கடை நினைவு வந்ததாக்கும். குடுங்கோ அவரிட்டை ஒருக்கா!"

"அது வந்து.... என்னெண்டா... உங்களுக்கு...எப்பிடிச் சொல்றதெண்டு தெரியேல்லை.... ராகவன் தனக்குக் கொஞ்சம் மனம் சரியில்லையெண்டு சும்மா என்னோடை கதைச்சுக் கொண்டிருந்தவன். அதுவும் என்ன பிரச்சினை எண்டு சொல்லுறானில்லை. சும்மா ஆறுதலுக்கெண்டு பியர் கொஞ்சம் எடுத்தவன்.. அதுதான் தலையிடிக்குதாம்........ காரோடேலாம இருக்கெண்டு.... கொஞ்சம் பொறுத்து நான் கூட்டிக் கொண்டு வாறன். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதேங்கோ அவனைப் பாத்துக்கொண்டிருக்காமப் படுங்கோ...."

அவளை மேலும் கதைக்க விடாமல் கேதீஸ் ரெலிபோனை வைத்துவிட்டான்.

ராகவனுக்கு ஏதும் விபரீதமாக நடந்திருக்குமோ என்று பயந்திருந்த ரம்யா தனக்குச் சொல்லாமல் அவன் கேதீஸிடம் போனதுமில்லாமல் நிதானமிழக்கும் வரை குடித்திருக்கிறானென்று தெரிந்ததும் கோபமும் அதிர்ச்சியும் கவலையும் என்று எல்லா உணர்வுகளாலும் பாதிக்கப்பட்டுக் கடைசியில் ஆற்றாமையால் அழுதாள். அவள் அழுகையைக் கண்டு ரோகிணிக்கும் கண்கள் கலங்கின.

"அண்ணி அழாதேங்கோ. எல்லாம் என்னாலை தானே" சொல்லி முடிப்பதற்குள் அவள் குரல் அழுகையால் வெடித்தது. சில நிமிடங்களில் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட ரம்யா குளியலறைக்குள் சென்ற ரம்யா மூக்கைச் சீறி முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தாள். ரோகிணி முகத்தைக் கைகளால் மூடித் தலை கவிழ்ந்தபடி இருந்தாள். ரம்யா அருகில் சென்று அவள் தலையைக் கோதினாள்.

"ரோகிணி, இங்கை உன்னாலை ஒரு பிரச்சினையும் வரேல்லை. ஏதே எல்லாருக்கும் கஷ்ட காலம் ஒண்டாய் வந்திருக்கு. எல்லாரும் உனக்கு நன்மை செய்யவெண்டுதான் நினைச்சவை. ஏதேதோவெல்லாம் நடந்திட்டுது."

ரோகிணி ஆத்திரத்தில் கத்தினாள்.

"பாருங்கோ அண்ணி, எனக்கு இவ்வளவு கஷ்டம் நடந்திருக்கு, நான் பேசாம இருக்கிறன். அண்ணை போயக் குடிச்சிட்டு என்னத்தை உளறிக் கொட்டினாரோ தெரியாது. இப்ப எல்லாருக்கும் பரப்பப் போறார். அதுதான் நடக்கப் போகுது. இந்த ஆம்பிளையளுக்கு உடம்பிலதான் பலமிருக்கேயொழிய மனம் சரியான பலவீனம் அதுதான் குடிக்க வெளிக்கிடுகிறது."

ரம்யா சமாதானப்படுத்தினாள்.

"அவர் உன்ர எதிர்காலத்தைப் பற்றிப் பெரிசாய்க் கற்பனை பண்ணியிருந்தவர். நேற்று தாங்கேலாத அதிர்ச்சியாய்ப் போயிட்டுது. ஆனால் கேதீசண்ணை சொன்னார் தன்னட்டை என்ன பிரச்சினையெண்டு சொல்லேல்லையாம். நீ வீணாய் ஒண்டு யோசிக்காம முகத்தைக் கழுவிச் சாப்பிட்டிட்டுப் போய்ப் படு. அண்ணை வரு வரையும் நான் இப்பிடியே இருக்கிறன்."



படிப்பகம்

padippakam



"எனக்கு இப்ப சாப்பாடு ஒண்டுதான் குறை. நான் போய்ப் படுக்கப் போறன்." விருட்டென்றெழும்பிய ரோகிணி தன்னறைக்குச் சென்று கதவைப் படீரென்று சாத்தினாள். முதல் நாள் நித்திரையின்மை, பசி, கவலை, எல்லாம் ஒன்றாயச் சேர்ந்து அழுத்தியதால் ரம்யா பலவீனமுற்றவளாய் ஒரு கதிரையில் சாய்ந்து அமர்ந்து ராகவனை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

❒ ❒ ❒ ❒

ரம்யா வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். அன்று ஜோமன் வகுப்பு இல்லாததால் ஆறுதலாயத் தெருவில் நடந்து வந்து கொண்டிருந்தாள். என்னதான் மனதிற் பிரச்சினைகளிருந்தாலும், இயற்கைக் காட்சிகளில் லயித்தபடி நடப்பது அவளுக்குப் பிடித்தமானதொன்று. மரங்களிலிருந்த இலைகளெல்லாம் உதிர்ந்து ஒன்றிரண்டு இலைகள் இன்றைக்கோ நாளைக்கோ என்று தொங்கிக் கொண்டிருந்தன. வானம் சாம்பல் பூத்தது போல் தெளிவில்லாமல் பரந்து தெரிந்தது. சூரியன் ஒரு மூலையில் தே□வாரின்றி அழுது வடிந்துகொண்டிருந்தது. இயற்கையே தன் வாழ்க்கையின் இன்றைய நிலையைத் தெறித்துக் காட்டுவதாய் உணர்ந்த அவளுக்கு மனதில் ஒரு வெறுமை படர்ந்தது.

சில நாட்களாய் ராகவன் குடித்துவிட்டு வர, ரோகிணி அவனோடு சினக்க, அவன் ரம்யாவோடு கொதிக்க, ஏதாவதொரு சிறிய காரணத்துடன் பிரச்சினை பூதாகரமாகிவிடும்.

ரம்யா சில வேளைகளில் ரோகிணியைக் கண்டிக்க, அவள் தன் கோபத்தைச் சாப்பாட்டிற் காட்ட ரம்யா ரோகிணியுடன் கதைப்பதையே குறைத்துக் கொண்டாள். மொத்தத்தில் அந்த வீட்டிலிருந்த கலகலப்பெல்லாம் எங்கோ ஓடி ஒளிந்து விட்டிருந்தன.

பனிக்கால மேகம் விலகிச் சூரிய ஒளி பூமியிற் பாயும் போது மொட்டை மரங்கள் தளிர்த்துப் பூத்துச் சொரிவது போல் தங்கள் வாழ்க்கையிலும் வசந்தம் ஒரு நாள் வருமென ரம்யா காத்திருந்தாள்.

(தொடரும்)

திருடன்1: நீ திருடிய பெட்டிக்குள் என்ன இருந்தது?
திருடன்2: தெரியாது. நான் இன்னமும் திறந்து பார்க்கவில்லை.
புதுவருஷத்துக்குத் திறந்து பார்ப்பம் என்று வைத்திருக்கிறேன்.

-யசோ-

ஒருவன்: சுரேஸ் சிகரட் பிடிக்காமல் விட்டு 2 வருடங்களாகிவிட்டது உனக்குத் தெரியுமா?
மற்றவன்: எப்படி அவனால் அது முடிந்தது?
ஒருவன்: அவன் இறந்து போய் 2 வருடங்களாகிவிட்டது அதனால்த்தான்.

-யசோ-

padippakam



# மன்ற ஆண்டுவிழா

## ஒரு பார்வை...

புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் தமிழனுக்கு உரிய கலை, கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியங்களைக் கடைப்பிடிக்கும் நோக்குடன் ஆங்காங்கே மன்றங்கள், சங்கங்கள் தோன்றிய வண்ணமே இருக்கின்றன. அவற்றினூடாக பல நிகழ்ச்சிகளும் நடந்த வண்ணமே இருக்கின்றன. அன்றாடம் சினிமாவை திரை அரங்கிலும், வீட்டுத் தொலைக்காட்சியிலும் பார்த்து ரசிக்கும் எம்மினம் ஏதாவது ஒரு வித்தியாசமான முறையில் அமையும் நிகழ்ச்சிகளை ரசிக்கும் ஒரு பகுதி மக்களாகவும், எமது கலாச்சாரத்திற்கும் பண்பாட்டிற்கும் ஏற்ற வகையில் நாளைய சந்ததியினர் தலை நிமிர்ந்து வாழும் வகையில் நிகழ்ச்சிகள் அமைகின்றனவா? எனும் ஆவலுடன் எதிர் பார்த்து ரசிக்க வரும் மற்றொரு பகுதி மக்களாகவும் நிகழ்ச்சிகளுக்கு அணிதிரளுகின்றனர்.

மேலைநாட்டு நாகரீகங்களையும், கலாச்சாரத்தையும் சிந்தையில் கொண்டு நிகழ்ச்சிகள் ஆபாசமாக இருக்க வேண்டும் என்ற ஆவலுடன் விழாக்களுக்கு வருகை தரும் ரசிகர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்பேர்ப் பட்ட ஆபாச நிகழ்ச்சிகளை வாயளவில் எதிர்த்துப் போர்க் கொடி தூக்குபவர்களுள், இப்பேற்பட்ட நிகழ்ச்சிகளைக் கண்டு தம்மை அறியாமலே உணர்ச்சிவசப்பட்டு கைதட்டி பூரிப்படைபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்தக் காலகட்டத்தில்தான் பிராங்பேர்ட் தமிழ் மன்றத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவும் 41வது கலை நிகழ்ச்சியும் கடந்த 20.12.97 அன்று மாலை HAUS GALUS மண்டபத்தில் FRANKEN ALLEE 111, FRANKFURT. எனும் இடத்தில் பெருந்திரளான மக்கள் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

மாலை 4 மணிக்கு ஆரம்பமான கலை நிகழ்ச்சிகள் இரவு ஒரு மணிவரை நீடித்தது. நேரம் அகால நிலையை அடைந்தமையால் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டது போல் நிகழ்ச்சி முற்றுப் பெறாது, இறுதி நிகழ்ச்சியாகிய தமிழ் மன்ற இசைக்குழுவின் இசைவெள்ளம் இடை நிறுத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கான மண்டபம் அதிக பார்வையாளர்களை உள்ளடக்கக் கூடிய மண்டபமாக இருந்தமையால் ஏன் இந்தப் பெரிய அளவிலான மண்டபம் எனத் தோன்றினாலும், அக்கணிப்பு முற்றிலும் தவறு என்பதை நிகழ்ச்சி ஆரம்பமாகிய சிறிது நேரத்திலேயே உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. மண்டபம் நிறைந்த மக்கள் என்றமையால் தாமதித்து வந்தோர் வெளியேயுள்ள சிற்றுண்டிச்சாலை ஆசனங்களில் அமர்ந்து நிகழ்ச்சிகளை அரையும் குறையுமாக ரசிக்கும் நிலை ஏற்பட்டது. கடந்த காலங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கருத்திற் கொண்டு இந்நிகழ்ச்சிக்குரிய மண்டபத்தினை பெரிய அளவில்



படிப்பகம்

padippakam



எடுத்திருந்த போதிலும் இனி வரும் காலங்களில் எப்படி நிகழ்ச்சிகளை நடாத்துவது என்ற புதிய தலையிடியை மன்ற நிர்வாகத்தினருக்கு ஏற்படுத்தி இருக்கின்றது. இந்நிகழ்ச்சிக்கு 800க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மன்றத்தினால் நடாத்தப்படும் ஒவ்வோர் கலை நிகழ்ச்சியின் போதும் நிகழ்ச்சி அரங்கமானது ஈழத்துப் பெரியார்களை நினைவுகூரும் நோக்குடன் அவர்கள் பெயரும் திருவுருவப் படங்களும் தாங்கியிருப்பதுடன் அப் பெரியார்களைப் பற்றிய சிறப்புரையும் அமைவது வழக்கம். அந்த வகையில் அரங்கமானது இம்முறை ஆறுமுகநாவலர் அரங்கம் எனும் பெயரைத் தாங்கி கம்பீரமாகக் காட்சியளித்தாலும் நாவலரின் திருவுருவப் படத்தினைக் காண முடியவில்லை. அனைத்துக் கலைகளையும் உள்ளடக்கிய தமிழ் மன்றத்தில் ஓர் ஓவியக் கலைஞர் இல்லையா என எண்ணத் தோன்றியது.

மண்டப நுளைவாயிலிலேயே எமது கலாச்சாரத்தைப் பறை சாற்றி நின்றது சுடர்விடும் இரு குத்துவிளக்குகள். அந்தக் குத்துவிளக்குகளும் நிறைகுடமுமே முதலில் மக்களை வரவேற்றது. ஆறுமுகநாவலர் அரங்கத்தினையும் அரங்கின் ஒரு மூலையில் ஒளிவீசிக்கொண்டிருந்த வெள்ளிக்கிண்ணங்கள், பதக்கங்கள், கேடயங்களைப் பார்த்தவாறு விழாக் காண வந்த மக்கள் ஒருவரை ஒருவர் கண்டு தலையசைத்து முண்டியடித்து அவசரப்பட்டு முன்னாசனம் பிடிக்கும் வேளையிலும், நெற்றியிலே சந்தணப் பொட்டு இடுவதையும் மறக்கவில்லை.

நிகழ்ச்சி அமைப்பாளர்களில் பலரும் அறிவிப்பாளர்களும் பட்டு வேட்டிகளுடன் உலாவிக்கொண்டிருந்தார்கள். நிகழ்ச்சி 10 நிமிடம் தாமதித்துத் தொடங்கினாலும், தொடங்கிய உடனேயே சூடுபிடிக்கத் தொடங்கியது. அவை அறிவிப்பாளர் திரு கேதீஸ்வரன் அவர்கள் ஒலிவாங்கியைக் கையில் பிடித்ததும் வழமை போல் ஈழத்தில் உயிர் நீத்த பொது மக்களுக்காகவும், போராடி உயிர் நீத்த போராளிகளுக்காகவும் இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் இறை வணக்கமும் செலுத்தப்பட்டது. முதல் நிகழ்ச்சியாக மன்றச் சிறுமிகள் தமிழ் மொழி வாழ்த்தினையும் மன்ற கீதத்தினையும் பாடிச் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து திரு இ.யசோதரன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த மன்றத் தலைவர் திரு பா.பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையுரையாற்றினார். அவரது உரையில் ஓர் கலை நிகழ்ச்சியினை நடாத்துவதற்கு இன்று ஒரு மண்டபம் எடுக்கும் சிரமம் பற்றியும், அப்படி எடுத்து விட்டால் அம்மண்டபத்தினை எப்படிப் பராமரிக்க வேண்டும், மண்டபத்தினை எப்படித் துப்பரவாக வைத்திருக்க வேண்டும், மண்டபத்திற்கு வெளியே எதுவித வேண்டப்படாத சம்பவங்களும் இடம் பெறக் கூடாது என்றும் விளக்கமாகக் கூறினார். பின் மன்றம்

padippakam


1988 மார்கழி மாதம் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இன்று ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இவ் வேளையில் முன்பு மன்றத்தினை திருவாளர்கள் ஸ்ரீபதி, மனோகரன், சிறீதரன் ஆகியோர் முன் நின்று ஆரம்பித்து வைக்க திருவாளர்கள் சி.ஸ்ரீபதி, க.கனகராஜா் அவர்கள் மன்றத்தின் தலைவர்களாக இருந்து சேவையாற்றினார்கள் என்பதையும் குறிப்பிட்டார். அடுத்து இன்றைய கலை நிகழ்ச்சியை ஒழுங்கு படுத்திய கலைப் பொறுப்பாளர் திருமதி ரதி நித்தியானந்தன் அவர்களின் சளையாத உளைப்பு அளப்பரியது என்றதுடன், இலண்டன் மாநகரில் இருந்து வருகை தந்திருக்கும் 17 வயது நிரம்பிய செல்வி அமுதவாணி அன்பானந்தன் அவர்கள் வீணை இசையில் தேர்ச்சி பெற்றிருந்தாலும் அதேவேளையில் தனது பாடசாலைக் கல்வியிலும் அதி சிறந்த தேர்ச்சி பெற்று இலண்டன் வாழ் தமிழ் மக்களை மட்டுமல்லாது, எம்மையும் வியக்கச் செய்து எம்மினத்திற்குப் பெருமை தேடித்தந்தவர் என்றும், எமது மக்கள் வேறு கலைகளைப் பிள்ளைகள் பயில்வதனால் பள்ளிப் படிப்பு தடைபட்டு விடும் என்று கூறி ஒதுங்கி வாழும் வேளையில் அவற்றிற்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் இவர் ஓர் முன் உதாரணமாக அமைந்திருக்கின்றார் என்றும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து செயலாளர் திரு த.கிருஷ்ணதாஸ் அவர்கள் மன்ற ஆண்டு அறிக்கை வாசிக்க மன்றத் தனாதிகாரி திரு இரவிசங்கர் அவர்கள் நிதி அறிக்கையினை வாசித்தார்.

அதன் பின் செல்வன் சி.ரஜீவா அவர்கள் ஆறுமுகநாவலர் பற்றி கம்பீரமாக உரையாற்றினார். நிதழ்ச்சித் தொகுப்பாளர் திரு நித்தியானந்தன் அவர்கள் பார்வையாளர்களின் எதிர்பார்ப்பிற்கேற்ப நிகழ்ச்சிகளை துரித கதியில் அரங்கேற்றிக் கொண்டிருந்தமை பாராட்ட வேண்டிய ஒன்று.

செல்வி அமுதவாணி அன்பானந்தனின் வீணை இசையானது வாணியே வந்து தனது தெய்வீக இசையை வழங்கியது போன்ற இன்பத்தை இரசிகர்கள் அனுபவித்தனர். இன்னும் சிறிது நேரம் அந்த இசையை இரசிக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் அவர்களது மனதில் தோன்றியது. திலக நர்த்தனாலய ஆசிரியை திருமதி வசுந்தரா சிவசோதி அவர்கள் தயாரித்து வழங்கிய 'மால்மருகன் தேடிய மான்' எனும் நாட்டிய நடனத்தின் போது அவ்வாசிரியை தனக்கென்ற அறியாப்புகழைத் தேடிக் கொண்டார் என்பதைவிட அவரது மாணவிகள் பாத்திரப் படைப்புக்கேற்ப மெய்மறந்து ஆடி பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்து அவர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றமை ஆசிரியருக்கு அம்மாணவிகள் அளித்த பாதகாணிக்கை என்றே கூறவேண்டும். பக்கவாத்தியக் கலைஞர்களின் ஒத்துளைப்பே, பரதக்கலையின் உயிர்நாடி என்பதனை அவர்களும் எடுத்துக் காட்டத் தவறவில்லை.

திருமதி லக்ஷி ரவி அவர்கள் தயாரித்து வழங்கிய கண்ணீரில் காவியம் எனும் நவீன நாடகம் இரசிகர்களை மெய்மறந்து அழவைத்ததுடன், ஒரு கணம் ஈழத்து மண்ணுக்கே அழைத்துச் சென்றதை


படிப்பகம்

padippakam



ும் எம் மக்கள் படும் வேதனைகளை ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்பதற்கு ழியமைத்தது. அந்நாடகத்தில் நடித்த அனைவருமே கதையில் ஒன்றி டித்தது மட்டுமல்லாமல் இரசிகர்களையும் தம்முடன் ஒன்றி வரவழைத்தனர். கனை இழந்து ஒப்பாரி வைத்து அழுத திருமதி சுந்தரி ஜெயேந்திராவின் டிப்பு குழந்தைகளையே அழவைத்துவிட்டது. நாடகத்தில் நடித்த சிறுமிகள், ரு சிறிய கிராமத்துப் பெண்களின் பரிதாபக் காட்சியின் போது தங்க கையணிந்து வசதி படைத்தவர்களாகக் காட்சியளித்திருந்தார்கள். இவை ரணான பாத்திரப் படைப்புக்களே.

நிகழ்ச்சிகளின் இடையிடையே கலைப்பொறுப்பாளர் திருமதி த்தியானந்தன் தயாரித்து வழங்கிய சிறுமிகளின் மெல்லிசை நடனம் இடம் பற்று இரசிகர்களின் ஏகோபித்த கரகோசத்தைப் பெற்றுக் கொண்டது. அதே நரம் குறுகிய காலகட்டத்தில் இவ்வளவு சிறுமிகளையும் எப்படிப் பழக்கித் யார் செய்தார்? என்ற ஆச்சரியமும் ஏற்பட்டது. நிகழ்ச்சிகளின் டையிடையே போட்டிகளில் வெற்றி பெற்றவர்களில் முதற் பரிசினைத் ட்டிக் கொண்டவர்களின் பேச்சுக்களும் பாட்டுக்களும் இடம் பெற்றதுடன், வர்களுக்குரிய பரிசில்களும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பற்றவர்களின் பரிசில்களும் வழங்கப்பட்டது.

புகலிட வாழ்வில், புகலிட ஆக்கதாரர்களுக்கு முன்னுரிமை ளித்து ஊக்குவித்து வரும் விடயத்தில் தமிழ் மன்றம் முதற்படியில் ற்பதனால், பல ஆண்டு காலமாக பிராங்பேர்ட்டில் வெளிவந்து காண்டிருக்கும் 'இளைஞன்' எனும் சஞ்சிகையின் ஆசிரியர் சேகர் வர்களின் கேள்வி-பதிலின் தொகுப்பு ஒன்றினை அறிமுகம் செய்யும் கழ்ச்சியும் நடைபெற்று திருவாளர்கள் வண்ணை ஆனந்தன், தாஸ் வர்களின் புத்தகம் பற்றிய விமர்சனமும் இடம் பெற்றது.

இடைவேளையின் போது திரு பிரபாகரன் அவர்கள் நத்தார்த் தாத்தா வடம் தாங்கி ஆடிப் பாடி சிறார்களுக்கு பரிசுப்பொருட்களை வழங்கினார். கழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்துக் கலைஞர்களும் கௌரவிக்கப் டார்கள்.

தலைசிறந்த இசைக்குழு என்று தமக்கென்ற புகழைத் டிக்கொண்ட 'தமிழ் மன்ற இசைக்குழு' நேரம் காணாத காரணத்தால் புதிய டகர்களுக்கு மட்டும் அன்று பாடச் சந்தர்ப்பம் கொடுத்து சிறந்த புகழ் ற்ற பாடகர்கள் பாடாது ஒதுங்கிக் கொண்டார்கள். இதனால் இரசிகர் ட்டம் பல சிறந்த நிகழ்ச்சிகளைக் கண்டு களித்திருந்த போதிலும் நிறைவு றாத ஒரு விழாவினைக் கண்டோம் என்ற குறையுடன் கலைந்து சென்றனர். ழாவில் திருவாளர்கள் பாபு, தாஸ் ஆகியோரும் அறிவிப்பாளர்களாக கலந்து காண்டிருந்தாலும் அவர்களுக்குரிய சந்தர்ப்பம் மிகக் குறைவாகவே காணப் டது. மொத்தத்தில் இது ஓர் தமிழ்ப் பெருவிழா என்றே குறிப்பிட வேண்டும்.

-அமுதசுரபி-


படிப்பகம்

padippakam



## காதல் ஒரு இனிய விஷம்........

காதல் என்ற வேதனை, நாளும் என்ன சோதனை
காண வேண்டும் தேவனை, கேட்க வேண்டும் கேள்வியை
தேகம் எங்கும் மேவி நின்று ஓடுகின்ற ஜீவனே
வேறு வேறு பாதை தேடி விலகி இன்று போவதேன்
பூ விட்டுப் பூமாறித் தென்றல் போகுமோ.....
ஆண்மகனே நீ என்னைப் பிரிந்தால்
இப் பெண் மனம்தான் தாங்குமோ.....?

காதலினால் கனிந்த இதயங்கள் கண்ணீருக்கு சொந்தமாவது
என் காதல் என்பது தண்ணீரில் எரியும் கற்பூரம் போல்
வானம் இல்லாமல் நிலவு இல்லை அதேபோல்
நீ இல்லாமல் எனக்கொரு வாழ்க்கை இல்லை.....!

நீர் வற்றிய குளத்தைத் தேடிப் பறவைகள் வருவதில்லை
அதேபோல் காதலில் தோல்வியுற்றவர்கள்
மீண்டும் காதலைத் தேடுவதில்லை
தண்ணீரைத் தேடிப் பறவைகள்தான் வருவதுண்டு
ஆனால் பறவைகளைத் தேடி தண்ணீர் போவதில்லை.....!




**காலமெல்லாம் காதல் வாழ்க!**

பெண் கிளி Miss. R

கடுங் குளிரான காலங்களில் அதிகாலையில் வாகனங்கள் இயங்க மறுப்பது பலரது அனுபவம். உங்களுடைய வாகனம் கற்றலிசேற்றர் பூட்டிய வாகனமானால்..... கவனம்!

சிறிது தூரம் தள்ளி அல்லது கட்டி இழுத்து இயக்க முயற்சிக்க வேண்டாம். இப்படியான முயற்சிகளின் போது முற்றிலும் எரிக்கப்படாத எரிபொருள் அவுஸ்புவ் என்றழைக்கப்படுவதான வெளியேற்றியைச் சென்றடைவதுண்டு. பின்னர் வெளியேற்றியின் வெப்பநிலை உயரும் போது அங்கிருக்கும் எரிபடாத எரிபொருள் தீப்பற்றுவதால் உங்கள் கற்றலிசேற்றர் பாதிக்கப்படலாம்.

எனவே இன்னொரு வாகனத்திலிருந்து உங்கள் வாகனத்தின் மின்கலத்தை இயக்குவதே குளிர் காலத்தில் இயங்க மறுக்கும் வாகனங்களை இயக்கச் சிறந்த வழியாகக் கருதப்படுகிறது.



படிப்பகம்

padippakam



குறைந்த செலவில்

உங்கள் இல்ல விழாக்களை மனத்திருப்திகரமாக நடத்தி முடிக்க ஒரு முறை நாடுங்கள்!

நிறைந்த சேவைக்கு

மணவறை, மாலை, மண்டபச் சோடினை, RVS DECO

குருக்கள்,

மற்றும் மதிய உணவு,

மாலைச் சிற்றுண்டி வகைகள்,

பிறந்தநாள் விழாவுக்கான உணவு வகைகள்,

RVS DECO

பலகார வகைகள் **Video, Foto** என்று

அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

**நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்**

தொடர்புகளுக்கு:-

V.Vijayapalan (ஐயர், திரு)

Alte str 5

65520 Bad Camberg

-Würges-

06434-37363

**அல்லது**

Frankfurt:- Adavaa Asiya Center 069-250361

Münster:- Pizza Quick 0251-793374



படிப்பகம்

padippakam



மேற்சட்டை இல்லாமல்
வெளியில் வரமுடியாத
பாற்தட்டை வைத்துவிட்ட
பரமனுக்கோர் விண்ணப்பம்

கோவணத்தைக் கட்டிக்
கொடிபோடும் ஆடவர் முன்
தாவணி சேலை எல்லாம்
தாழ்வாகிப் போனதுவோ

கால் மாறிப் போகவில்லை
கைமாறிப் போகவில்லை
கட்டிலும் பழையது தான்
தொட்டிலும் பார்த்ததுதான்

அப்பனிடம் பேசி
அச்சாரம் கொடுத்துவிட்டு
ஒப்பந்தப்படியா
தாயின் உருவெடுத்தோம்?

கண்ணுக்குத் தெரியாமல்
கருப்பையில் இருந்தவரை
பெண்ணென்று தெரியவில்லை
பேசி மகிழ்ந்திருந்தார்

சுமை குறைந்தாற் போதுமென்று
சொல்லி வந்த சுற்றத்தார்
சுவைகுறைந்து போனதென்று
சோகப் பெருமூச்சு விட்டார்

தாயே பாரமென்றாள்
தந்தையும் கூடவே
தண்டச் செலவென்றார்

கண்திறக்கும் போதே
கவலைக்கு ஆளானோம்
காலூன்றி நடக்கு முன்னே
கட்டுப்பாடு என்று வைத்தார்

மதுரப்பா ரசனையிலே பெரும்பாலும்
மண்விடுதலைப்பாக்கள் தான் – இது
ஒருதலை அரசியலாகச் சிலருக்குத்
தெரிதலைப் போக்கிடத் தமிழ்நாதம்
ஆசிரியர் விருப்பத்தைநிறைவுசெய்யப்
பெண்விடுதலைப் பாவொன்று
தருகின்றேன் மாறுதலுக்காக!

மதுரப்பா
பிராங்பேர்ட்

ஐந்துவயதாகு முன்னே
அஞ்சி நட என்றார்
பத்துவயதாகு முன்னே
பார்வைக்குத் தாழிட்டார்

மொட்டு விடும் முன்னாலே
கட்டு விழும் மார்பகத்தில்
பாலாடை மேனியிலே
மேலாடை உறவாடும்

ஆளான நாள் முதலாய்
அன்னை மடி நெருப்பென்பாள்
அண்ணனிடம் பேசுவதும்
அளவோடு நிறுத்தென்பாள்

மாதத்தில் மூன்று நாள்
மரணத்தின் எல்லையிலே
சாதி ஒதுக்கி வைத்துச்
சாகடிக்கும் சமுதாயம்!

நாளுக்கு நாள் நாங்கள்
நலிவுறுவோம். ஒரு நாளில்
காளை ஒருவனிடம்
கைபிடித்துக் கொடுத்திடுவார்


படிப்பகம்

padippakam


# இரக்கு பாட்டுகள

**மதுரப்பா**

கூலி மிகக் கொடுத்துத்
தாலியெனும் வேலி வைப்பார்
கன்னித் திரை கிழியும்
கருப்பைகள் பொதி சுமக்கும்
இருபாதி என்றுரைப்பார்
ஒருபாதி பாதிக்கும்

சின்ன உதாரணம்.....
சென்னை நகர் வீதிகளில்
செல்கின்றோம்
ஒண்ணுக்கு வருகிறது பெண்ணுக்கு
என்ன செய்வாள்? ஒதுங்க இடமில்லை!
ஆணுக்கோ.........................
சுவர் இருந்தாற் போதும்
சுகமாக நின்றபடி
நீர்க்கோலம் வரைந்திடுவான்
கால்வழியே நீர் கழிய
காரிகையர் கீழ்ப்பிறப்பா?

என்னதான் இருந்தாலும்
ஆண் மேல்தான் பெண் கீழ்தான்
என்னுமொரு நியாயத்தை
இறைவா நீ செய்ததென்ன?

கால்முதல் தலை வரையில்
காட்சிப் பொருளாகி
சோகத்தை மறைத்துச்
சுவரெல்லாம் சித்தரித்து
மோக வடிகாலாகி
மடிவதுதான் எம் கதையோ

எல்லாம் சக்தி மயம்
என்றுரைக்கும் ஞானிகளே!
சக்தி எங்கே? பக்தி எங்கே?
உங்களது ஞானத்தில்
எங்களுக்குப் பங்கு எங்கே?

கருப்பையின் துணையின்றிக்
கண்ணாடிக் குழாய்க்குள்ளே
பிள்ளைகளை உண்டாக்கும்
பெரிய விஞ்ஞானிகளே!
வேண்டாத வேலைகளை
விட்டுவிட்டு யோசிப்பீர்
எங்கள் விடியலுக்கோர்
எளிதான வழிதன்னை!

இரைப்பையை இடம் மாற்றும்
ஏற்றமிகு விஞ்ஞானம்
கருப்பையை மாற்றி வைக்கக்
கருவி ஒன்றைக் கண்டறிவீர்

கரு சுமக்கும் வேலையினைக்
காளையர்க்கும் கொடுத்திடுவீர்
அவதார வாசல்களை
ஆண்களிடம் பொருத்திடுவீர்

மசக்கை மயக்கத்தை
மாங்காய்ச் சுவையதனை
இந்தவலி அந்த வலி
இடுப்புவலி என்பதனைப்
பட்டறிந்து பார்க்கட்டும்
பாவையர் போல் ஆடவரும்

அடுப்படியும் அதைவிட்டால்
கட்டிலடி என்றிருக்கும்
இடுப்பொடியும் பெண்ணினத்தை
இப்போதே காத்திடுவீர்!

மகப்பேறு மனைகளுக்கு
மகராசர் போகட்டும்
யுகத்தை மாற்றுகிற
யோசனையை ஏற்றிடுவீர்


படிப்பகம்

padippakam





# காதலர் நாள்......

உலகம் முழுவதும் காதலர் நாளாகக் கொண்டாடப்படுவது பெப்ரவரி மாதம் 14ம் . திகதி ஆகும். ஆங்கிலத்தில வலன்றைன்ஸ்டே எனவும் ஜேர்மனில் வலன்றீன்ஸ்ராக் என்றும் இந் நாள் குறிப்பிடப்படுகிறது. ஒருவருடனான காதலை இந் நாளில் அன்பளிப்புகள் மூலம் தெரிவிப்பதும் உறுதிப்படுத்துவதும் வழமை ஆகும். பூக்கள், இனிப்புவகைகள் போன்றவை இந் நாளில் அன்பளிக்கப்படும்.

நான்காம் நூற்றாண்டிலிருந்து கிறித்தவர்கள் இந்த வலன்ரைன்ஸ் நாளைக் கொண்டாடி வருகிறார்களாம். கிறிஸ்துவுக்குப் பின் 268ம் ஆண்டில் பிறந்த வலன்ரைன் என்பவர் றோர்ணி நகரத்தின் பேராயராக இருந்தவர் என்று கருதப்படுகிறார். காதலர் நாள் என்று ஒன்று உருவாவதற்கான காரணங்களாக இரு கதைகள் உள்ளன.

அந்தக் காலத்தில் ரோமச் சக்கரவர்த்தியாக இருந்த கிளவுடியூஸ் கொற்றிகுஸ் வலன்ரைனின் கிறித்தவ மதப் பற்றினால் வெகுண்டெழுந்து அவருக்கு மரணதண்டனை விதித்த போது வலன்ரைன் தன் இறுதியாசையாகக் காதலர் ஒருவருக்கொருவர் பூக்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதுவே வலன்ரைன் தினமான காதலர் நாளாக மாறியது என்று ஒரு பகுதியினரும் மரணதண்டனை விதிக்கப்பட்ட வலன்ரைனுக்கும் ரோமச் சிறைச்சாலைக் காவலர்தலைவனாகக் கடமையாற்றியவனின் மகளுக்குமிடையில் காதல் இருந்ததென்றும், மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முதலாக அந்தப் பெண் உன்னுடைய வலன்ரைன் என்ற வார்த்தைகளைத் தாங்கிய ஒரு காதல் மடல் அனுப்பியிருந்தாள் என்றும் அதுவே வலன்ரைன்தினம் என்ற காதல தினமென்று வழமைக்கு வந்தது என்று கருதுகின்றனர் இன்னொரு பகுதியினர்.

எது எப்படியானாலும் குடும்ப திருமணம் என்பவற்றுக்குத் தெய்வமா யூனோவுக்கு பெப்ரவரி 14ம் திகதியன்று ரோமானியர்கள் விழாவெடுத்தனர் என்பது பெண்கள் பூக்களால் சீராட்டப்பட்ட என்பதும் வரலாற்று ரீதியான உண்மையே

ஜேர்மனியர் இந்நாளில் தங்க காதலியர்க்கு அல்லது மனைவியர்க் பூக்கள் அல்லது சிறு அன்பளிப்புக வழங்கித் தம் காதலை (அன்பை உறுதிப்படுத்துவர். ஆங்கிலேயர்கள் பெயர் போடாமல் காதற் கடிதங்க அனுப்பி வைப்பர். பிரான்ஸ், பெல்ஜிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் 14 நூற்றாண்டில்தான் இந்த வழக நடைமுறைக்கு வந்தது. அங்கெல்லா அதிகமாக இனிப்புவகைகள அன்பளிக்கிறார்கள்.

பெப்ரவரி 14ம் திகதியன்று தனக்கு பிடித்த ஆணுக்கு சொக்கலேற்றை ஒ பெண்ணும் தனக்குப் பிடித்த பெண்ணுக் ஒரு பூச்செண்டை ஆணும் வழங்குவ உலக வழமையாகி வருகிறது. இ வழமையின் அடிப்படையில் காதலன வலன்ரைன் என்றும் காதலியை வலன்றீ என்றும் குறிப்பிடுவதும் உண்டு.

கடந்த பெப்ரவரி 14ல் உங்க வலன்ரைனுக்கு(கணவர்) அல்ல வலன்ரீனாவுக்கு(மனைவி) என அன்பளிப்பாக வழங்கினீர்கள்? ஒன்று இல்லையா?



அப்படியானால் அடுத்த முறையாவது நினைவில் வைத்திருங்கள்.

யோகா – எசன்



படிப்பகம்

padippakam



ர்வதேசக்
ணணிவலையில்
தொடரும்
அறுவை



# கணணிப்பிரியர்களுக்கு...... (மன்னிக்கவும் !) தமிழ்ப்பற்றாளர்களுக்கு ....ஒரு கையகராதி!

| | |
|---|---|
| Vindows 95 | யன்னல்கள் தொண்ணூற்றியைந்து |
| 'ile | கோப்பு |
| )pen | திறந்திடுக |
| :lose | மூடுக |
| :ut | வெட்டுக |
| 'aste | ஒட்டுக |
| Run | ஓ(ட்)டுக |
| 'ools Bar | ஆயுதம் தாங்கி |
| 'aste Special | சிறப்பாக ஒட்டுக |
| 'iew | பார் |
| lelp | உதவி |
| )atabase | விபரம்தாங்கி |
| 'ay per View | பணம் கொடுத்துப் பார் |
| louse | எலி |
| :lick | தமிழ்க் குடிமகன் இன்னமும் தேடிக் கொண்டிருக்கிறார் |

மைக்ரோ சொவ்ற் நிறுவனத்தின் அதிபரான பில் கேற்ஸின் கண்டு பிடிப்புகளெல்லாமே பெண்கள் தான்! ஏன் தெரியுமா?
. இந்தியாவில் "போய் வா" என்று சொல்லும் மாநிலம் எது?
. செடியெல்லாம் பச்சையாக இருப்பது ஏன்?
. சந்திரிகா முதலில் சிம்மாசனம் ஏறியதும் என்ன செய்தார்?
. சந்திரிகா அவசர அவசரமாகப் பாராளுமன்றத்தைக் கூட்டியது ஏன்?
. வாகனமொன்றைப் பின்னால் தள்ளினால் என்ன நடக்கும்?

(அறிய விரும்பினால் தலைகீழாகப் பாருங்கள்.)

டைகள்:

MS windows, MS Word, MS Access, MS Excel...... என்று எல்லாமே மிஸ் தான்.
கோவா (Goa)
நாம் பச்சைத்தண்ணீர் ஊற்றுவதால்!
கூசாமல் உட்காந்தார்
பாராளுமன்றம் ஒரே குப்பையாக இருந்திருக்கும்.
பின் நெளியும்.

தாகுப்பு: சிறீ - வீஸ்பாடன்


படிப்பகம்

padippakam



# தமிழ் – ஆங்கில மாதங்களுக்கிடையேயான தொடர்பு

*திருமதி. கிருபாநிதி சற்குணநாதன்*

ஒரு வருடத்தில் மாதங்களானவை தமிழில் சித்திரை முதல் பங்குனி வரையிலானதும், ஆங்கிலத்தில் ஜனவரி முதல் டிசம்பர் வரையிலானதும், இரண்டிலும் பன்னிரண்டு மாதங்கள் என்பதும் யாவரும் அறிந்ததே!

ஜனவரி மாதத்திற்குரிய தமிழ் மாதம் எது? தை என்றால் அது தவறு. சில அறிவித்தல்களில் இப்படியான தவறுகளைக் காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள ஒரு விழாவின் அறிவித்தலின் தமிழாக்கத்தில் பங்குனி முதலாம் திகதி அவ்விழா நடைபெறவுள்ளதாக அச்சிடப்பட்டிருந்தது.

ஆங்கில வருடம் ஜனவரி முதலாம் திகதியில் ஆரம்பமாகி டிசம்பர் முப்பத்தியோராம் திகதியில் முடிவடைகின்றது. தமிழ் வருடம் சித்திரை முதலாம் திகதியில் ஆரம்பமாகிப் பங்குனியில் முடிவடைகின்றது. (தமிழ் மாதங்கள் ஆங்கில மாதங்களைப் போல் இன்ன மாதம் இத்தனை நாட்களைத்தான் கொண்டுள்ளது என்று வரையறுத்து கூற முடியாமல் உள்ளது. உதாரணமாக ஒரு வருடத்தில் பங்குனி மாதம் இருபத்தொன்பது நாட்களை உடையதாக இருக்கும். அடுத்த வருடத்தில் வேறுபட்டிருக்கலாம்.)

சித்திரை முதலாம் திகதி பெரும்பாலும் ஆங்கில மாதம் ஏப்பிரல் பதின்மூன்று பதினான்கு அல்லது பதினைந்தாம் திகதியில் வரும். இவ்வாறே தமிழ் மாதங்களான வைகாசி, ஆனி, ஆடி...... முதலான மாதங்கள் முறையே ஆங்கில மாதங்களான மே, ஜூன், ஜூலை....... முதலானவற்றின் ஏறக்குறைய நடுப்பகுதியில் தொடங்குகின்றன. இவ்வாறே ஜனவரியின் நடுப்பகுதியில் தை மாதம் தொடங்குகிறதேயொழிய ஜனவரியின் நேரடியான தமிழாக்கம் தை என்பதல்ல.

சென்ற ஆண்டுமலரில் வெளியான திரு. நிர்மலனின் □தமிழருடைய ஆண்டு, மாதம், கிழமை என்பவை எவை□ என்ற கட்டுரையை வாசித்த வாசகர்களுக்கு இக்கட்டுரை குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஆனால் நீங்கள் வாசிக்கும் இந்தக் கட்டுரையும் கூட, கடந்த ஆண்டுமலருக்காக எழுதப்பட்டது என்பது ஆச்சரியமான விஷயமே. சில தடங்கல்களால் வெளியிடப்படமுடியாமல் போய்விட்டது. இங்கு தற்காலத்தில் நடைமுறையிலுள்ள மாதங்களைப் பற்றிய கருத்துக்களே தரப்படுகின்றன. திரு. நிர்மலனின் கட்டுரையில் ஒரு வரியில் □திருவள்ளுவர் கிறிஸ்துவுக்கு முன் 31ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் □ என்றிருக்கின்றது. ஆங்கில ஆண்டுடன் நூற்றாண்டை எப்படிக் கூட்ட முடியும்? இக்கூற்று சற்றே குழப்பத்தை தருகின்றது. அல்லது வள்ளுவர் கிறிஸ்துவுக்கு முன் 31ஆம் ஆண்டில் வாழ்ந்திருக்கக்கூடும்.

(திருமதி. கிருபாநிதி சற்குணநாதனின் கருத்து முற்றிலும் சரியே!. வள்ளுவர் கிறித்துவுக்கு முன் 31ம் ஆண்டில் வாழ்ந்தார் என்று தான் அந்த வாக்கியம் அமைந்திருக்க வேண்டும். தவறிவிட்டது. இந்த ஒலி உங்கள் கையிற் கிடைக்கும் போது அவர் தமிழ்நாதம் ஆசிரியர் குழுவில் ஒருவராக இருப்பார் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறது தமிழ்நாதம்.)



படிப்பகம்

padippakam



# ஒரு உண்மைச் சம்பவம் உறுத்தியதால்.....

## தமிழச்சியின் .........உள்ளத்திலெழுந்த சிறுகதை!

வைரவி...... வைரவி...... வைரவி...... வைரவீ..............!

வைரவியைத் தெரியுமா உங்களுக்கு..........? தெரியாது......?

ஹும்.....!

தெரிந்திருக்க நியாயமில்லைத்தான்.

அவள் என்ன அன்னை பூபதியா? அல்லது காப்டன் மாலதியா? உங்களுக்கு அவளைத் தெரிய! கேவலம் ஒரு சினிமா நடிகையாக இருந்தாலாவது உங்களுக்கு அவளைத் தெரிந்திருக்கும்.

வைரவிதான் ஒரு சாதாரண பெண்ணாச்சே!

அதென்ன பெயர் வைரவி என்கிறீர்களா? பழையகாலப் பெயரா?

அவள் தந்தை தமிழ் ஆசிரியர். பண்டிதர். பட்டதாரி. ஆசையாக வைத்த நல்ல தமிழ்ப் பெயர். தன் மகள் கற்பெனும் திண்மை உண்டாகப் பெற்று வைரம் பாய்ந்து ஒரு தமிழச்சியாக வாழவேண்டும் என்ற நியாயமான எதிர்பார்ப்புகளுடன் வைத்த அழகான அர்த்தம் நிறைந்த தமிழ்ப் பெயர்.

நவீனமான பெயர் என்றெண்ணி நீங்களும் வைத்திருக்கிறீர்களே உங்களுடைய பிள்ளைகளுக்குப் பெயர்கள்...... எப்படி எப்படி எப்படி? ரொஷ்னி.... மஸ்னி.... குசினி.... அர்த்தமோ அழகோ இல்லாத அலங்கோலமான பெயர்கள்!

அதை விடவா அசிங்கமாக, அரியண்டமாக இருக்கிறது வைரவி என்ற அவள் பெயர்?

அழகான அர்த்தமான பெயர் கொண்ட வைரவி அழகாக இருப்பாளா என்று அறியத் துடிக்கிறீர்கள். அப்படித்தானே?

நாள் முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கச் சொல்லும் அழகல்ல! இமையைத் துடிக்கச் செய்து இதயத்தை ஊடறுத்து உங்களுக்கு இளமையைத் தந்ததே அவளுக்காகத் தான் என்று நினைக்கச் சொல்லும் அழகல்ல!

ஜேர்மனிக்கு அகதியாக வந்து இன்னமும் முழுதாக ஒரு ஆண்டு கூட முடியவில்லை என்பதால் இன்னும் மொத்திக்காத மெல்லிய உடலமைப்பு. இருபத்தியொரு வயதுக்கேயான இளமைத் துடிப்பு. மொத்தத்தில் ஒரு தடவை பார்த்தாலே போதும் என்று சொல்லும் சாதாரண தோற்றந்தான். யுத்த சூழ்நிலையிலேயே குழந்தைப் பருவத்தைக் கழித்து இளமைப் பருவத்தையும் தொட்டுவிட்டதாலோ என்னவோ வார்த்தைகளில் மட்டுமல்ல நடைமுறைகளிலும் ஒரு அஞ்சாமை. எப்போதும் எல்லோருக்கும் உதவி செய்யத் துடிக்கும் நல்லெண்ணம். மொத்தத்தில் இது தான் வைரவி!

வைரவியைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறதா? அவளுடன் பழக வேண்டும் போலிருக்கிறதா? அப்படியானால் இப்பொழுதே வாருங்கள்.

பம்பரமாகச் சுற்றி வந்தவள் பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போய்ப் படுத்திருப்பதைப் பார்க்க இப்போதே வாருங்கள்.

இனிமையாய்க் கதைத்து நாலு பேருக்கு உதவியாக இருந்து தன்னைச் சுற்றியிருப்பவர்களைச் சிரிக்கவைத்து மகிழ்பவள் இன்று தனிமையில் படுத்திருப்பதைப் பார்ப்பதற்கு இப்போதே வாருங்கள்.


படிப்பகம்

padippakam



“இயக்கத்திலை சேர விருப்பம். அம்மா சம்மதிக்கேல்லை. ரெண்டு பேரின்ரை கருத்துக்கு இடைப்பட்ட ஒரு ஒப்பந்தமாய் சமூகசேவை செய்யிறனான். என்ரை பேர் வைரவி, பரந்தனுக்கு கிட்ட. தியாகநல்லூர் ஊர். அப்பா தமிழ் ஆசிரியர். அம்மா கெமிக்கல்ஸிலை வேலை செய்த இப்ப கனகாலம் தொழில் இல்லை. வீட்டிலை மூத்த பிள்ளை நான்தான்.” என்று அறிமுக செய்தவள் யாரையுமே பார்க்க விரும்பாமல், எவருடனும் கதைக்க விரும்பாமல் தனிமையி படுத்திருக்கிறாளே, அவளை அறிந்து கொள்ள விரும்புகிறீர்களா? இப்பொழுதே புறப்பட் வாருங்கள்.

“அப்பாவுக்குதவியாய் உழைச்சு அனுப்ப வேணும். தம்பி நல்லாய்ப் படிக்க வசதி செய் வேணும். நானும் ஏதன் ஒரு துறையிலை படிச்சு ஊருக்குப் போய் எங்கடை நாட்டிலை எல்லாருக்கும் உதவி செய்ய வேணும்.” என்று தன் இலட்சியங்களை எடுத்துரைப்பவள் இன்று அலட்சியமாகப் படுத்திருக்கிறாளே. அவளைப் பார்ப்பதானால் இப்பொழுதே வாருங்கள்.

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம் என்று பாரதியைப் பா குகைவாழ் ஒரு புலியே நிகர் குணமேவிய தமிழா என்று பாரதிதாசனைப் பாடி, பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும் பைந்தமிழில் அழும் ஓசை கேட்க வேண்டும் என்று கா ஆனந்தனைப் பாடி, எதிரிகளின் பாசறையை நோக்கிப் போகிறோம் என்று புதுவை இரத்தினதுரையைப் பாடி மகிழ்ந்த பாவை பாடாமல் வாய் மூடிப் படுத்திருக்கிறாளே அவளை பாட வாருங்கள்.

“தமிழர்களுக்கு இரண்டு குழந்தைகள் போதாது. கனக்கப் பெற்றுக் கொள்ள வேணு இரண்டுக்கிடையே இடைவெளியே கூடாது. அப்பதான் தமிழரைச் சிங்கள இன அழிச்சொழிக்க முடியாது” என்றவள் எல்லாமே அழிந்ததாகப் படுத்திருக்கிறாளே அவளை பார்க்க வாருங்கள்.

அவள் இப்படி எல்லாமே அழிந்து போய்ப் படுத்திருப்பதற்கு சிங்களவன் காரணமல்ல. தமிழ தான் காரணம். அதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? இப்போதே வாருங்கள்.

குலவிளக்கு என்று தந்தை தாய் அங்கே நினைத்திருக்க இங்கோ அவள் காலடியிலு தலைமாட்டிலும் குத்துவிளக்குகள் எரிகின்றதைப் பார்க்க இப்போதே வாருங்கள்.

அக்கா எனக்கு வசதியான ஒரு வாழ்க்கைக்கு வழிகாட்டுவாள் என்று தம்பி அங்கே நினைத்திருக்க அக்காவோ தனது வாழ்க்கையையே முடித்துக் கொண்டுவிட்டாளே அது பற்றி அறிந்து கொள்ள வேண்டாமா? இப்போதே வாருங்கள்.

ஆயிரமாயிரம் மெகா வற் சக்திகொண்ட மின்சாரம் அவளை எரித்துக் கருக்கிவிட இன்னு சில நிமிடங்களே உள்ளன. இப்பொழுதே நீங்கள் வராவிட்டால் இனி ஒருபோதுமே நீங்கள் வ வேண்டாம்!

தம் அன்பு மகளின் உருவத்தைப் பார்க்கவும், திருமணம், பிள்ளைப்பேறு, பேரன் பேத்தியை தூக்கிவளர்த்தல் என்று எத்தனை எத்தனை கடமைகள் உள்ளனவோ அத்தனையையும் அவ உடல் எரிந்த அந்தச் சாம்பலைக் கடலில் கரைப்பது ஒன்றின் மூலம் மட்டுமே செய்து த ஆத்மாவின் ஏக்கத்தைத் தீர்த்துக் கொள்ளவும் என்று அங்கே காத்திருக்கும் வைரவியி பெற்றோரை என்றோ ஒரு நாள் நீங்கள் சந்திக்க வேண்டி வந்தால்......

வைரவிக்கு என்ன நடந்தது என்று உங்களைக் கேட்டால்......

பதில் கூறும் நிலையில் நீங்கள் இருக்க வேண்டுமானால் இப்போதே இங்கே வாருங்கள்.

படிக்கவேண்டும். உழைக்க வேண்டும். பாரினில் தன் குடும்பம் மேம்பட வேண்டும். என் பெற்றோரின் நினைவாக வாழ்ந்தவள் தான் வைரவி.



படிப்பகம்

padippakam



"வேறை சிற்றிக்கு விட்டாலும் எனக்கு உம்முடைய நினைவு இருக்கும். நீர் என்னைப் பற்றி நினைப்பீரா?" என்று அவன் கேட்டபோது "அப்பா அம்மா தம்பி எண்டு எனக்கு ஒரே ஊர் நினைவு தான்" என்று தான் அவளிடமிருந்து பதில் வந்தது.

ஷ்வால்பாக் முகாமில் முதலில் இருக்கும்போது சந்தித்த எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த இவனையெல்லாம் நினைக்க அவளுக்கு ஏது நேரம்?

கிழமைகள் உருண்டு மாதங்களாய்த் திரண்ட போதும் அவன் விடுவதாய் இல்லை.

"நான் நினைக்கிறன் எனக்கு உம்மிலை காதல் எண்டு"

காதலைப் பற்றி நினைக்க அவளுக்கு நேரமிருக்கவில்லை. பரந்தனிலிருந்து இடம் பெயர்ந்து வன்னியில் புதிய சூழ்நிலையில் பல நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகளுடன் போராடிக் கொண்டிருக்கும் அம்மா, தமிழ் அழிக்கப்படுவதை, தமிழர் அழிக்கப்படுவதைப் பார்த்துப் பார்த்துத் தனக்குள்ளேயே அழிந்து கொண்டிருக்கும் தமிழிலே படித்துத் தமிழையே படிப்பிக்கும் தமிழ்ப்பற்றுக் கொண்ட தந்தை. முற்றுகையிடப்பட்ட நாட்டில் யுத்தத்தின் குழந்தையாகப் பிறந்து யுத்தத்தால் நல்லுணவின்றி, ஆரோக்கியமான மனவளர்ச்சியின்றி ஆயுதத்தை எடுப்பதனால் தனது மன ஏக்கங்களையெல்லாம் தீர்க்கத் துடிக்கும் தம்பி என்று இவர்களை நினைக்கவே அவளுக்கு நேரமிருக்கவில்லை. எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த இவனையெல்லாம் நினைக்க எங்கே நேரம்?

——நான் உன் நினைவாகவே வாழ்கிறேன். நான் உன்னைத் தான் கனவில் காண்கிறேன் என்று அவன் அவளுக்குக் கூறிய போது ——உன்ரை அப்பா அம்மாவைப் பற்றி நினை. தமிழீழம் மலரக் கனவு காண் என்று துடுக்காகத் தான் வைரவி பதில் சொன்னாள். தமிழீழம் மலரவேண்டும் என்று அசாதாரண கனவுகள் கண்டவள் அல்லவா இந்த வைரவி.

வைரவிக்கு வேறு நகரம். வைரவியை ஏற்றிய வண்டி புறப்படத் தயாரான போது என்னை மறக்க வேண்டாம். நான் உன்ரை நினைவாகவே இருப்பன்—— அவன் கொஞ்சினானா? அல்லது கெஞ்சினானா?

வன்னியிலிருந்து புறப்பட்டபோது "பிள்ளை உடம்பைக் கவனி. தெரியாத ஆக்களோடை பழகாதை" கெஞ்சியும் கொஞ்சியும் உச்சி மோர்ந்த அம்மா," எங்கடை பரம்பரையிலை பெண் பிள்ளைகள் தனிய ஒரிடமும் போறேல்லை. போராட்டத்தையே வழி நடத்திறளவுக்குப் பெண்பிரசைகள் வந்தாச்சு. பத்திரம் பிள்ளை" சால்வையால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டே இருந்த அப்பா, அக்கா அக்கா என்றதைத் தவிர எதுவும் சொல்லத் தெரியாமல் சொல்ல முடியாமல் அவள் கையை எடுத்துத் தன் தோளைச் சுற்ற வைத்து அவளுடன் ஒட்டிக்கொண்ட தம்பி என்று அவள் நினைவில் ஒட்டிக் கொண்ட அம்மா அப்பா தம்பியின் அந்தச் சோகமான முகங்கள் முன்னிலையில் இங்கே ஜேர்மனியில் கண்டு ஒரு சில மாதங்கள் மட்டுமே தெரிந்த இவனுடைய முகம் எந்த மூலைக்கு?

புதிய நகரம். புதிய முகாம். வைரவியைச் சுற்றி எத்தனையோ நாட்டுக்காரர். ஆனால் தமிழில் கதைக்க தமிழராக யாருமே அந்த முகாமில் இல்லை. வைரவியைத் தனிமை வாட்டியது.

விமானத்தில் பறந்து தாய்லாந்து, லிதுவேனியா, கப்பல், பறேசி துறைமுகம். பல நாட்டு எல்லைகள் என்பவற்றைத் தமிழரோடு தமிழச்சியாகத் தாண்டி ஜேர்மனிக்கு வந்த போதும் சரி ஜேர்மனியிலும் சரி பெற்றோர் நினைவும் ஊர் நினைவும் அவளை வாட்டியதே ஒழியத் தனிமை வாட்டவில்லை. தமிழரும் தமிழும் அவளைச் சுற்றி இருந்தது. ஆனால் இந்தப் புதிய முகாமில்.........

——— அவளைத் தனிமை வாட்டியது. தனிமை வாட்ட வாட்ட அவனுடைய நினைவுகள் வந்து அலையாய் மோதின. நான் உன்ரை நினைவாயே இருப்பன் என்று கெஞ்சிக் கொஞ்சிய



படிப்பகம்

padippakam

அவன் முகமே எப்போதும் அவள் முன் வந்தது. தனக்குள்ளேயே சிரிப்பது போலவும் தன்னையே மறப்பது போலவும்....... எதையோ சொல்லத் துடிப்பதும் பின்னர் மறைப்பதும் போல.......... வைரவியில் ஏதோ ஒரு மாற்றம். வைரவி வழமையான வைரவியாக இல்லை. இது தான் காதலோ? வைரம் பாய்ந்தவளாக இருப்பாள் என்றெண்ணித் தந்தை வைத்த பெயரை வைரவி தொலைத்துவிட்டாளா?

உதெல்லாம் இப்ப தேவைதானா? காதல் எல்லாம் கதைக்கு நல்லாயிருக்கும். வாழ்க்கைக்கு அது உதவாது... வைரவி நினைத்தாலும் அவன் விடுவதாக இல்லை. அருகில் இல்லாமல், 3 40 கிலோ மீற்றர் தூரத்தில் ஷ்வால்பாக்கில் அவன் இருந்தாலும் அவளை இங்கே ஏங்க வைத்தான். ஏக்கம் தூக்கத்தை மறைத்தது. தூக்கமின்மை அவளைத் துடிக்க வைத்தது. ஷ்வால்பாக் முகாம் தொலைபேசி இலக்கம் ஏதோ ஒரு கசங்கிய பழைய துண்டுத் தாளொன்றில் இருக்க வேணடும். அவள் கைப்பையைக் கிளறினாள். அவனைத் தொலைபேசியில் அழைத்தாள்.

வன்னியைக் கைப்பற்ற ஜய்சிக்குறுய். அது பிழைத்தால் வேறொரு திட்டம். இன்னொரு படையெடுப்பு. ஷவால்பாக்கிலிருந்த வைரவியை மடக்க முயற்சித்தவன் அது சரிவராமலே அவள் வேறிடத்துக்கு மாற்றப்பட்டு விட்ட பின்னர் ஷ்வால்பாக்குக்கு வந்த கிறேஸ்லீன் மீது கண் வைத்தான். "ஸ்ரட்டுக்குப் போனனான். இந்த ரீசேட் உம்முடைய நிறத்துக்கு நல்லாயிருக்கும் எண்டு நினைச்சன். வாங்கினன" அவன் வலை விரித்தான். "எனக்கு சிற அடிச்சாலும் நான் உம்மை மறக்க மாட்டன். நான் உமக்கு அடிக்கடி கோல் பண்ணுவன் அவனுடைய முதல் அடியிலேயே அம்மி நகரத் தொடங்கியிருந்தது. "கனவிலை ஒரே நீர்தான் இரண்டாவது அடி. கிறேஸ்லீன் கிறங்கத் தொடங்கியிருந்தாள். அவளுக்கும் அவனைப் பற்றி கனவுகள் வரத் தொடங்கியிருந்தது. "நான் நினைக்கிறன் எனக்கு உம்மிலை காதல் வந்திட்டுது எண்டு". அவனைப் பொறுத்த வரையில் கிறேஸ்லீன் என்ற இந்த யுத்த முனையில் ஜய்சிக்குறுய் தான். வெற்றி நிச்சயமே!

"சிறிலங்கா...... தெலெபோன்" கிரேஸ்லீனைப் பார்த்துத்தான் அந்த லிபனான்காரன் கத்தினாலும் அருகில் நின்ற அவன் கதைத்தான். "கலோ.... ஆரோடை கதைக்கப் போறீங்கள்? நீரே! எப்பிடி சுகம்?" அவனுடைய கண்கள் கிறேஸ்லீனை நோட்டம் விட்டன. "எனக்கு சிற்றி அடிப்பினம் இந்தக் கிழமை. நம்பரைத் தாரும் நானே கோல் பண்ணுறன். ஏன் நீர் காசை வீணாக்கிறீர் நம்பரை எழுதிக் கொண்டு கிறேஸ்லீனுக்கு ஏதாவது விளங்க முன்னர் தொடர்பை துண்டித்தான். "தெரிஞ்சாள்." கிறேஸ்லீனுக்கு அவன் விளக்கம் கொடுத்தான்.

"என்ரை காசு வீணாகக் கூடாதாம்....... என்னிலை எவ்வளவு அன்பு" வைரவி மயங்கினாள் சிறீலங்கா..... டெலிபோன்....... வைரவி ஓடினாள். அவனே தான். நிறையச் சொல் நினைத்தவளுக்கு எதுவுமே வாயில் வரவில்லை. "இங்கை தமிழாக்கள் ஒருதரும் இல்லை ஆரோடையன் கதைக்க வேணும் போல இருந்தது. உங்கடை நினைவு வந்தது" அவ முயற்சித்தாள். "நினைவு வந்ததோ?...." அம்மி நகரத் தொடங்கிவிட்டதை அறிந்த அவ அவளைத் தூண்டினான்.

"இப்பெல்லாம் ஒரே உங்கடை நினைவுதான்." வைரவியின் வைரம் இளகியது.

"நீர் சும்மா சொல்லுறீர்" அவன் அவளைச் சீண்டினான்.

"கனவிலும் நீங்கள் தான்." தமிழரே இல்லாத இந்த ஏகாந்தச் சூழ்நிலையில் எங்கே அவன் தன்னைப் புறக்கணித்து விடப் போகிறானோ பயம் வைரவியைக் கெஞ்ச வைத்தது. அவன் தன்னை நம்ப வேண்டும். அவன் தன்னுடைய காதலை ஏற்க வேண்டும். அவள் துணிந்து விட்டாள். "நான்.... நான்.... உங்களை....உங்களைக் காதலிக்கிறன". அம்மி அசைந்து விட்டது


படிப்பகம்

padippakam


அவன் மகிழ்ந்தான். பசிக்கு விருந்து தயார். விருந்தென்றாலும் உடனே ஏற்றுக் கொள்வதா? "நான் கிறித்தவன். நீர் சைவம்" வேண்டாம் வேண்டாம் என்று சொல்லச் சொல்ல அதை மறுத்துப் பரிமாறப்படும் விருந்தின் ருசியே தனிதானோ?

"வாழ வழி சொல்றது மதம். வாழப் போறது நாங்கள். எங்களுக்குள்ளை ஒரு விளக்கம் இருந்தால் ஆர் எந்த மதமாய் இருந்தால் என்ன?" தந்தை போதித்தவை வைரவியின் வார்த்தைகளாய் உதிர்ந்தன.

அவள் கனிந்து விட்டாள் என்பதை அவன் புரிந்து கொண்டான். கிறேஸ்லீன் தன்னை நோக்கி வருவதை அவன் கவனித்ததும் "நான் வைக்கிறன். காசு முடியப் போகுது" தொடர்பைத் துண்டித்து விட்டு கிறேஸ்லீனை அணுகினான்.

"பேப்பர் இல்லாமல் பிராங்பேட்டிலை ஒரு வேலை இருக்கு எண்டு நேற்று வந்தவை நம்பர் தந்தவை. ஒருதரும் எடுக்கினம் இல்லை!" அவனுடைய விளக்கத்தை கிறேஸ்லீன் கவனிக்கவேயில்லை. "வெள்ளிக்கிழமை அண்ணா அண்ணியாக்கள் என்னைக் கூட்டிக் கொண்டு போக வருகினம். என்னைத் தங்களோடை எடுக்க லோயர் வைச்சிருக்கினம். ரெண்டு கிழமைக்குப் பிறகுதான் வருவன்." கிறேஸ்லீன் நிற்க மாட்டாள். அவனுக்கு இனித்தது. வைரவியை இங்கே வரச்செய்து விட்டால்—— அவன் கனவு கண்டான். கிறேஸ்லீன் கனிந்து விட்டாள். அவளை எய்ய வேண்டுமானாலும் அவனால்—— ஆனால் வைரவியை இதுதான் தருணம்——

சிறீலங்கா—— டெலிபோன்—— வைரவி ஓடினாள். அவன்தான்.

"இன்னும் என்ரை நினைவு இருக்கோ?" அவன் ஆழம் அறியக் காலை விட்டான்.

"என்ன நீங்கள்? இரவும் பகலும் நினைவிலும் கனவிலும் சாப்பிடப் போனாலும் குளிக்கப் போனாலும் உங்கடை நினைவுதான்." அவள் சிணுங்கினாள்.

"நானும் அதே நிலைதான். பாக்க ஆசையாயிருக்கு."

"எனக்கும் உங்களைப் பாக்க சரியான ஆசையாயிருக்கு"

"வரட்டா உங்கை?" சும்மா தான் அவன் கேட்டான். சிங்கத்தின் குகைக்குள்—— முயல் அவள் வருவதைத்தான் அவன் விரும்பினான். ஆண்கள் எங்கே எதை விதைத்தால் எது விளையும் என்று வியாபார முறையில் தான் சிந்திப்பார்கள். பெண்களோ ஆண்கள் தங்களைப் பற்றித்தான் நினைக்கிறார்கள். நினைப்பார்கள். நினைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். பெண்ணின் பேதைமையே இதுதான்.

"இங்கை ஹவுஸ் மாஸ்டர் சரியான நாசிக்காரன். வேண்டாம்." அவள் உண்மை கூறினாள். அவளை வரச் சொல்ல அவன் தருணம் பார்த்து அமைதியானான்.

அவன் அமைதி அவளைத் துன்புறுத்தியது. "என்ன பேசாமல் இருக்கிறியள்? என்னைப் பாக்கெலாதெண்டு கவலையே?" வைரவி பேதையானாள். அவன் ம் கொட்டினான்.

"என்னைப் பாக்க அவ்வளவு ஆசையே?" விட்டில் பூச்சி விளக்கை வடிவென நினைத்தது. அவன் மீண்டும் ம் சொன்னான்.

"நான் உங்கை வரட்டே?" வண்டைத் தேடிப் பூ போகப் போகிறது. அவன் முகம் மலர்ந்தது அவளுக்குத் தெரிய வழியில்லை. "உமக்குக் கஸ்டம். வீண் செலவு." அவன் வாய் மலர்ந்தது தான் அவளுக்குக் கேட்டது. தட்டிக் கழித்தால் பெண்கள் தானே வருவார்கள் என்பது ஆண்களுக்கு மட்டுமே தெரிந்த கலையா?

"என்ன கஸ்டம்? நான் வாறன்."

அவரைப் பார்க்கப் போகிறேன். எதிர்காலத்தைத் திட்டமிடப் போகிறோம். நிறையக் கதைக்க வேண்டும். வைரவி தனது நாட்குறிப்பில் எழுதியபடியே நிம்மதியாக நித்திரையானாள்.


படிப்பகம்

padippakam



அவள் வரப் போகிறாள். கிறேஸ்லீன் இல்லாத இந்தக் கிழமை முடிவு வரையில் வைரவியை எப்படி இங்கே தங்க வைக்கலாம் என்பதே அவன் யோசனையாக இருந்தது. அவனுடை அறை நால்வர் தங்கும் அறை. இரண்டு தமிழர்கள். ஒரு கானாக்காரன். ஒரு துருக்கிக்காரன் மற்றத் தமிழனோ ஸ்ருட்காட்டில் மாமாவுடன் தங்கி அங்கேயே வேலை செய்கிறான். சோச காசெடுக்க மட்டும் வருவான். கடிதம் வந்தால் இவன் அவனுக்கு அறிவிப்பது வழமை கானாக்காரன் வெள்ளி சனி ஞாயிறு நாட்களில் இருக்கவே மாட்டான். துருக்கிக்காரனை ஒ மாதமாகியும் இவன் இன்னும் காணவேயில்லை. தங்குவதற்கு இடமிருந்தது. அவளை தங்கவைப்பது எப்படி என்று திட்டமிட்டபடியே அவன் நித்திரையானான்.

வியாழன் போனது. வெள்ளி வந்தது. கிறேஸ்லீன் போனாள். வைரவி வந்தாள்.

தன் கையால் அவனுக்கு சமைத்து எடுத்துக் கொண்டு வந்திருந்தாள். சாப்பிடுங்கோவ அவள் கேட்க அவன் தன் அறைக்கு அவளைக் கூட்டிச் சென்றான்.

மணவறையில் திரைமறைவில் முதன்முதலில் அமுதூட்ட வேண்டியவள் அச் சிறு அறைமி அவனுக்கு அமுதூட்டினாள். அவளை அழைத்துக் கொண்டு நகரத்துக்குப் போனா அங்கிருந்து பிராங்பேர்ட் நகரம் போனார்கள். அவனுடன் கைகோர்த்து, அவனுடன் ஒட்டிய பயணம் செய்தது அவளுக்குப் புதிய அனுபவம். அவனுக்கோ அதற்கு முதல் கிறேஸ்லீ கிறேஸ்லீனுக்கு முதல் மொஸ்கோவில் இருக்கும் போது ஈஸ்வரி, தாய்லாந்தில் இருக்கு



போது ஜெயா, இந்தியாவிலிருக்கும் போ ரேணு, கொழும்பில் டெலினா...... அவனுக் உடல் கொதித்தது. அவளுக்கே உள்ளமும் உடலும் இனம்தெரிய ஏதோதோ உணர்வுகளால் பொங்கி அவனருகில் அவனுடன் அவனுடை அணைப்பில் இப்படியே இருந்து விட்ட போதும். பெண் என்பவள் பேதையா?

நான் செய்வது தவறு. அப்பா அம்மா கூ வளர்த்த எல்லாத்துக்குமே எதிரான படிச்சது, பண்பாடு எல்லாத்தையு மறக்கிற மாதிரி..... பிழை! என்னுடை குடும்பம், படிப்பு, தம்பியின் எதிர்கா எல்லாம் இருக்கக் கேவலம்...... அ அறிவு தட்டிக் கேட்டது.

நான் இங்கையிருந்து இப்பிடி போகட்டா?" விருப்பமில்லாமல் தான் அ கேட்டாள். அவன் விடக் கூடாது. அ தன்னை மறிக்க வேண்டும் என்று அவள் உடல் துடித்தது. இப்படியே போய்விட வேண் அறிவு கூறியது.

"இவ்வளவு நேரம் போச்சு. இப்ப போய் பானொவில இருந்து எப்பிடி காம்ப்புக்குப் போவீ அவனுடைய கை அவளை இறுகச் சுற்றிக் கொண்டது. அவளுக்கு மறுக்க விருப்பமில்ல ஆனாலும் அறிவு விடவில்லை. "நான் போக வேணும். பானொவ்வில இருந்து பஸ் போகு நான் போயிடுவன்." அவளுடைய குரலில் தளர்ச்சி தெரிந்தது. ஏக்கம் இருந்தது. ஒரு கு உணர்வு ஒலித்தது.



படிப்பகம்

padippakam


"என்னிலை நம்பிக்கையில்லையா? அறையிலை நாலு கட்டில் இருக்கு. ஏதன் ஒண்டில நீர் படும். நான் வேணுமெண்டால் பக்கத்தில இருக்கிற பாகிஸ்தான்காரன்ர அறையில போய்ப்படுக்கிறன். ஒரு இரவு என்னை நம்பி ஒரே அறையில படுக்கேலாதவ என்னோடை எப்பிடி ஐம்பதறுபது வருசம் குடும்பம் நடத்தப் போறா?" அவனுடைய குரலில் கவலை தெரிந்தது. அவனைக் கவலைப்படுத்தியது அவளுக்கு வருத்தமாக இருந்தது. "அப்பிடி எண்டில்லை." அவளுடைய கை அவனுடைய கைகளை ஆதரவாகத் தடவிக் கொடுத்தது.

அவளைத் தன்னுடலுடன் இறுக்க அணைத்தபடியே அவளுடைய காதில் தன் இதழ்கள் படியும் படியாக "அப்ப நான் கொண்டே உம்மை விட்டிட்டு வாறன்" அவன் குசுகுசுத்தான். அவனுடைய சூடான மூச்சு காது வழியே புகுந்து அவள் உடல் முழுவதும் வெப்ப அலையைப் பரப்ப... "என்னை விட்டிட்டு நீங்கள் திரும்பி வர நேரம் போயிடும். பரவாயில்லை எனக்காக நீங்கள் இரவு நேரம் கஸ்டப்படாதீங்கோ" அவள் குரல் குழைந்தது.

"அப்ப நீர் இங்கை படும். நான் அந்த அறைக்குள்ள வரவே மாட்டன்." சாத்தான் வேதம் ஓதியுதுடன் ஷ்வால்பாக் போக இரண்டு பயணச்சீட்டுகளையும் வாங்கியது.

அறைக்குள் நுழைந்ததும் தன்னுடைய கட்டிலை ஒதுக்கி அவளை அங்கே படுக்கலாம் என்றான். அவள் வெட்கத்துடன் தயங்கினாள். ஏன்? அவன் கேட்க முன்னமே பதிலையும் புரிந்து கொண்டான். "வேறை உடுப்பு இல்லை எண்டோ?"

எத்தனை எலிகளைப் பிடித்த பூனை இது? அவன் தனது சாரம் ஒன்றையும் சட்டையொன்றையும் எடுத்து நீட்ட அவள் வெட்கத்துடன் வாங்கிக் கொண்டாள். "நீர் உடுப்பை மாத்தும் நான் வெளியிலை போய்ப் பாகிஸ்தான்காரனிட்டைப் படுக்க வாறன் எண்டு சொல்லீட்டு வாறன்." அவன் புறப்பட்டான். "தேவையில்லை. நான் உடுப்பு மாத்தினாப் பிறகு வந்து இங்கை படுங்கோ." வைரவியின் குரல் நடுங்கியது.

அறையில் வெளிச்சம் எரிந்தது. வேறு வேறு கட்டிலில் எதிரெதிராக இருந்தபடியே நீண்ட நேரம் கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவனுடைய கண்கள் அவளைத் தலையிலிருந்து கால்வரை மேய்ந்ததை அவள் கவனிக்காமலில்லை. "சாரத்துக்கும் சட்டைக்கும் சிங்களத்தியள் மாதிரி நல்ல வடிவாயிருக்கிறீர்" அவன் கொட்டாவி விட்டபடியே "படுப்பம் விடிய எழும்பவேணும்" என்றான். "வெளிச்சத்துக்கு நித்திரை வராது" அவள் சொல்ல அவன் எழுந்து லைற்றை அணைத்தான். அப்படியே வந்து அவளுடைய கட்டிலில் அவளுக்கு அருகில் இருந்து அவளை அள்ளி அணைத்தான். அவளுடைய வாய்தான் வேண்டாம் வேண்டாம் என்றது. கைகளோ அவனை இறுக இழுத்து அணைத்தன. வேண்டாம் வேண்டாம் என்று கூறிக் கொண்டிருந்த அவள் வாயை அவன் தன் இதழ்களால் இறுகப் பொத்தினான். வைரவி சொர்க்கத்தில் காலடி எடுத்து வைத்தாள். அல்லது அதலபாதாளம் ஒன்றினுள் விழுந்து கொண்டிருந்தாளோ?

வைரவியின் மூளை அலறியது: தவறு தவறு. வைரவியின் அறிவு கூறியது: விலகு விலகு ஆனால் அவனுடைய இதழ் பட்ட அவளுடைய இதழ்களிலிருந்து உடலெங்கும் பாய்ந்த உணர்வலைகள் அவளை மயங்கு மயங்கு என்று கிறங்க வைத்தன.

மூளை உடலிடம் தோற்றது. அறிவு உணர்விடம் அடிமைப்பட்டது.

வைரவி தன்னை இழந்தாள்.

சுவாகிலி, உருது, துருக்கி, அரபு, கிழக்கைரோப்பிய மொழிகள் எல்லாம் கலந்து எழுந்த ஒலி அவளை நித்திரையிலிருந்து உலுப்பி எழுப்பியது. எழ முனைந்த அவளை அவன் இழுத்துத் தன்னுடன் அணைத்துக் கொண்டான். "என்ன அவசரம்? இன்னும் ஒருக்கா?"

ம்ஹூம்...... வைரவி முனகினாள்.


படிப்பகம்

padippakam



"ஏன்? விருப்பமில்லையா?" அங்கிங்கெல்லாம் உலவப்புறப்பட்ட அவன் கைகளைத் தன் கைகளால் அவள் கட்டிப் போட்டாள். "நான் நேற்றுப் போயிருக்க வேணும். நிண்டதாலை தானே இப்படியாய்ப் போச்சு" அவனுடைய உடல் மட்டுமல்ல, குரல் கூடக் குளிர்ந்தே இருந்தது.

"என்னைக் குறை சொல்லுறீர் போலை இருக்கு, நான் கொண்டே விடுறன் எண்டு தானே சொன்னனான். நீர் தான் ஏன் கஸ்டம் எண்டு நிக்கிறன் எண்டனீர்". அவனுடைய உடற்சூடு குரலுக்கும் தொற்றியது.

"நான் கதைக்க எண்டு வந்தனான். நேரம் போச்சுதெண்டு நிண்டா இப்பிடி நடக்கும் எண்டு......"

"நான் பாகிஸ்தான்காரனிட்டைப் போக வெளிக்கிட நீர்தான் நானும் இங்கை நிக்கலாம் எண்டீர் பிறகு லைற் நூத்தால்தான் நித்திரை வரும் எண்டீர். நான் நினைச்சன் நீர் எனக்கு சிக்னல் தாறீர் எண்டு. ஒரு பொம்பிளை சிக்னல் தரேக்கை ஆம்பிளை முன்னுக்கு வராட்டி அவ அவனைப் பற்றி என்ன நினைப்பள் எண்டுதான்......" எல்லாவற்றையுமே வைரவியின் பிழை என்கிறானா அவன்? அவன் பற்களினால் கடித்த இடங்களில் இருந்த இன்பவேதனையை விட இப்போது அவன் சொற்களினால் கடித்த துன்பவேதனையை அவளுக்குத் தாங்க முடியாமல் இருந்தது.

மெல்ல அவன் கைகளையும் காலையும் ஒதுக்கிவிட்டு எழுந்தாள். போய்க் குளித்துவிட்டு உடை மாற்றிக் கொண்டு வந்த போது, தயாராக இருந்த தேனீரையும் புறோச்சனையும் பார்த்த போது அவள் மனம் குதூகலித்தது. அவன் உடலின் சூட்டைப் போலவே வார்த்தைகளும் சூடாக இருந்தாலும் அனது உள்ளம் தனக்காகக் கனிந்திருக்கிறதே என மகிழ்ந்தாள். அவனுடன் ஒட்டிக் கொண்டே புறோச்சனைக் கடித்தபடியே "உங்களுக்கும் சிற் அடிச்சோண்ணை ரிஜிஸ்ட்ரேசனுக்கு ஆயுத்தம் செய்வம். பிறகு ஆறுதலாய் என்ரை அப்பா அம்மாவுக்குக் கடிதம் போடுவம்".

அவன் அவளிடமிருந்து விலகினானா? அல்லது அவளைப் பார்ப்பதற்காகச் சற்று அசைந்தானா? "நான் சொன்னனானெல்லே. நான் வேதம். நீர் இந்து எண்டு"

வைரவி சிதறினாள். "நீங்கள் என்ன சொல்லுறியள்?" அவள் இதயம் சிதறியது.

"நீர் வெளிக்கிடும். பிறகு ரெலிபோனிலை கதைப்பம்"

"உங்களுக்கு என்னிலை காதல் எண்டனியளெல்லே!"

"எண்டு நினைச்சன்"

"கனவிலும் நினைவிலும் என்ரை நினைவு எண்டனியளெல்லே"

"அது ஏதோ படத்திலை ஆரோ கதாநாயகன் சொன்ன வசனம்"

வைரவிக்குள் உள்ளே ஏதோ வெடித்தது போலிருந்தது.

அழுகை, ஆத்திரம், கொதி கோபம், துன்பம் சோகம் என்ற எந்த உணர்வுமே வைரவியை நெருங்கவில்லை! பாதிக்கவில்லை! வெறும் சூனியம் தான் அவளைச் சுற்றியிருந்தது. அவனுடைய நினைவே மிகுந்து பெற்றோரின் நினைவே இல்லாமல் இருந்த அவளுக்குத் திடீரென்று அப்பாவை அம்மாவை தம்பியை ஊரை போராட்டத்தை தமிழீழத்தை நினைவுக்கு வந்தது.

"அப்பா அம்மா சொன்னவை பிள்ளை கவனம் எண்டு." புறப்பட்டாள்............

"நீங்கள் ரெண்டு பேரும் வேலை, பிள்ளைகளுக்கும் பள்ளிக்கூடம் எண்டுறியள். 200 கிலோ மீற்றருக்கு அங்காலை இருக்கிறியள் எண்டுறியள். பிறகேன் கஸ்டப்படுவான். அவ எங்கடை சின்னப் பிள்ளையே கல்யாணம் செய்து வைக்கத் தானே நீங்கள் கூப்பிட்டிருக்கிறியள்.



படிப்பகம்

padippakam


விட்டிட்டுப் போங்கோ. நான் சகல உதவியும் செய்யிறன். நானும் சைவம் தான். அப்பா சொன்னதுக்காகத் தீட்சையும் கேட்டனான். நான் அவவுக்குச் சைவச் சாப்பாடு சொல்லி எடுத்துக் குடுப்பன்." தனது தங்கையைக் கூட்டி வந்த அந்தப் பெண்ணுக்கும் கணவருக்கும் அவன் வேதம் ஓதினான். அவன் கண்கள் அவளை மேய்ந்தன...... வைரவியை விட இவள் அழகாக இருக்கிறாள். பாத்தால் வைரவியிலும் சுகமாக கிறேஸ்லீனையும் விட லேசாக மடக்கலாம். ஓநாய் அடுத்த ஆட்டை அளவு போட்டுக் கொண்டிருந்தது.

ஓடிக் கொண்டிருந்த தொடர்வண்டிக்குள் வைரவி தினக்குறிப்பில் எழுதினாள்.....
நான் இருக்கலாமா? இறக்கலாமா?......
பதிலை அவள் தேடவில்லை. அவளுக்குத் தெரிந்தே இருந்தது.
கோடானுகோடி மதிப்புள்ள வைரத்துக்கு முன் கண்ணாடிக்கு மதிப்பில்லை.
இலட்சியங்கள் நிறைந்த முன்னைய வைரவிக்கு முன்
அவற்றை அலட்சியம் செய்து உடலுணர்வுகளுக்கு ஆளான இன்றைய வைரவிக்கு மதிப்பில்லை. வாழ்க்கையுமில்லை!

(யாரும் வேதனைப்பட வேண்டும் என்பதற்காக இதனை எழுதவில்லை. சிலரது வேதனை தீரவும் பலருக்கு ஒரு போதனையாக அமையவும் உதவும் என்றே இது எழுதப்பட்டது.
தமிழச்சி)

## அதீத சனநாயகம்?

எழுபது குடும்பங்கள் குடியிருக்கும் ஒரு குடியிருப்பைக் (Commune) காரணமாகக் கொண்டு முழு சுவிற்சர்லாந்துமே 1996ம் ஆண்டு தேர்தலுக்குப் போக வேண்டியிருந்தது.

Vellarat என்ற இடத்தில் வசிக்கும் இந்த எழுபது குடும்பங்களும் கன்ரோனிலிருந்து பிரிந்து யூறா கன்ரோனுடன் இணையக் கோரிக்கை விடுத்தன. இக் குடும்பத்தினர் வேலைக்குப் போவது, பிள்ளைகள் படிப்பது, மருத்துவமனைக்குப் போவது போன்ற சகல நாளாந்த அலுவல்களையும் இந்த எழுபது குடும்பத்தினரும் யூறா கன்ரோனிலேயே நடத்திவந்துள்ளனர்.

சுவிற்சர்லாந்தின் அரசியலமைப்பின்படி இப்படி ஒரு மாற்றம் செய்வதற்கு, முதலில் முழு சுவிற்சர்லாந்திலும் ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட்டு சம்மதம் கோரப்பட வேண்டும். அடுத்ததாக, பேர்ண் கன்ரோனில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டுச் சம்மதம் பெறப்பட வேண்டும். பின்னர் வெலாராட் இல் தேர்தல் நடத்தி பேர்ணிலிருந்து பிரியச் சம்மதம் பெறப்பட வேண்டும். இறுதியாக, வெலாராட் தன்னுடன் இணையலாம் என்று யூறா கன்ரோன் சம்மதிப்பதைக் காட்டும் வாக்கெடுப்பொன்று நடத்தப்பட வேண்டும். இப்படியாக சகல வாக்கெடுப்பும் நடக்க மொத்தம் 4.5 மில்லியன் (45 இலட்சம்) சுவிஸ் பிராங் (3.5 மில்லியன் அமெரிக்க டொலர்) செலவாகியது. அதாவது வெலராட்டில் வசிக்கும் ஒருவருக்கு ஆளுக்கு 65,000 பிராங்குகள் முடிந்தன.

"பைத்தியக்காரத்தனம்!" தமிழ்நாதம் சொல்லவில்லை. வெலராட்டின் நகரசபைத்தலைவர் கூறினார். "பேர்ண், யூறா இரண்டு கன்ரோன்களுக்குமிடையே எழுத்து மூலமாக ஒரு ஒப்பந்தத்துக்கு வந்திருந்தால் எவ்வளவு பணம் மிஞ்சியிருக்கும்" என்று வயிற்றெரிச்சல் படுகிறார் இவர்!


படிப்பகம்

padippakam



# ஒரு சோகக்கதை............

கட்டியவளைக் காப்பாற்றக் கடல் கடந்து வந்தானம்மா.
கடல் கடந்து வந்தவனோ காமத்தில் விழுந்தானம்மா
காமத்தில் விழுந்தவனும் காற்றாகிப் போனானம்மா
பெற்றவள் துடிக்கின்றாள் பேதையவள் அழுகின்றாள்
கட்டியவள் துடிக்கின்றாள் தாலியிழந்து தவிக்கின்றாள்
இருபதே வயதுடைய இவள் இரண்டு பிள்ளைக்குத் தாயம்மா
கண்ணுக்குள் மணி போலக் கண்மணிகள் இரண்டம்மா
வெள்ளைப் புடைவை கட்டி வீதியிலே சென்றாளம்மா
வீதியிலே சென்றவளை வேசி என்று சொன்னாரம்மா
வேசி என்று சொன்னவர்கள் வெட்கங்கெட்ட சனங்களம்மா
நீ வாழ்ந்த போது வந்து வாங்கியவர்கள் பல பேரன்றோ
நீயின்று வாழ்விழந்ததனால் வசைபாடுவோர் இவர்களன்றோ
இது சொந்தக் கதையம்மா சோகம் நிறைந்த வாழ்க்கையம்மா
சொந்தங்களும் பந்தங்களும் தூரத்தில் செல்வாரம்மா
வெள்ளைப் புடைவைக்கு வேலியொன்று தேவையன்றோ
மாண்டுபோன மகராசன் மீண்டொருகால் வருவாரோ
மறுமணம் செய்ய விரும்பும் மகாராசாக்கள் இன்றும் உளர்
மானத்தைக் காப்பதற்கு மடிப்பிச்சை தருவோரும் பலருள்ளார்
உலகத்தைக் கண்டு கொள்வாய் உன் நிலைமை தெரிந்து கொள்வாய்
ஊருக்காக வாழாதே உத்தமியே உனக்காக வாழ்ந்திடுவாய்
வேசி என்று சொன்னவர் முன் வெற்றிநடை போட்டிடுவாய்.



பரிஸிலிருந்து............ எஸ்
எச்.

ஒருவர் இறந்தால் அவருக்கான பிதிர்க்கடன்களை எட்டுக்கு வைத்தல், அந்தியேட்டி, ஆட்டத் திவசம் என்று செய்வது நம்மிடையேயுள்ள வழமை. இதே போல, கிரேக்க நாட்டிலும் வழமைகள் இன்று வரை தொடர்ந்து வருகின்றன.

புதைகுழிக்குப் பக்கத்தில் Fanari என்கிற எண்ணெய் விளக்கு ஒன்று எரிய விடப்ப வீட்டில் தயாரிக்கப்பட்ட வெதுப்பி(பாண்) தேவாலயத்துக்கு முதலில் எடுத்துச் செல்லப்ப பூசைநடந்த பின்னர் குருவானவரும் குடும்பத்தவருமாக வெதுப்பியைக் கொண்டு செ புதைகுழியில் படைக்கிறார்கள். 40ம் நாளன்று, உறவினர், நண்பர்கள் அழைக்கப் வெதுப்பியும் மாதுளம்பழமும் உண்பதற்குப் பரிமாறப்படுகிறது.

பல்வேறுபட்ட மக்களுக்கிடையிலும் கூட சில பண்பாட்டு அடிப்படைகள் ஒன்றாகத்த இருக்கின்றன!



படிப்பகம்

padippakam



# 1.1.98ல் இருந்து பல் மருத்துவத்துறையில் நடைமுறைக்கு வந்திருக்கும் சீரமைப்புகள்

மருத்துவத் துறையில் தொடர்ந்து வரும் பல மாற்றங்களும், அதன் விளைவாக விரிவடைந்து வரும் பல்மருத்துவ சேவைகளும் நோயாளியான காப்புறுதி செய்து கொண்டவரைத் தன் தேவையிலும் மேலதிகமான சேவைகளைப் பெற்றுக் கொள்ளவே தூண்டி வந்தது. செலவுகள் அதிகரித்தமையால் காப்புறுதிநிலையங்கள் பணவரட்சியைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்கு வந்தன. நிதி நிலைமையைப் பொறுத்தே செலவும் இருக்க வேண்டும் என்ற கருத்து வலுவேறியது.

ஜேர்மனியில் மக்களின் வாழ்நாள் அதிகரித்து வருவது தெரிந்ததே. (சராசரியாக ஒருவரின் வயது 78 என்று கணிப்பிட்டுள்ளார்கள்.) இந்த நிலையில் ஒவ்வொருவரதும் உடல், பல் மருத்துவ தேவைகள் நிச்சயமாக அதிகரித்துக் கொண்டே போகும் என்பது வெள்ளிடைமலை. மேலும் வளர்ந்து கொண்டே இருக்கும் மருத்துவத் துறையில் மருத்துவர்கள் வழங்கும் சேவைகளும் அதற்கான ஊதியமும் மட்டுமல்லாமல் அச் சேவைகளை வழங்குவதற்குத் தேவையான கருவிகள், வழிமுறைகள் என்பவற்றுக்கான செலவும் அதிகமே. இதன் காரணத்தால் காப்புறுதிநிலையங்கள் மருத்துவர்களின் சேவைக்கு ஏற்ற அளவிலான பணத்தை வழங்குவதில் சிரமங்கள் ஏற்பட்டன.

மேற்படி காரணங்களால் மருத்துவக் காப்புறுதி முழுமையுமாக சீரமைக்கப்பட வேண்டிய தேவை உண்டாகியது. ஜேர்மனியின் மருத்துவக்காப்புறுதிச்சட்டத்தின் சீரமைப்பான இரண்டாவது புதிய சட்டவாக்கம் கடந்த ஜூலை மாதத்தில் நடைமுறைக்கு வந்தது. அதன் விளைவான – பொய்ப்பல், பற்பாலம் போன்ற பற்சிகிச்சைக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த வீதமுறையிலான வழங்கல்கள் (Zuschuesse) நிறுத்தப்பட்டு, நிலையான வழங்கல்களே இனிவரும் காலங்களில் இருக்க வேண்டும் – என்ற கருத்தைத் தொடர்ந்து பல் மருத்துவர்களின் பிரதிநிதிகளையும் மருத்துவக்காப்புறுதி அமைப்புகளின் பிரதிநிதிகளையும் கொண்டதான Bundesausschuss, கடந்த ஒக்டோபர் மாதத்தில் – எவ்வளவு வழங்கப்படலாம் என்று முடிவு செய்துள்ளது. இம் முடிவுகள் எதிர்வரும் 1.1.1998ம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

- ஒரு குறிப்பிட்ட வருமானத்துக்குட்பட்டு வேலை செய்யும் காரணத்தால் AOK, IKK போன்ற மருத்துவக்காப்புறுதி நிலையங்களில் வேலைத்தலத்தால் பதிவுசெய்யப்பட்ட கட்டாய மருத்துவக்காப்புறுதி உடையவர்களுக்கு இந்த மாற்றம் சில நன்மைகளைத் தரும் என்கிறார் காப்புறுதியடிப்படையில் பல்சிகிச்சை செய்யும் மருத்துவர்களின் சம்மேளனத்தின் தலைவரான Dr. Schibort :–
- பல சந்தர்ப்பங்களில் இந்த வழங்கல்கள் வீதமுறையிலான வழங்கல்களை விட அதிகமாக இருக்கும்.

padippakam



- அதனால் காப்புறுதிசெய்துகொண்டோர் தம் கையால் குறைவாகவே செலுத்துவர்.

முன்னைய காலங்களில் மொத்தச் செலவின் 55—60 வீதத்தை காப்புறுதியாளரும் (AOK, IKK) மிகுதியைக் காப்புறுதி செய்துகொண்டோரு (நோயாளி) பொறுப்பெடுக்க வேண்டியிருந்தது. இப்போது நடைமுறைக்கு வந்துள் நிலையான வழங்கல்களின் அடிப்படையில், பல்சிகிச்சையின் ஒவ்வொரு பிரிவுக்கு காப்புறுதியாளர் இவ்வளவு இவ்வளவு வழங்க வேண்டும் என்பது தீர்மானிக்கப்பட்டுள்ளதாற் காப்புறுதிசெய்துகொண்ட ஒருவர் எவ்வளவு தன் கையா செலவழிக்க வேண்டி வரும் என்பது அவரவர் தேவையைப் பொறுத்தே அமையும்.

- அவரவர் தேவை வேறுபடுவதால் நோயாளிக்கு நோயாளி செலவு வித்தியாசப்படும்.
- மாநிலத்துக்கு மாநிலமும், காப்புறுதியாளரிடையேயும் இதுவரையிலும் வேறுபாடுகள் இருந்து வந்துள்ளமை.

மருத்துவருக்கு இவ்வளவு என்று வரையறுக்கப்பட்டாலும் தொழில் நுட்பச் செலவுக வரையறுபடாமை போன்ற காரணங்களால் ஒரு நோயாளிக்கு எவ்வளவு செலவாகலா என்ற கேள்விக்குத் திட்டவட்டமான பதிலை இது வரையிலும் எந்த மருத்துவராலு முன்வைக்க முடியவில்லை.

ஆகவே உங்களுக்கான பல்சிகிச்சை ஒன்றுக்கு எவ்வளவு செலவாகு என்பதை அறிய வேண்டுமானால் உங்கள் பல்மருத்துவரைத் தான் நீங்கள் கேட் வேண்டும்.

ஒரு நோயாளியின் ஆடம்பர தேவைக்கு இன்னொருவரின் காப்புறுதியிலிருந் பணம் செலுத்தப்படுவதைத் தவிர்ப்பது புதிய சட்டத்தின் நோக்கங்களுள் ஒன்று ஆகு ஒருவர் வசதி தேடியோ அல்லது அழகை நாடியோ பற்சிகிச்சை செய்ய விரும்பினா அவர் தனது கையால் அதிகம் செலவழிக்க வேண்டி வரும்.

சில வகையான பற்சிகிச்சைகளுக்குக் கட்டாயகாப்புறுதி எதுவி வழங்கல்களும் செய்யாமல், அந்தந்த நோயாளியே தனது கையாற் செலவழிக் வேண்டியிருந்த முன்னைய நிலைமை இன்று மாறி, அப்படியான சிகிச்சைகளுக்கு கூடக் கட்டாயகாப்புறுதியிலிருந்து வழங்கல்கள் கிடைக்கும் சந்தர்ப்பம் இப்போ உருவாகியுள்ளது. முன்னரெல்லாம் இந்த மாதிரியான சில வசதிகள் தனியார் காப்புறு நிலையங்களிலிருந்து மட்டுமே கிடைக்கக் கூடியதாக இருந்தன.

இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து, பல் சிகிச்சை பெற்று கொள்பவர்களுக்கு அவரவர் மருத்துவரிடமிருந்து மொத்தச் செலவுக்குமா அறவிடுபத்திரம் அனுப்பி வைக்கப்படும். முழுத்தொகையையும் அவர் செலுத்திவிட்( பின்னர் தனது காப்புறுதி நிலையத்திலிருந்து தனக்கு வரவேண்டிய வழங்கலை பெற்றுக் கொள்ளலாம். இந்தப் புதியமுறையால் பல்சிகிச்சைக்கான செலவுக அதிகரிக்கும் என்ற பலரின் கருத்தை மறுக்கிறார் பல்மருத்துவரான ஷிபோர்ற். ஒ நோயாளி தனக்குச் சிகிச்சை செய்த மருத்துவருக்கே நேரடியாகப் பண செலுத்துவதாக இப் புதிய வழங்கல் முறை உள்ளது என்கிறார் அவர். எப்படியா பல்சிகிச்சைக்கு எவ்வளவு செலவாகும் என்பது ஒரு நோயாளிக்குத் தெரியவராத




படிப்பகம்

padippakam


பழைய நிலைமை மாறி இன்றைய புதிய நிலைமையில் ஒருவருக்குத் தன் பற்களைப் பராமரிக்க எவ்வளவு செலவாகும் என்று எழுத்தில் பார்க்கக் கூடியதாக உள்ளமை சுகாதாரஅரசியலில் ஒரு முக்கிய மைற்கல் ஆகும் என்கிறார் ஷிபோர்ற். சிறந்த சிகிச்சைமுறையைப் பாவிக்கும்படி ஒரு நோயாளி தனது பல்மருத்துவரிடம் கூற அதுவே மிகவும் செலவு கூடிய முறையாக அமைந்த பழைய முறையை ஜேர்மனியின் சுகாதாரத் துறையுடன் தொடர்புபட்ட சிந்தனாவாதிகள் பலரும் கண்டித்துவந்திருக்கின்றனர். மிகவும் செலவு கூடிய முறை என்பதால் மட்டும் அது மிகவும் சிறந்த முறையாக இருந்திருக்கும் என்பதில்லை என்றும், பல் மருத்துவச் செலவீனங்கள் பார்த்ததுமே விளங்கக் கூடியதாக (Transparenz) இருக்க வேண்டும் என்றும் அவர்கள் வாதிட்டனர். எதற்கு எவ்வளவு செலவாகும் என்று ஒரு நோயாளிக்குத் தெரியுமானால் அவர் தனது பணவீக்கத்துக்கேற்ற அளவிலான சிகிச்சை முறையை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்பது இவர்களின் வாதம்!

தனது தேவையைத் தானே தீர்மானிக்கும் பொறுப்பை ஒரு நோயாளிக்குக் கொடுத்துவிடுவதுடன் மட்டும் நின்று விடாமல் அந்த நோயாளிக்கும் பொறுப்புணர்ச்சி இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் முன்னரும் இருந்த போனஸ் திட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும். இந்த போனஸ் திட்டத்தின்படி, தனது பற்களைப் பராமரிப்பதில் ஒருவர் சிரத்தை எடுத்துக் கொள்கிறார் என்பதைக் காட்டும் விதத்தில் அவர் பல்மருத்துவரிடம் ஒழுங்காகச் சென்று வந்திருப்பதை நிரூபிப்பாரேயானால் அவருக்கு வழங்கல்கள் மேலும் 10–20 வீதத்தால் அதிகரிக்கப்படும். (இந்த போனஸ் திட்டத்தின்படி ஆண்டொன்றுக்கு இரண்டு தடவைகள் பல் மருத்துவரிடம் போய்வரும் ஒருவருக்கு 20 வீத அதிகரிப்பும், ஆண்டுக்கொருதடவையே போவபருக்கு 10 வீத அதிகரிப்பும் நியதி.)

பல் சிகிச்சை முறையில் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தச் சீரமைப்புகள் மருத்துவகாப்புறுதியின் ஏனைய துறைகளுக்கும் பரவலாம் என்பது பலமான கருத்தாக இருந்தாலும் பரவுமா என்பது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டிய ஒன்றே!



கடுகதி வண்டிகளா...... ப்பு......!

ஜப்பானில் மணித்தியாலத்துக்கு 531கி.மீ. வேகத்தில் தொடர்வண்டியொன்று ஓடிப் புதிய உலகப்பதிவொன்றை ஏற்படுத்தியுள்ளது. ரொக்காய் ஜப்பானிய ரெயில்வேய்ஸ் என்ற நிறுவனத்தினரின் அறிக்கைப்படி ஏனையவற்றைப் போலவே காந்தப் பாதைகளில் இயங்கும். இந்த வண்டியின் 1979ம் ஆண்டுத் தயாரிபபு அந்த ஆண்டில் மணித்தியாலத்துக்கு 517 கி.மீ ஓடி ஏற்படுத்திய முன்னைய உலகப்பதிவை இப்போதைய தயாரிப்பு முறியடித்துள்ளது. இம்முறை வண்டியில் எழுவர் இருந்து 18.4 கி.மீ. பயணம் செய்துள்ளனர். தொடரவிருக்கும் பரிசோதனைகளில் 550 கி.மீ. வேகத்தை எட்ட இருக்கிறார்களாம்.

ஆனாலும் பயணிகளுக்கான சாதாரண தொடர்வண்டிகளைப் பொறுத்தவரையில் பிரெஞ்சுக்காரரே முன்னணியில் நிற்கிறார்கள். அவர்களுடைய TGV வண்டி ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே மணித்தியாலத்துக்கு 515.3 கி.மீ. ஐ எட்டிவிட்டது.


படிப்பகம்

padippakam



## பற்சிகிச்சை தொடர்பாகத் தெரிந்துகொள்ள வேண்டியவை:

- பற்சிகிச்சைக்கான மருத்துவரின் ஊதியம் நோயாளியால் நேரடியாக மருத்துவருக்கே செலுத்தப்பட வேண்டும். பின்னர் காப்புறுதிநிலையத்துடன் தொடர்பு கொண்டு தனக்கான வழங்கலைப் பெற்றுக் கொள்ளலாம்.
- பற்களின் பராமரிப்புக்குக் கட்டாயம் தேவை என்று கருதப்படும் சிகிச்சைகளுக்கே வழங்கல்கள் கிடைக்கும். மேலதிக செலவுகளை நோயாளியே முற்று முழுதாக பொறுப்பெடுக்க வேண்டும்.
- கட்டாய காப்புறுதியுடைய ஒரு நோயாளியின் நன்மையைக் கருதி, 1999ம் ஆண்டு முடியும் வரையில் காப்புறுதி நோயாளி ஒருவருக்கான பல்சிகிச்சைச் செலவு தனிப்பட்ட ஒரு நோயாளிக்கான பல்மருத்துவச் செலவிலும் 1.7 மடங்கிலும் அதிகரிக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது.
- 1,736 மார்க்குகளை வரிசெலுத்து முன்னரான மாதவருமானமாகக் கொண்ட தனியொருவருக்கு இரட்டிப்பு நிலையான வழங்கல்கள் கிடைக்கும்.
- சாதாரண பல்சிகிச்சைகளுக்கு நோயாளி தனது கையால் செலவழிக்க வேண்டி வராது.

இனிவரப்போகும் காலங்களுக்கான பல்சிகிச்சையையொட்டி Betriebskrankenkass முன்வைக்கும் சில கருத்துகள் பின்வருமாறு:

1. பற்சிகிச்சை செய்து கொள்ளு முன்னர் இரண்டு மூன்று பல் மருத்துவர்களிடம் எவ்வளவு செலவாகலாம் என்ற விலைப்பட்டியலை (இலவசமாகப் பெற்று) (Kostenlose Heil un Kostenplaene) உங்கள் காப்புறுதியாளரிடம் கொடுங்கள்.
2. பல்மருத்துவரிடம் ஆண்டொன்றுக்கு ஒரு தடவையாவது சிகிச்சை பெறுவதுடன் நின்று விடாமல் அதைப் பதிந்து கொள்ளுங்கள். (Bonus Heft )
3. பல்மருத்துவ தொழில்நுட்பவியலில் பாரிய செலவு வேறுபாடுகள் உள்ளதனால், உங்கள் மருத்துவரிடமோ அல்லது காப்புறுதிநிலையத்திடமோ மலிந்த தொழில்நிலையம் ஒன்றை விசாரிக்கலாம்.
4. இரண்டு வருடகாலத்துக்காவது பல்மருத்துவரின் பணஅறவிடுபத்திரத்தையும் (Rechnung நீங்கள் பணம் கட்டியதற்கான பற்றுச் சீட்டையும் சேமித்து வைத்திருங்கள். இடம் பெற்ற பற்சிகிச்சையில் ஏதாவது குறைபாடுகள் ஏற்பட்டிருபபதாகப் பின்னர் தெரியவந்தால் குறைநிவர்த்திக்கு இது உதவும்.
5. காப்புறுதிசெய்யதுகொண்டவர்களுள் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதிக்குப் பின்ன பிறந்தவர்களுக்கு பொய்ப்பல், பற்பாலம் போன்ற சிகிச்சைகளுக்குக் காப்புறுதி எந்த வி வழங்கல்களையும் வழங்காது. – விபத்து அல்லது கடும் நோயால் பற்கள் பாதிக்கப்பட்டிருக்குமானால் விதிவிலக்குகள் வழங்கப்படலாம்.

பிராங்பேர்ட் தமிழ்மன்றத்தின் வெளியீடான தமிழ்நாதத்தின் இந்தப் பதிப்பு மன்றப் பத்திரிகைக் குழுவினராற் தொகுக்கப்பட்டுக் கணணிப்பதிப்பகத்தினரால் அச்சிடப்பட்டுத் திருவள்ளுவர் ஆண்டு கும்பம் மாதம் 1ம் திகதி (1998ம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் திகதி) வெளியிடப்பட்டது



படிப்பகம்


padippakam


சகல வைபவங்களையும் படம்பிடிக்கவும்
மணவறை, சோடனை, சாப்பாடு, போன்ற
சகல ஒழுங்குகளுக்கும்

# YJ

வீடியோ மூவீஸ்





பிராங்பேர்ட்

யோகேஸ்வரன்
069-544267
0172-9691736

ஜெயேந்திரா
069-781140
0172-9333448


படிப்பகம்

padippakam



9ஆவது ஆண்டுவிழாவின் போது நடைபெற்ற
கலைநிகழ்ச்சிகளில் திலகநர்த்தனாலயம்
நாட்டிய தாரகைகளும்
கீழே மெல்லிசைநடனம் ஆடிய
தமிழ்மன்றச் சிறுமிகளையும் இங்கே காண்கிறீர்கள்.



படிப்பகம்